
ஐந்தாண்டு அபிவிருத்தி

கோயம்புத்தூர் ஜில்லா



ஐந்தாண்டு அபிவிருத்தி

கோயம்புத்தூர் ஜில்லா

சென்னை
செய்தி இலாகாவின் வெளியீடு
1951

விலை, அணா

இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ள ஜில்லாப் படத்தைத் தயாரித்து, அச்சடித்தும் கொடுத்தவர், சென்னை சர்க்கார் சர்வே இலாகாவினர் ஆவர். படத்தின் அளவு மிகப் பெரியதாய் இல்லாமையால், வெகு முக்கியமான குறிப்புகளை மட்டுமே அதில் காட்ட முடிந்தது.

இந்திய சர்க்கார் புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவினர் (Archæological Department) புராதனக்கலைகள் சம்பந்தமான பல அழகிய படங்களை வெளியிட அனுமதி தந்துதவினர். இவற்றுள் பெரும்பாலானவற்றை கடைசி அட்டைப்படத்தில் காணலாம்.

ஸ்ரீ எம். கே. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அளித்த சில படங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

படங்கள்

மேல் அட்டை :—

முதல் பக்கம் :

பெரியது—

பஞ்சாலை உள்தோற்றம்.

சிறியது—

பவானி சாகர்.

கடைசி அட்டை:

தஞ்சாவூர் கோயில், திருச்சி மலைக்கோட்டை, உதகமண்டலம் காட்சி, கோடைக்கானல் ஏரி, ராமேஸ்வரம் கோயில் உட்புறக் கலைக் கூடம், புகளூர்ப் பாலம், மேட்டூர் நீர்த் தேக்கம், பாபநாசம் மின்சார நிலையம், திருவரங்கம் கோயில் சிற்பம், மாமல்லபுரம் சிற்பம், குற்றால நீர்வீழ்ச்சி.



மேன்மை தங்கிய சென்னை கவர்னர்
ஸ்ரீ ஸர் கிருஷ்ணகுமார் ஸின்ஹ்ஜி பவ்ஸின்ஹ்ஜி,
கே. ஸி. எஸ். ஐ., பவ்நகர் மஹாராஜா.



கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
சுகாதார மந்திரி



கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம்
மராமத்து மந்திரி



கனம் ஸ்ரீ ஜே. எல். பி. ரோச் விக்டோரியா
உணவு மந்திரி



கனம் ஸ்ரீ பி. கோபால ரெட்டி
நிதி மந்திரி



கனம் ஸ்ரீ வி. பெருமாள்சாமி ரெட்டி
கைத்தொழில் மந்திரி



கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா
முதல் மந்திரி



கனம் ஸ்ரீ கே. மாதவ மேனன்
கல்வி மந்திரி



கனம் ஸ்ரீ பி. பரமேஸ்வரன்
கிராம அபிவிருத்தி மந்திரி




கனம் ஸ்ரீ ஹெச். சிதாராம ரெட்டி
ரெவின்யூ மந்திரி



கனம் ஸ்ரீ கே. சந்திர மௌலி
ஸ்தல ஸ்தாபன மந்திரி



கனம் ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி
விவசாய மந்திரி



கனம் டாக்டர் டி எஸ்.எஸ். ராஜன் அவ சுகாதார மந்திரி பதவியை 1951-ம்ஷு டெம்பர்மீ 17உ ராஜிநாமா செய்த ட கனம் ஸ்ரீ களா வெங்கடராவ் செப்டெம்பர் 26உயிலிருந்து அப்பதவியில் நியமிக்கப்பட்டு கிருர்.

முன்னுரை

பொதுஜனப் பிரதிநிதிகள் சென்னை ராஜ்ய ஆட்சி முறையை மேற்கொண்டு இப்போது ஐந்தாண்டு களுக்கு மேலாகிறது. நமது தேசத்தின் சரித்திரத்திலேயே இந்த ஐந்து வருஷ காலமும் ஒரு சோதனைக் கட்டமாகும். முற் கால ஆட்சி முறையின் சின்னங்கள், தற்கால மாறுதல்கள் காரணமாகத் தோன்றும் இன்னல்கள், வருங்கால நல்வாழ்வுக் குரிய பலமான அஸ்திவாரம் கோலவேண்டிய கடமை ஆகிய எல்லாவற்றையும், அரசாங்கம் ஏக காலத்தில் கவனிக்க வேண் டியதாயிற்று.

இத்தகைய சோதனைகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்குமிடையே, சர்க்கார் தங்கள் ஒரே லட்சியத்தை மறக்காமல் போற்றி வந்துள்ளனர். அதாவது, "எம் கடன் மக்களுக்குப் பணிசெய்து கிடப்பதே" என்னும் உயர்ந்த கொள்கையை அவர்கள் கடைப் பிடித்து வருகிறார்கள். மக்களுடைய நன்மையைக் கோரியும், அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றவும்தான், ஜனப் பிரதி நிதிகள் அரசாங்க பதவியை வகித்து வருகின்றனர்.

எத்தனையோ காலமாக நாம் கண்டு கொண்டிருந்த இலட்சியக் கனவுகள், கடந்த ஐந்தாண்டுகளில் நனவாகி இருக் கின்றன. மதுவிலக்கு, ஜமீன்முறை நீக்கம், நீதி—நிர்வாகப் பிரிவினை ஆகிய சீர்திருத்தங்கள், நம்முடைய எதிர்கால சந்ததி யாருக்கு மிகச் சிறந்த நற்பயன் அளிப்பதோடு, சமூக அமைப்பி லேயே ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மூல சாதனக்குறைவினால் ஏற்பட்ட முடக்கம், மற்றும் எத்தனையோ பெரிய சங்கடங்களுக்கும் இடையே, அநேக அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன. இத்திட்டங்கள் கஷ்டமான உணவு நிலைமையை ஓரளவு சமாளிக்க உதவுவதோடு, பொதுவாகப் பொருளாதாரத் துறையில் ஸ்திர மான நிலையையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த காரணமா யிருக்கின்றன.

பிரிட்டிஷார் தங்கள் ஆட்சி காலம் பூராவும் நீர்ப்பாசனத்துக்காகச் செலவு செய்த தொகைக்கு மேலேயே, நாம் கடந்த ஐந்தாண்டுகளில், அதன் பொருட்டு இந்த ராஜ்யத்தில் செலவிட்டிருக்கிறோம். 1945–46-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த நீர்ப்பாசனச் செலவு, 1951–52-ம் வருஷத்தில், சர்க்காரின் வரவு செலவுத் திட்ட மதிப்பின்படி, 10 கோடி ரூபாய்க்கு மேலாகியுள்ளது. இப்போது நமது ராஜ்யத்தில் மொத்தம் 101 லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது.

தவிர, நமது சென்னை ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி இருமடங்கு அதிகமாகியுள்ளது. மின்சார அபிவிருத்திக்கான ஐந்து வருஷத் திட்டத்தில் மூன்றில் இரு பங்கு பூர்த்தியாய் விட்டது. இதன் மூலம் சுமார் 1,600 கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளையாகிறது. கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுப்பதில் இந்தியா முழுவதிலும் சென்னை ராஜ்யமே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. 1945–46-ம் வருஷத்தில் மின்சாரத் துறையில் அரை கோடி ரூபாய்க்குக் கொஞ்சம் அதிகமாக மட்டும் சென்னை அரசாங்கத்தார் செலவிட்டனர். ஆனால், 1951–52-ம் ஆண்டிலோ, பட்ஜெட் மதிப்பின் பிரகாரம், ஒன்பது கோடி ரூபாய்க்குமேல் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, ஐந்தாண்டுகளில் நீர்ப்பாசனத் துறையில் ஏறக்குறைய பத்து மடங்கும், மின்சாரத் துறையில் இருபது மடங்கும் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது விளங்கும்.

இத்தனை சாதனைகளுக்கும் பொது ஜனங்களின் பூரண ஒத்துழைப்பே காரணமாயிருந்தது. சர்க்காருடன் மக்கள் மனமுவந்து ஒத்துழைத்ததால்தான், அநேக காரியங்களை நிறைவேற்றுவது சாத்தியமாயிற்று. ஆகவே, இவற்றை எல்லாம் சாதித்த பெருமை, நிச்சயமாக இந்த ராஜ்ய மக்களையே சார்ந்ததாகும். அதாவது பொது ஜனங்களாகிய உங்களுக்கே அப்பெருமை உரியதாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பட்ட க்ஷேமாபிவிருத்திகளை விளக்கும் வெளியீடுகளில், இப்புத்தகம் ஒன்றாகும். உங்கள் சர்க்கார் என்னென்ன செய்தார்கள் என்பதை இதன் மூலம் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். இதை அறிந்து கொள்ளவேண்டிய உரிமையும், இதுபற்றித் தீர்ப்பளிக்கும் பொறுப்பும் உங்களுக்கே உண்டு.

பி. எஸ். குமாரசாமி ராஜா

அறிமுகம்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே

தென் இந்திய மான்செஸ்டர் என்று கோயம்புத்தூரைக் கூறுவதுண்டு. காரணமில்லாமலில்லை. இந்தியாவிலேயே இங்குதான் அதிகமான பஞ்சாலைகள் இருக்கின்றன. ஜில்லா முழுதிலும் பல ஜின்னிங்பாக்டரிகள் இருப்பதுடன் கோயம்புத்தூர் நகரில் 20 நூல்நூற்கும் மில்களும், 6 நெசவு மில்களும் (நூல் நூற்பதுடன்) வேலை செய்கின்றன. மேற்கே நீலகிரி, தலமலை, வெள்ளிங்கிரி மலைகளும், வடக்கே ஹாஸனூர், பர்கூர், சுக்கரை, புனச்சி முதலிய குன்றுகளும், தெற்கே ஆனைமலை, பழனி மலைகளும் கிழக்கே காவிரி நதியும் இந்த ஜில்லாவின் எல்லைகளாய் அமைந்திருக்கின்றன. கொள்ளேகாலம், பவானி, கோபிசெட்டிபாளையம் இம்மூன்று தாலூகாக்களும் மைசூர் பீடபூமியை ஒட்டிச் சற்று உயர்ந்த பிரதேசமாகவும், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டைத் தாலூகாக்கள் ஆனைமலையைச் சேர்ந்த பிரதேசமாகவும், இதர தாலூகாக்களான கோயம்புத்தூர், பல்லடம், தாராபுரம்,

அவிநாசி, ஈரோடு முதலியவை சமவெளியிலும் உள்ளன.

கோயம்புத்தூர் ஜில்லாவின் நிலங்களைச் செழிப்புறச் செய்ய அதன் வழியே காவிரி, பவானி, அமராவதி, நொய்யில் முதலிய நதிகள் ஓடுகின்றன. அத்துடன் இந்த ஜில்லாவில் ஏராளமான கிணற்றுப்பாசன நிலங்களும் இருக்கின்றன. நிலங்கள் நல்ல செழிப்புள்ளவை.

கோயம்புத்தூர் ஜில்லா 7121 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. அநேகமாய் முற்றிலும் ரயத்துவாரி பிரதேசந்தான். 1951-ம் வருஷம் ஜனசங்கியைப் பிரகாரம் இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 32,94,849. இதில் ஆண்கள் 16,56,181 ; பெண்கள் 16,38,668. 1941-ம் வருஷக் கணக்குப்படி இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 28,09,648. 10 வருஷங்களில் 4,85,201 அதிகரித்திருக்கிறது. இங்கு கொள்ளேகாலம், பவானி, கோபிசெட்டிபாளையம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர், பல்லடம், தாராபுரம், ஈரோடு, அவிநாசி, உடுமலைப்பேட்டை என 10 தாலூகாக்களும் அதில் 1,150 கிராமங்களும் இருக்கின்றன.

சென்னை ராஜ்யத்தின் விவசாய ஆராய்ச்சி முக்கிய ஸ்தாபனமும் விவசாயக் கல்லூரியும் காட்டிலாகா பயிற்சிக் கல்லூரியும் கோயம்புத்தூரில் தானிருக்கின்றன. தென் இந்தியாவிலேயே அதிகமான சிமின்டு உற்பத்தி செய்யும் மதுக்கரை சிமின்டு தொழிற்சாலை கோயம்புத்தூரிலிருந்து 7 மைல் தூரத்தில் உள்ளது. கோயம்புத்தூர் ஜில்லா பொதுவாகவே கைத்தொழிலில் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது.

கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு க்ஷேத்திரப்பெருமையளிக்கும் வகையில் பேரூர் தேவாலயம் அமைந்திருக்கிறது. கோயிலும் மிக அழகாய்க் கட்டப்பட்டுள்ளது. அங்குள்ள நடராஜ மூர்த்தியின் தரிசனமும் மிகச் சிறப்பு வாய்ந்தது.

இந்த ஜில்லாவுக்குச் சிறப்பூட்டும் பல அம்சங்களில் கொள்ளேகாலத்திலுள்ள சர்க்கார் பட்டு உற்பத்தியும், ஒன்று. இந்தக் கைத்தொழில் மிகவும் துரிதமாய் அபிவிருத்தியடைந்து வருகிறது.

நாட்டின் க்ஷேம நலனுக்கு முக்கியமான நீர்ப்பாசன முன்னேற்றத் துறையில் கோயம்புத்தூர் ஜில்லாவில் தமிழ் நாட்டின் பெரிய நீர்த் தேக்கத்திட்டமொன்று உருவாகிறது. அது தான் பவானி சாகர். விஞ்ஞான ரீதியில் மண்ணால் அணைகட்டும் வேலை தமிழ் நாட்டிலேயே இது தான் முதல் தடவையாகச் செய்யப்படுகிறது. பவானிக் கரையில் கிடைக்கும் ஒரு வகை மண் இந்த மண் அணை வேலைக்கு மிகவும் ஏற்றதாயிருக்கிறதென எஞ்சினீயரிங் தொழில் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நீர்த் தேக்க வேலை முடிவடைந்ததும் கோயம்புத்தூர் ஜில்லாவில் 2,07,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெற்று மிகச் செழிப்புற்று விளங்கும்.

கோயம்புத்தூர் ஜில்லாவின் கைத்தொழில் அபிவிருத்திக்குப் பெருமையளிக்கும் அம்சம் மற்றொன்றுண்டு. ராஜ்யத்திலேயே சென்னைநகருக்கு அடுத்தபடியாக சினிமாப்படம் பிடிக்கும் தொழிலில் கோயம்புத்தூர்தான் முன் வந்தது. அங்குள்ள படம் பிடிக்கும் ஸ்டுடியோக்களில் பல பேசும்படங்கள் பிடித்திருக்கிறார்கள். படம்பிடிப்பிற்குத் தேவையான இயற்கைக் காட்சிகள் இங்கு ஏராளமாயுள்ளன. கைத்தொழில், விவசாயம் முதலியவற்றிற்கு வேண்டிய மின்சாரம் இந்த ஜில்லாவுக்கு பைக்காரா, மேட்டூர் இவ்விரண்டு உற்பத்தி சாலைகளிலுமிருந்து கிடைக்கிறது.

நிலவளம்

விவசாயம், கால்நடைகள் ஆகியவற்றின் அபிவிருத்தியை நவீன விஞ்ஞான முறையில் அமைத்திட அரசாங்கம் முயலும்.

—இந்திய அரசியல் அமைப்பு ஷாத்து—48

ஒரு நாட்டின் செல்வநிலை உயர்வடைய விவசாயத்திலும் உத்தமமான மார்க்கம் ஒன்றுமில்லை. இத்தொழிலை விஞ்ஞான ரீதியில் தகுந்த நவீன சாதனங்களைக் கொண்டு நடத்திஞல் நாட்டுக்கு மகத்தான லாபமுண்டு. இம் முறையை அனுஷ்டித்து மேல் நாடுகள் தங்கள் செல்வத்தைப் பெருக்கிவரும்பொழுது நம் பாரத தேசம் மட்டும் உணவு நிலையிலுங்கூட பற்ருக்குறையாக இருந்து கஷ்டப்படுகிறது.

இந் நாட்டில் என்ன இல்லை? வளமுள்ள நிலமில்லையா? வானளிக்கும் நீரையூட்ட வண்ணமுத நதிகளில்லையா? அல்லது இவைகளை நன்கு பயன்படுத்தி வகைபுரிய மக்களில்லையா? எல்லாம் இருக்கிறது. ஆனுல் சமீப காலம் வரை எதையும் செய்யச் சுதந்திரமில்லாதிருந்தது. அடிமை நாட்டில் எந்தத் துறையிலும் மந்த நிலைதான்

நிலவி வந்தது. சுதந்திரம் கிடைத்த பின், மக்கள் ஆட்சியில், விவசாயத்துக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப்பட்டு வருகிறது.

உழுதுண்டு வாழ்வோம்

நாட்டின் உணவுதானிய உற்பத்தியைப் பெருக்கி விரைவில் உணவு தானியத்தில் சுயநிறைவுள்ளதாய் ஆக்கிவிட வேண்டுமென்பதுதான் சர்க்கார் நோக்கம். இந்தக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு இந்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் தீவிர உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். 1949-ம் வருஷம் ஆரம்பத்தில் இந்திய பிரதம மந்திரி, உணவு தானிய சுயநிறைவுத் திட்டமொன்றைப் பிரகடனம் செய்தார். அது ஒரு மூன்று வருடத் திட்டம். அதாவது 1952 மார்ச்சு 31-ம் தேதி நம் தேசம் உணவு தானியம் சம்பந்தப்பட்டவரையில் சுயதேவை பூர்த்தியானதாய் விளங்கவேண்டும் என்பது திட்டத்தின் இலட்சியம்.

ஏற்கெனவே சென்னை ராஜ்யத்தில் சென்ற எட்டு வருஷத்துக்கு முன்னிருந்து அதிக உணவு உற்பத்தித் திட்டம் ஒன்று நடந்து வந்தது. அத்துடன் இந்த சுயநிறைவுத் திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. இவைகளின் கீழ் மகசூல் அதிகரிப்பு, விஸ்தீரணப் பெருக்கம் ஆகிய இரண்டுமுறை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

முதலாவதான மகசூல் அதிகரிப்பு வேலையில் ஏற்கெனவே சாகுபடியாகும் நிலத்தில் ஒரு ஏக்கரின் சராசரி வெள்ளாமையை அதிகப்படுத்துவதாகும். இதற்குப் போதுமான தண்ணீர் வசதிகள் செய்தல், உரம், நல்ல வித்துக்கள் முதலியன விநியோகம் செய்தல், அவைகளையும் மற்றும் தேவையான விவசாயக் கருவிகளையும் வாங்க விவசாயிகளுக்குப் பண உதவி செய்தல் முதலிய அலுவல்களை சர்க்கார் மிகவும் கவனமாய்க் கண்காணிக்கின்றனர்.

சென்னை ராஜ்யத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்ட ஜமீன்தாரி பிரதேசங்களிலுள்ள குளங்களை செப்பனிடுகிற

வேலை மிகத் துரிதமாய் நடைபெறுகிறது. 400 குளங்களுக்கு மேல் பழுது பார்க்கப்பட்டுள்ளன. 2,000 குளங்களில் மராமத்து வேலை நடந்துகொண்டிருக்கிறது. குளங்கள் இல்லாத விடங்களில் கிணறுகள் வெட்டி தண்ணீர் இறைத்து சாகுபடி செய்ய வசதி செய்கிருர்கள். புதுக் கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்கு சர்க்கார் மானியங் கொடுக்கின்றனர். அந்தக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கப் பெட்ரோல் பம்புகள் ஆயில் என்ஜின் பம்புகள், மின்சார பம்புகள் முதலியன உபயோகிக்கிருர்கள். ராஜ்யத்தில் மொத்தம் 7,000 பம்புகள்வரை வாங்க சர்க்கார் உதவி செய்திருக்கிருர்கள்.

அமோனியம் சல்பேட், சூப்பர்பாஸ்பேட் ஆகிய ரஸாயன உரங்களை விவசாயிகளுக்கு சர்க்கார் ஏராளமாய் விநியோகிக்கின்றனர். 1950 ஜனவரி முதல் 1951 ஜனவரி முடிய சென்னை ராஜ்யத்தில் சுமார் ஒரு லட்சம் டன் உரம் விநியோகித்திருக்கிருர்கள். இதனுல் 20 சதவிகிதம் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. தழை உரங்களையும் குப்பை உரங்களையும் உற்பத்திசெய்யவும் உபயோகிக்கவும் விவசாயிகள் பெரிதும் ஊக்குவிக்கப்படுகிருர்கள்.

சாகுபடி நில விஸ்தீரணத் திட்டத்தின்கீழ் தரிசாய்க் கிடக்கும் நிலங்களைச் சீர்திருத்திச் செப்பனிட சர்க்கார் டிராக்டர்களைக் குறைந்த வாடகைக்குக் கொடுக்கிருர்கள். 320 டிராக்டர்கள்வரை சர்க்காரிடமிருக்கின்றன. மாஜி ராணுவத்தினர்களுக்கும், நிலமில்லா ஏழைகளுக்கும் குடியிருப்புத் திட்டங்கள் வகுத்து இந்த அபிவிருத்தி செய்யப்படுகிறது.



ஒவ்வொரு போக சாகுபடியிலும் ஒரு ஏக்கரின் வெள்ளாமையை அதிக பட்ச அளவுக்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பிரதேச, ஜில்லா, தாலூகா வாரியாக பரிசுகள் வழங்க சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இந்தமுறை விவசாயிகளை நன்கு ஊக்கத்துடன் வேலை செய்யத்தூண்டுகிறது.

இந்த அதிக உற்பத்தித் திட்டங்கள்மூலம் 1949–50-ல் சென்னை ராஜ்யத்தில் 26 லட்சம் ஏக்கருக்குமேல் புதிதாய் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனால் 98,800 டன் அதிக உணவு தானியம் கிடைத்திருக்கிறது. இந்த அதிக உற்பத்தி இன்னும் அதிகமாகி இருக்கும். ஆனால், மனிதன் எவ்வளவுதான் முயற்சி செய்தபோதிலும் அதன் பலா பலனை நிச்சயிப்பது இயற்கையின் சக்திக்குள் ளன்றோ இருக்கிறது. நான்கு வருஷமாய் பருவமழை சரிவரப் பெய்யவில்லை என்றால் எதிர்பார்க்கும் வெள்ளாமை எப்படிக் கிடைக்கும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். உணவு உற்பத்தியில் மக்கள் சர்க்கார் இத்தனை ஊக்கம் காட்டாவிட்டால் நிலைமை இப்பொழுதுள்ளதை விட மிக மோசமாய்ப் போயிருக்கும்.

உணவுதானிய கட்டுப்பாடும் பங்கீடும்

சென்னை ராஜ்யத்தில் மக்கள் சர்க்கார் 1946-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30-ம் தேதி பிற்பகலில் பதவியேற்றனர். அது ஒரு குறிப்பிடத்தக்க காலமாகும். அப்பொழுதுதான் இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்தது. யுத்த கால குழப்ப நிலைமை உச்ச நிலையை அடைந்திருந்த காலம். மக்களுக்குத் தேவையான பொருள்கள் கிடையாது. கிடைத்தாலும் ஒன்றுக்குப் பத்தாக விலைகொடுக்க வேண்டும். இதே நிலைதான் உணவுப்பொருள்களுக்கும் இருந்தது. நம் நாட்டில் போதுமான உற்பத்தி கிடையாது. வெளி நாடுகளிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதி வசதிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையானது பொதுஜன சர்க்காருக்கு ஒரு பெரும்

பிரச்னையாகவிருந்தது. உணவு தானியங்களின் போக்கு வரத்தையும், விலைகளையும் கட்டுப்படுத்தவேண்டியது இன்றியமையாததாய் ஏற்பட்டது. பொது மக்களின் நன்மையை முன்னிட்டு இதைச்செய்ய சர்க்கார் சிறிதும் தயங்கவில்லை. எல்லோருக்கும் சமமாக தானியம் கிடைக்கும்படி செய்வதற்காகப் பங்கீடு முறையையும் அமுலுக்குக் கொண்டுவந்தனர். உபரியாயுள்ள தானியங்களைக் கொள் முதல் செய்து ராஜ்ய சர்க்கார் தங்கள் களஞ்சியங்களில் சேமித்து வைத்தனர். இந்திய சர்க்கார் வெளிநாடுகளிலிருந்து சாத்தியமான அளவுக்குத் தானியங்களை இறக்குமதி செய்தனர். இந்த இறக்குமதி தானியங்களை ஒவ்வொரு ராஜ்யத்தின் தேவையையும் கவனித்து விநியோகித்தனர். கொள்முதல் செய்யப்பட்ட தானியம், இந்திய சாக்கார் அளிக்கும் கோட்டா இவற்றைக்கொண்டு நம் சர்க்கார் பங்கீடு முறையை நகரங்களில் திறம்பட நடத்தி வருகிறார்கள். கிராமங்களில் இப்போது பங்கீடு முறையை ரத்து செய்திருக்கின்றனர்.

ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு ஜில்லாவுக்கும் அங்குள்ள கொள்முதல் நிலைமையை அனுசரித்து சர்க்கார் கொள் முதல் செய்யவேண்டிய தானிய அளவை நிர்ணயிக்கிறார்கள். இவ்வாறு சர்க்கார் கொள்முதல் ஏற்பாட்டால், அதிகப்படி உற்பத்தியுள்ள ஜில்லாக்களிலிருந்து குறைவாகவுள்ள ஜில்லாக்களுக்குப் பங்கீடு செய்து உணவு தானியம் விநியோகிக்கப்படுகிறது.

கோவை விவசாய நிலைமை

கோயம்புத்தூர் ஜில்லாவில் 45,51,876 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இதில் 14,43,347 ஏக்கர் காடுகள். 7,41,752 ஏக்கர் தரிசாய்க் கிடக்கின்றன. 17,88,843 ஏக்கர் சாகுபடியிலிருக்கின்றன. சாகுபடியாகும் விஸ்தீரணத்தில் 5,36,787 ஏக்கர் நன்செய்; மற்றவை புன்செய்.

இந்த ஜில்லாவின் முக்கிய நீர் நிலைகள் கிணறுகள்தான். நீர்ப்பாசன வசதியுள்ள சுமார் $5\frac{1}{2}$ லட்சம் ஏக்கரில் 4 லட்

சத்திற்குமேல் கிணற்றுப் பாசனங்கள். பாக்கியுள்ள நிலங்கள் அமராவதி, நொய்யில், பவானி முதலிய நதிகளால் போஷிக்கப்படும் குளப்பாசனத்திலுள்ளவையாகும்.

இந்த ஜில்லாவின் வருஷ சராசரி மழை 27·4 அங்குலம். தென்மேற்கு பருவ மழை 7·9" ; வடகிழக்கு பருவ மழை 12·9"; கோடை மழை 6·6." சென்ற நான்கு ஆண்டுகளாய் இந்த மழைகள் சரியானகாலத்தில் பெய்யாததால் நிலங்களில் விளைச்சல் மிகவும் குறைந்து போயிற்று.

லாபகரமான முயற்சி

ஆனால் சர்க்காரின் அதிக உணவு உற்பத்தித் திட்டமும் சுயதேவை பூர்த்தித் திட்டமும் நன்கு வேலை செய்ததால் தான் நிலைமை இத்துடனாவது நின்றது. நீர் நிலைகள் மராமத்து வேலைகள், உரம் விநியோகம் இந்த உதவிகள் எல்லாம் செய்தது போக நன்செய்களில் நாற்று நடுவதிலும் நல்ல யோசனைகள் கூறப்பட்டுள்ளன. ஒரு ஏக்கர் நிலத்தின் நடுகைக்கு 5 சென்ட் நிலத்தில் 100 பவுண்டு நெல் விதைகளை விதைத்து விவசாயிகள் நாற்று தயாரித்துவந்தார்கள். அப்படிச் செய்வது வீண் விரயமென்று விவசாய இலாக்கா அதிகாரிகள் கருதினார்கள். 35 பவுண்டு விதைகளை 10 சென்ட் நிலத்தில் விதைத்தால் அந்த நாற்று தாராளமாய் ஒரு ஏக்கர் நிலத்துக்குப் போதுமென்று அறிவித்தார்கள். விவசாயிகள் இந்த முறையை அனுஷ்டித்தார்கள். இந்த ஜில்லாவில் சென்ற நான்கு வருஷங்களில் இந்த முறையில் 70,000 ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டன. 1500 டன் விதை மீதப்பட்டது. இதனால் விவசாயிகளுக்கு 3 லட்சம் ரூபாய் லாபம் ஏற்பட்டிருக்கிறது.

கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், ஈரோடு, ஆனைமலை முதலிய சில நீர்வசதியுள்ள பிரதேசங்களில் மட்டும் நெல் பயிராகிறது. இந்த ஜில்லாவின் முக்கிய விவசாயம் பருத்தி, வேர்க்கடலை, கரும்பு மற்றும் சில சிறு தானியங்களுமாகும். இவற்றிற்குத் தண்ணீர் வசதி செய்ய

1946–47-ம் வருஷத்தில் 2,569 புது கிணறுகள் வெட்ட 7,68,900 ரூபாய் சர்க்கார் மானியங் கொடுத்தனர். 1,420 பழைய கிணறுகளைப் பழுது பார்க்கவும் 2,48,320 ரூபாய் உதவி செய்தார்கள். இந்த முறையால் சுமார் 5,000 ஏக்கர் புது நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது. 1,000 டன்னுக்குமேல் அதிக உற்பத்தி செய்யப்பட்டது. 1947–48-ல் 2,246 கிணறுகளுக்கு 9,38,700 ரூபாய் மானியம் கொடுக்கப்பட்டது. 150 கிணறுகளுக்குமேல் வேலைமுடிந்து விட்டது. 2,500 ஏக்கர் வரை சாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டது. 5,000 டன் அதிக உற்பத்தியும் ஏற்பட்டது. 1948–49ல் 1,069 கிணறுகளுக்கு சர்க்கார் 8,00,000 ரூபாய் மானியம் கொடுத்தார்கள். 500 ஏக்கர் நிலம் புதிதாய் சாகுபடிக்கு வந்தது. 150 டன் அதிக உற்பத்தி ஏற்பட் டது. 1949–50-ல் 1,011 கிணறுகளுக்கும் 1950–51-ல் 407 கிணறுகளுக்கும் சர்க்கார் மானியங் கொடுத்திருக்கின் றனர். மேலும் தக்காவி கடன்களும் விவசாயிகளுக்கு அடியிற்கண்ட விவரப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது.

	ரூபாய்.
1946–47-ல்	1,92,045
47–48-ல்	89,720
48–49-ல்	2,32,875
49–50-ல்	5,09,930
50–51-ல்	28,63,040

சென்ற நான்கு வருஷங்களில் 1,300 டன் அபிவிருத்தி நெல் விதை விநியோகிக்கப்பட்டது. 70,000 ஏக்கர் நிலங் களில் அது பயிரிடப்பட்டது. சுமார் ஏழு லட்ச ரூபாய் பெறுமான 3,500 டன் அதிக உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர் ஜில்லாவில் ராகி 20,000 ஏக்கர் நிலத் தில் பயிராகிறது. அபிவிருத்தி வித்துக்கள்மூலம் இரண்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள 1,000 டன் தானியம் அதிக உற்பத்தியாயிற்று.

சோளம் 17,000 ஏக்கரில் பயிராகிறது. 1,70,000 ரூபாய் விலையுள்ள 850 டன் அதிக விளைச்சல் ஏற்பட்டுள்ளது.

வேர்க்கடலை 10,000 ஏக்கரில் பயிராகிறது. விவசாய இலாகா சிபார்சு செய்த வித்துக்களை உபயோகித்தது மூலம் மூன்று லட்ச ரூபாய் பெறுமான 15,000 மூட்டை கடலை அதிக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது.

கரும்பு சாகுபடியிலும் இந்த ஜில்லாவில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. மொத்தம் 10,800 ஏக்கரில் கரும்பு பயிராகிறது. அதில் 10,000 ஏக்கர் வரை கோ. 419, கோ. 413, கோ. 421 ரக கரும்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை பெரும்பாலும் சர்க்கரை உற்பத்திக்கு உபயோகப்படக் கூடியவை. மற்ற நிலங்களில் பூலன், வெள்ளை, நாமக் கரும்பு முதலிய ரகங்கள் விளைகின்றன. இந்த அபிவிருத்தியான ரகங்களைப் பயிரிடுவதின் மூலம் விவசாயிகளுக்குச் சென்ற நான்கு ஆண்டுகளில் ஐந்து லட்ச ரூபாய் வரை லாபம் கிடைத்திருக்கிறது.

கோ. 419 என்ற ஒருவகை கரும்புக்கு ஏராளமான உரம் போட்டு குனியமுத்தூர் கிராமத்தில் பரீக்ஷார்த்தமாகப் பயிரிடப்பட்டது. ஏக்கருக்கு 175 டன் கரும்பு வெள்ளாமை கண்டிருக்கிறது. இது 160 பொதி வெல்லத்துக்கு சமானமானதென்று சொல்லப்படுகிறது. ஒரு பொதி 260 பவுண்டு.

திருப்பூரில் பருத்தி விதை அபிவிருத்திப் பண்ணையொன்று நிறுவப்பட்டிருக்கிறது. அங்கு 13,000 ஏக்கர் நிலத்தில் பருத்தி வித்துக்களைப் பெருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் 29,400 மூட்டை கம்போடியா விதையும், 2,040 மூட்டை கருங்கண்ணி விதையும் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த விதையைக்கொண்டு 1,40,000 ஏக்கர் நிலத்தில் பருத்தி விதைக்கலாம். சுமார் இரண்டு லட்சம் ரூபாய்க்குமேல் பெறுமானமுள்ள 14,000 பொதி கப்பாஸ் அதிகமாய் இதன் மூலம் உற்பத்தியாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஊக்கமுள்ள ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக சுமார் 800 ரூபாய் பெறுமான உரங்களும் 400 ரூபாய் பெறுமான வித்துக்களும் விநியோகிக்கப்பட்டன.

விவசாயக் கல்லூரி

சென்னை ராஜ்யத்தின் விவசாய அபிவிருத்தி சம்பந்தமான பயிற்சி அளிக்கத்தக்க கல்லூரியொன்று கோயம்புத்தூரில் நிறுவப்பட்டிருக்கிறது. 1922-ம் ஆண்டிலிருந்து இந்தக் கல்லூரி சென்னை சர்வ கலாசாலையுடன் இணைக்கப்பட்டுள்ளது. 1943–44-ம் வருஷம் வரை இந்தக் கல்லூரியில் வருஷத்திற்கு 48 மாணவர்கள் பயிற்சி பெற்றார்கள். நாட்டின் விவசாயத்திலுள்ள முக்கியத்துவத்தைப் பொறுத்து விவசாயக் கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 1946 முதல் 1950 வரை விவசாயக் கல்லூரியில் தேறியவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:—

வருஷம்	சேர விண்ணப்பித்தவர்கள்.	சேர்க்கப்பட்டவர்கள்.	தேறியவர்கள்.
1946	435	107	43
1947	447	95	77
1948	368	94	80
1949	223	80	75
1950	252	80	73

கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியுடன் ஒரு ஆராய்ச்சி ஸ்தாபனம் இணைக்கப்படுள்ளது. இதில் நெல் ஆராய்ச்சி, பயறு வகைகள் ஆராய்ச்சி, சிறு தானியங்கள் ஆராய்ச்சி முதலிய பல பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆராய்ச்சியின் மூலமாக எந்தெந்தப் பிரதேசத்திற்கு எந்த வகை தானிய வித்துக்களை உபயோகிக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் சிபார்சு செய்கிறார்கள். இந்த சிபாரிசின்படி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் நன்கு லாபமடைந்து வருகிறார்கள்.

பாவானி சாகர் பிரதேசமான சத்தியமங்கலத்தில் ஒரு விவசாய ஆராய்ச்சி நிலையத்தை சமீபத்தில் சர்க்கார் அமைத்துள்ளனர். அங்குள்ள பூமி வளத்தையும், எந்தெந்தப் பயிர்களை அவ்விடங்களில் செழிப்பாய் வளர்க்கலாமென்பதுபற்றியும் அந்த நிலையம் ஆராய்ச்சி நடத்தும்.

காட்டுவளம்

கோயம்புத்தூர் ஜில்லாவில் ஏராளமான காடுகள் இருக்கின்றன. வடக்கே கொள்ளேகாலம், கோபிசெட்டிப் பாளையம், பவானி தாலூகாகளிலும், தெற்கே பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை தாலூகாகளிலும், நீலகிரி அடிவாரத்தில் கோயம்புத்தூர் தாலூகாவின் பகுதியிலும் அடர்ந்த காடுகள் உள்ளன. இந்தக் காடுகளில் சந்தனம், தேக்கு மற்றும் பல விலையுயர்ந்த மரங்கள் நிறைந்திருக்கின்றன.

காடுகளை அபிவிருத்தி செய்வதில் நம் சென்னை சர்க்கார் தீவிர முயற்சி எடுத்து வருகிறார்கள். ராஜ்யத்திலுள்ள எல்லாக் காடுகளிலும் தேக்கு மரங்களை அதிகம் பயிரிட ஏற்பாடு செய்கிறார்கள். வருஷத்திற்கு சுமார் 1,600 மரங்கள் வரை பயிரிடப்படுகின்றன. இந்த திட்டத்தின்கீழ் 70 வருஷ கால வட்டத்தில் வருஷந்தோறும் ஒரு ஏக்கர் நிலத்தில் 1,200 கன அடி தேக்கு மரம் கிடைக்கும்படியான நிலைமையை உண்டுபண்ணமுடியுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

துரிதமாய் வளரக்கூடியவையான சவுக்கு மரங்களை ஏராளமாய்ப் பயிரிடவும் திட்டமிட்டிருக்கிறார்கள். இது விறகுக்கு மிகவும் உபயோகப்படக்கூடியது. 20 வருஷத்தில் 1½ லட்சம் ஏக்கரில் சவுக்கு பயிரிட வேலை நடக்கிறது. இதன்படி 10 வருஷக் கால வட்டத்தில் வருஷத்திற்கு ஆறு லட்சம் டன் விறகு கிடைக்கும்.

நீலகிரி, பழனி மலைகளில் வாட்டில் மரங்களைப் பயிரிட சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தோல் பதனிடும் வேலைக்கு தென் ஆப்பிரிக்காவிலிருந்து சென்னை இறக்குமதி செய்துகொண்டிருந்த வாட்டில் பட்டைகளை நம் ராஜ்யத்திலேயே உற்பத்தி செய்யும் சுயநிறைவுத் திட்டத்தை சர்க்கார் மேற்கொண்டிருக்கின்றனர்.

சுமார் 30 வருஷங்களுக்குமுன்னால் சென்னை சர்க்கார் 3,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள காடுகளை கிராம பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தில் விட்டிருந்தனர். அவற்றின்

நிர்வாகம் சரியாக இல்லையெனக் கண்ட மக்கள் சர்க்கார் அந்தக் காடுகளின் நிர்வாகத்தைத் தாமே எடுத்துக் கொள்ள நிச்சயித்தனர். 1950-ம் வருஷம் இறுதிக்குள் சுமார் 2,900 சதுர மைல் காடுகள் சர்க்கார் நிர்வாகத்திற்குள் கொண்டுவரப்பட்டன.

காடுகளின் பராமரிப்பு வேலையைச் சரிவர நடத்த சர்க்கார் காட்டு இலாகா ஒன்றை நிர்வகிக்கின்றனர். அந்த இலாகாவுக்கு வேண்டிய அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் பயிற்சியளிக்க கோயம்புத்தூரில் ஒரு காட்டிலாகா கல்லூரி நடக்கிறது.

நாட்டிலுள்ள காடுகளின் அபிவிருத்தியை முன்னிட்டு எங்கும் வனமகோத்ஸவம் கொண்டாடப்படுகிறது. சர்க்



காரின் ஆதரவிலேயே ஒவ்வொருவரும் இந்த விழாவைக் கொண்டாடும்படி கோரப்படுகிறார்கள். மரம் நடும்வாரமென்று வருஷத்தில் ஒரு வாரம் இதற்காக ஒதுக்கப்படுகிறது. இந்த விழாவில் கலந்து கொள்கிறவர்களுக்கு மரப் பதியங்களும், விதைகளும் சர்க்கார் இலாகாகளிலிருந்து இலவசமாகக் கொடுக்கிறார்கள். சர்க்கார் கட்டிடங்களைச் சுற்றியும், மற்றுமுள்ள சர்க்கார் நிலங்களிலும் வருஷந்தோறும் மரங்கள் நடுகிறார்கள். மரங்கள் நட்டால்மட்டும் போதாது. அவற்றை நன்கு கவனித்து வளர்க்கவேண்டியது மிகவும் அவசியமென்பதை வற்புறுத்துகிறார்கள்.

காடுகளின் அருகிலுள்ள கிராம விவசாயிகள் தழை உரங்களை காடுகளிலிருந்து சேகரிக்க சர்க்கார் அனுமதித்

துள்ளனர். காடுகளிலுள்ள புல் திட்டுகளில் மாடுகள் மேய்த்துக்கொள்ளவும், விவசாயத்துக்கு வேண்டிய மரக் கருவிகளை காட்டு கூப்புக் கன்ட்ராக்டர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும், விவசாயிகளுக்கு சர்க்கார் வசதி யளித்திருக்கின்றனர்.

கால்நடைச் செல்வம்

சென்னை ராஜ்யத்தில் 230 லட்சம் மாடுகளும், 100 லட்சம் ஆடுகளும் இருக்கின்றன. இவற்றை உயர்ந்த ரகக் கால்நடைகளாய் அபிவிருத்தி செய்ய நம் சர்க்கார் முயற்சித்து வருகின்றனர். இந்த வகைக்கு 1946-ல் 23·64 லட்ச ரூபாய் செலவு செய்த நம் சர்க்கார் 1950–51-ல் அந்த செலவை 47·15 லட்சமாக அதிகப்படுத்தி இருக்கிறார்கள். மிருக வைத்தியக் கல்லூரியில் அதிகமான மாணவர்களைச் சேர்த்துப் பயிற்சியளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளனர்.



ஓங்கோல், காங்கேயம், ஹலிக்கார் முதலிய உயர்ந்த ரக பொலி காளைகளைப் பராமரித்து அவைகளைக்கொண்டு மாடுகளின் ரகத்தை அபிவிருத்தி செய்கின்றனர். செயற்கை முறையில் பசுக்களைக் கருத்தறிக்கச் செய்வதும் தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது.

கோயம்புத்தூர் ஜில்லாவில் 16 பெரிய கால்நடை ஆஸ்பத்திரிகளும் 11 சிறிய ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன. இந்த ஜில்லாவில் பொலி காளைகள் வைத்து உயர் ரக கால்

நடை பெருக்கும் வழக்கம் நன்கு அபிவிருத்தியடைந் துள்ளது. பொலி காளைகளின் எண்ணிக்கையும் வருஷந் தோறும் அதிகரித்து வருகிறது.

ஆனைமலையில் ஒரு கால்நடை அபிவிருத்திச் சங்கம் இருக்கிறது. அங்கு சிந்தி கன்றுகளைக்கொண்டு ரக உற்பத்தி செய்கிறார்கள். ஈரோடு, பொள்ளாச்சி தாலூகாக்களில் பொலிகாளைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும் ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கோயம்புத்தூர் கால்நடை ஆஸ்பத்திரியில் 1950-ம்ஆ பிப்ரவரி மாதம் செயற்கைக் கருத்தறிக்கும் முறை அனுஷ் டானத்தில் கொண்டுவரப்பட்டது. 1950-ம்ஆ நவம் பர்மீ 3உ வரை சுமார் 514 பசுக்களும் எருமைகிடாரிகளும் அம்முறையில் கருத்தறிக்கப் பெற்றன.

ஜமீன்தாரி முறையொழிப்பு

நாட்டின் விவசாய அபிவிருத்திக்கு முக்கிய தடையாக இருந்துவந்த ஜமீன்தாரி முறையை நம் மக்கள் சர்க்கார் ரத்து செய்தனர். ஜமீன்தார்களுக்கு தங்கள் நிலங்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளிடமிருந்து வரிவசூலிப்பதில் மட்டும் அக்கறை இருந்ததால் அபிவிருத்தியில் அவர்களுக் குப் பொறுப்பில்லாமலிருந்தது. ஜமீன் நில விவசாயி களும் உற்பத்தியில் ஊக்கமில்லாதவர்களாய்க் காலங் கழித்து வந்தனர். ஜமீன் நில விவசாயிகளின் வாழ்க்கை நிலை நாளுக்குநாள் மோசமாகி வந்தது. அவர்களையும் ரயத்துவாரி நில விவசாயிகளின் நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்று நம் சர்க்கார் நினைத்தனர். அதற்காக சென்னை சட்டசபையில் 1948 நவம்பரில் ஜமீன்தாரி முறையொழிப்பு மசோதா வொன்று நிறைவேறியது.

அந்தச் சட்டத்தின் மூலம் ராஜ்யத்திலுள்ள ஜமீன் தாரிகளை மூன்று கட்டங்களில் சர்க்கார் எடுத்துக்கொண் டனர். ஜமீன்தார்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க அந்த சட் டத்தில் வசதி ஏற்படுத்தினர்.

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள நிலங்கள் அநேகமாய்



உணவைப் பெருக்க:

உழைப்புக்குப் பின் ஓய்வு

உழைப்பு

சிறப்பளிக்கும்

சின்னங்கள்











ரயத்துவாரி பிரதேசங்கள்தான். மொத்தம் 9 ஜமீன் தாரிகள் அங்கு இருந்தன. அவலப்பம்பட்டி, நேகமம், ராமபட்டணம், புரவிபாளையம், மெய்வாடி, தூங் காவி, வேதப்பட்டி, ஜோதம்பட்டி, மேட்ராத்தி முதலி யவை அங்குள்ள ஜமீன் எஸ்டேட்டுகள். இவற்றில் ராம பட்டணம், புரவிபாளையம் இவ்விரண்டையும் தவிர மற் றவை சர்க்கார் நிர்வாகத்துக்குள் வந்துவிட்டன.

ஜமீன்தாரி முறை ரத்து, ரயத்துவாரி முறைக்கேற்ப ஜமீன் நிலவரியைக் குறைப்பது, நிலச் சொந்தக்காரருக்கும் குத்தகைதாரருக்குமுள்ள தொடர்பை நிர்ணயிப்பது என்ற மூன்று சீர்திருத்தங்களையும் நிறைவேற்றவேண்டியது மிக வும் அவசியமென்று மக்கள் சர்க்கார் கருதினர். 1947-ம் வருஷத்தில் எஸ்டேட் நிலவரிக் குறைப்புச் சட்டம் நிறை வேறியது. அதன் பிரகாரம் ஜமீன், இனும் நிலங்களின் வரியை அருகிலுள்ள ரயத்துவாரி நிலவரியின் அளவுக்குக் குறைத்தார்கள். அதன் பிறகு ஜமீன்தாரி முறை சீர்திருத் தச் சட்டம் அமுலுக்கு வந்தது. ஜமீன் பிரதேச விவசாயி களுக்கு இதர விவசாயிகளைப்போன்று நில உரிமையளிக் கப்பட்டது. 1950-ம் வருஷ முடிவில் சென்னை ராஜ்யத்தில் 2,810 ஜமீன் எஸ்டேட்டுகளும் 3,500 இனும் கிராமங்களும் ரயத்துவாரி முறைக்குக் கொண்டு வரப்பட்டன.

பொது நல வசதிகள்

மழையையே எதிர்பார்த்து நிற்க வேண்டிய புன்செய் நிலங்களுக்கு, நீர் நிலைகளின் மூலம் பாசன வசதிகளை ஏற்படுத்தினால், நாட்டின் வளம் பன்மடங்கு பெருகுவதோடு, அம் முயற்சியில் ஈடுபடுவோருக்கு அழியாப் புகழும் உண்டாகும்.

—புறநானூறு
18-ம் பாட்டின் கருத்து

உணவு தானிய உற்பத்திப் பெருக்கத்திற்கு மிகவும் அவசியமாகவேண்டியது நீர்ப்பாசனம். வானம் பார்த்த பூமிகளில் அப்போதைக்கப்போது மழைபெய்து கொண்டிருந்தால் அங்கு சரியான வெள்ளாமை காண முடியும். மழையில்லாத காலங்களில் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டிய அவசியம் ஏற்படுமானால் அதற்கு வேண்டிய தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்வது மிகவும் முக்கியமான விஷயம். மழைத் தண்ணீரைக் குளங்களிலும் ஏரிகளிலும் தேக்குவது, ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டி தண்ணீரை கால்வாய்கள் வழியாய்க் கொண்டு போய் ஏரிகளில் தேக்கிவைப்பது முதலிய முறை

கள் சாதாரணமாய் அனுஷ்டிக்கப் படுபவை. இதற்கு முன்னிருந்த ஆட்சியில் இத்தகைய நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களை அவைகளில் கிடைக்கக்கூடிய வருமான நோக்குடனேயே அமைத்தனர். பொதுமக்கள் பிரதிநிதிகள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் இந்நோக்கம் மாற்றப்பட்டது. வருமானத்தையும் லாபத்தையும் மட்டுமே எதிர் பாராமல் பெருவாரியான மக்களுக்கு நலனளிக்கக்கூடியது எது என்று ஆராய்ந்து புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

பவானி சாகர்

தற்போது நவீன முறைகள் கையாளப்படுகின்றன. ஜீவநதிகளின் மத்தியிலேயே பெரிய நீர் தேக்கங்களைக் கட்டி அந்தத் தண்ணீரை எப்பொழுதும் கால்வாய்களில் ஓடும்படி செய்கிறார்கள். அத்துடன் அந்த தேக்கத்திலுள்ள தண்ணீரின் சக்தியை உபயோகித்து மின்சாரம் உற்பத்தி செய்கின்றனர். இம் மாதிரியான நீர்த் தேக்கங்களில் தமிழ் நாட்டில் மிகப் பெரியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமானது பவானிசாகரமாகும்.



கோயம்புத்தூர் ஜில்லா சத்தியமங்கலத்துக்கு மேற்கே சுமார் 10 மைல் தூரத்தில் பவானிசாகர் நீர்த்தேக்கம் அமைக்கப்படுகிறது. தற்காலத்தில், இவ்வளவு பெரிய மண் அணை கட்டப்படுவது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறையாகும். 1,300 லட்சம் கன அடி மண் இந்த அணைக்குத் தேவை என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதில்

500 லட்சம் கன அடி மண் வேலை பூர்த்தியாகியிருக்கிறது. அணையின் மொத்த நீளம் 5½ மைல். சென்னை ராஜ்யத்திலேயே மிகவும் நீளமான அணை இதுவே. அதில் 1,523 அடி சிமின்டு அணையும் மற்றது மண் கரை அணையுமாகும். சிமின்டு கட்டிட வேலைகளும் ஏக காலத்தில் நடக்கின்றன.

பவானி சாகர் குடியிருப்பு

பவானிசாகர் திட்டத்தில் 20,000 ஆட்கள் வேலை செய்கிறார்கள். நவீன யந்திர சாதனங்கள் பல இங்கு வேலை செய்தபோதிலும் ஆள்பலம் கொண்டு செய்யக்கூடிய எல்லா வேலைகளுக்கும் ஆட்களையே உபயோகிக்கிறார்கள். இதனால், வேலையில்லாத திண்டாட்டத்திற்கும், வறுமைக்கும் நிவாரணமளிப்பதேமக்கள் சர்க்காரின் நோக்கம். பவானித் திட்டத் தொழிலாளர்களுக்கு அந்த இடத்தின் அருகாமையிலேயே குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குடியிருப்பு ஒரு சிறிய அழகிய நகரமாகவே விளங்குகிறது. சுய நிறைவுள்ளதாய் அதை அமைத்திருக்கிறார்கள். போதுமான மின்சார வசதிகள், சுத்தமான குடி தண்ணீர், நகரங்களிலுள்ள அளவு உணவு பங்கீடு முதலிய எல்லா சௌகரியங்களையும் அங்கு செய்திருக்கிறார்கள். எனவே தொழிலாளர்கள் அங்கு மிக உற்சாகத்துடன் வேலை செய்கிறார்கள். 1952-ம் ஆண்டு செப்டம்பரில் திட்டம் பூர்த்தியாகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

திட்டத்தின் விவரங்கள்

பவானி சாகர் திட்டம் 1947-ல் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றது. இந்த திட்டத்தின் கீழ் 5½ மைல் நீளத்தில் ஓரணையும், 120 மைல் நீளத்தில் ஒரு கால்வாயும் இடம் பெற்றுள்ளன. இத் திட்டம் பூர்த்தியானதும் கோயம்புத்தூர் ஜில்லாவில் 2,07,000 ஏக்கர்நிலத்துக்கு இது நீர்ப்பாசன வசதியைக் கொடுக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

பவானிசாகர் சென்னை சர்க்காரின் நீர்ப்பாசன நடுத்தரத் திட்டங்களில் ஒன்ருக அமைந்துள்ளது. $8\frac{3}{4}$ கோடி ரூபாய் இதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. பவானி நீர்த்தேக்கம் 2746 கோடி கன அடி தண்ணீர் கொள்ளக்கூடியது. தேக்கம் அமைப்பது மூலம் பல தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான நிலங்கள் தண்ணீரில் மூழ்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நிலங்களுக்குப் பதில் நிலம் கொடுக்க நம் சர்க்கார் 6,000 ஏக்கர் நிலம் பிரத்தியேகமாக ஒதுக்கி இருக்கின்றனர்.

பவானி சாகரிலிருந்து வெட்டப்படும் கால்வாய் கோபி செட்டிபாளையம், ஈரோடு, தாராபுரம் இம்மூன்று தாலூகாக்கள் வழியாய் ஓடி அங்குள்ள ஏராளமான புன்செய் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கிறது. தாராபுரம் தாலூகாவில் மட்டும் 25,000 ஏக்கர் பயனடைகிறது. இந்தக் கால்வாயின்மேல் 60 பாலங்கள் வரை கட்ட வேண்டியிருக்கிறது. அதில் 50 பாலங்கள் கட்டி முடிக்கப் பட்டன. 10 பாலங்கள் கட்டப்படுகின்றன.

பிரதம வாய்க்கால் 120 மைல் நீளம். இதிலிருந்து சுமார் 400 மைல் நீளமுள்ள கிளை [கால்வாய்கள் வெட்டப் படுகின்றன. சின்னசமுத்திரம், ஊஞ்சலூர் கிளைகள் இதில் முக்கியமானவை.

மேட்டூர் கால்வாய்

கோயம்புத்தூர் ஜில்லாவின் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கான இன்னும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவைகளில் இரண்டு மிக முக்கியமானவை. மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து காவேரி யாற்றின் வலது புறத்தில் ஒரு வாய்க்கால் வெட்டு கிருர்கள். இந்த வாய்க்கால் பவானி தாலூகாவில் அம்மா பேட்டை, சிங்கம்பேட்டை, குறிச்சி, சேரிமங்கலம் முதலிய கிராமங்கள் வழியாக ஓடி சுமார் 18,000 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதியளிக்கும். இந்த வாய்க்கால் சேலம் ஜில்லாவுக்கும் உபயோகப்படும் வகையில் திட்டம் வகுக்கப்

பட்டிருக்கிறது. $2\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் வகுக்கப்பட்டுள்ள மேட்டூர் கால்வாய் திட்டம் கோயம்புத்தூர், சேலம் இவ்விரண்டு ஜில்லாக்களிலுமாகச் சேர்ந்து 45,000 ஏக்கர் நிலத்துக்கு தண்ணீர் கொடுக்கும்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் அடுத்ததாய் முக்கியத்துவம் வாய்ந்த நீர்ப்பாசனத் திட்டம் அமராவதி நீர் தேக்கமாகும். அமராவதி, மேற்கு தொடர்ச்சிமலையில் உற்பத்தியாகி கோயம்புத்தூர் ஜில்லா வழியோடி காவிரியாற்றில் கலந்து விடும் ஒரு ஜீவ நதியாகும். இந்த ஆற்றின் ஜலத்தை விவசாயத்துக்கு உபயோகப்படுத்தவேண்டுமென்ற நோக்கம் பல வருஷங்களாயிருந்த போதிலும் 1946-ல்தான் அதற்கு நல்லகாலம் பிறந்தது. இவ் வருஷத்தில், இத் திட்டப் பரிசிலனை அங்கீகரிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் 500 கோடி கன அடி கொள்ளக் கூடிய ஒரு நீர்த் தேக்கம் அமைக்கப்படும். அதிலிருந்து கால்வாய்கள் வெட்டி தாராபுரம், உடுமலைப்பேட்டை முதலிய தாலூகாகளுக்கு ஜல வசதி செய்யப் போகிறார்கள். புது நீர்ப் பாசனத்தின் ஆயக்கட்டு 15,000 ஏக்கராகும். இந்த திட்டத்திற்கு 168 லட்ச ரூபாய் செலவாகுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

அமராவதி நீர்த் தேக்கத் திட்டத்தால் பயனடையப் போகும் விவசாயிகள் நில அபிவிருத்தி வரியாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 முன் பணம் கொடுக்கச் சம்மதித்துள்ளனர். எனவே இந்த நீர்த் தேக்க வேலையை ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகள் துரிதமாய் நடந்து வருகின்றன. இம்மாதிரிப் பொது மக்கள் பண உதவி கொண்டு நிறைவேற்றப்படும் க்ஷேம நலத் திட்டங்களில் சென்னை ராஜ்யத்தில் இது இரண்டாவதாகும். முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டது திருநெல்வேலி ஜில்லாவில் மணி முத்தாறு நீர்த் தேக்கத் திட்டம்.

தாம்பிரபரணி நதியின் ஒரு உபநதியான மணிமுத்தாற்றின் குறுக்கே அணைகட்டி நீரைத் தேக்கி அங்கிருந்து கால்வாய் மூலம் தண்ணீரைக்கொண்டு போய்ச் சுமார்

20,000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதியை உண்டு பண்ண வேலை நடக்கிறது. இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 389 லட்ச ரூபாய். இதில் 128 லட்சம் வரை அங்குள்ள விவசாயிகள் முன் பணம் கொடுத்திருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் மேலும் பல குள மராமத்து வேலைகள் நடந்திருக்கின்றன. பல்லடம் தாலூகாவில் சூளூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கே சுமார் 1½ மைல் தூரத்தில் நிலம்பூர் குளமென்று ஒன்றிருக்கிறது. இக் குளத்தின் கரைகள் வெள்ளத்தால் உடைக்கப்பட்டு பல வருஷங்களாய்ப் பழுதுபார்க்காமல் கிடந்தன. 1946-ம் வருஷத்தில் தான் இக் குள மராமத்து வேலைகள் பூர்த்தியாகி சுமார் 366 ஏக்கர் நிலம் பாசனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் 275 டன் அதிக தானிய உற்பத்தி செய்யப்படுகிறது.

இது போலவே பொள்ளாச்சித் தாலூகாவில் கொத்தவாடிக்குளம் 1950-லும், கோயம்புத்தூர் தாலூகாவில் அக்கிரகார சாமக்குளம் 1949-லும், மராமத்து செய்யப்பட்டுள்ளன.

பல்லடம் தாலூகாவிலுள்ள வண்ணாத்தங்கரை அணைக்கட்டும், பவானி தாலூகாவிலுள்ள சித்தாறு நதி அணைக்கட்டும் நன்கு பழுது பார்க்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் 1950-ல் பூர்த்தியாயின.

தாராபுரம் தாலூகாவிலுள்ள கதங்கண்ணிக்குளம், பொள்ளாச்சி தாலூகாவிலுள்ள குளப்பத்துக்குளம் இரண்டின் ஆழத்தை அதிகப்படுத்தும் திட்டங்கள் வேலை நடந்து வருகின்றன.

அதிக உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் தாலூகாவில் நொய்யில் ஆற்றுப் பாசனத்து நிலங்களுக்கு அதிக தண்ணீர் வசதிசெய்ய ஒரு நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வெகு காலமாக அங்குள்ள விவசாயிகள் செய்துவந்த கோரிக்கை 1950-ம் ஜூன் மீ பூர்த்தியாயிற்று. கோயம்புத்தூர் நகருக்குக் குடி

தண்ணீர் விநியோகிக்கும் நீர்த் தேக்கத்தின் அபிவிருத்தி வேலையே யாகும் அந்தப் புதிய ஏற்பாடு.

பவானியின் ஓர் உபநதியான சிறுவாணி, மேற்குத் தொடர்ச்சி மலையில் மலையாளம் சரகத்தில் உற்பத்தியாகிறது.* இது ஒரு ஜீவநதி. மலையாளம் சரகத்திலுள்ள முதிக்குளத்துக்கருகில் சிறுவாணியின் குறுக்கே ஒரு அணை கட்டி நீரைத் தேக்கி யிருக்கிறார்கள். நீர்த் தேக்கம் மலையின் மேல் பக்கமும் கோயம்புத்தூர் மலையின் கீழ் பக்கமும் இருக்கின்றன. எனவே மலையில் பாறையைக் குடைந்து ஒரு வழி (டன்னல்) கட்டி அதன் மூலம் சிறுவாணித் தண்ணீரை மலையின் கீழ் பக்கத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கிருந்து கோயம்புத்தூருக்குத் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. சிறுவாணித் தண்ணீர் மிகவும் சுத்தமானதென்றும் மக்கள் அருந்துவதற்கு பெரிதும் தகுதியுள்ளதென்றும் கூறப்படுகிறது.

1929-ம் வருஷம் கோயம்புத்தூர் குடி தண்ணீர் விநியோகத் திட்டம் பூர்த்தியாயிற்று. அன்று முதற்கொண்டே கோயம்புத்தூர் தாலூகாவிலுள்ள விவசாயிகள் சிறுவாணி ஆற்றுத் தண்ணீரைக்கொண்டு நொய்யில் நதியின் பெருக்கத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். கோயம்புத்தூர் நகர சபை அந்த யோசனைக்கு இசையவில்லை. ஆனால் 1948-ல் விவசாயிகளின் கோரிக்கையை ஆதரித்து நகர சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதன்படி சிறுவாணி அணைக்கட்டின் உயரத்தை நான்கு அடிகள் அதிகப்படுத்தி அதன் மூலம் அதிகமாகத் தேக்கப்படும் தண்ணீரை நொய்யில் நதியில் கொண்டு சேர்க்கவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது. இந்தத் திட்டம் 1949-ம்ஆு டிசம்பரில் அங்கீகரிக்கப்பட்டு 1950-ம்ஆு ஜூன்மீ பூர்த்தியாயிற்று. இதனால் 3,500 ஏக்கர் நிலம் பயனடைந்திருக்கிறது.

கோபிச்செட்டிபாளையம் தாலூகாவில் கொடிவேரி அணைக்கட்டில் மடைக்கதவுகள் போடல், தாடேபள்ளி கால்வாயின் குஹலூர் கிளை கால்வாயிலிருந்து ஒரு உப

கால்வாய் வெட்டல் முதலிய அபிவிருத்தி வேலைகள் நிறை வேற்றப்பட்டன.

பொள்ளாச்சி தாலுகாவில் அலியாற்றிலிருந்து அரிய புரம் கால்வாய் ஒன்று வெட்டவும், தாராபுரம் தாலூ காவில் கொளிஞ்சிவாடி கால்வாயிலிருந்து, குளத்து பாளையம், வீராஜிமங்கலம் கிளை கால்வாய்கள் தோண்ட வும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

தாராபுரம் தாலூகாவிலுள்ள புஞ்செய் தலையூர் கால் வாயை விஸ்தரிக்கும் திட்டமொன்றும், கோபிச்செட்டி பாளையம் தாலூகாவில் அரக்கன்கோட்டை கால்வாயி லிருந்து பெருமுகையாத்தணை கிளையொன்று வெட்டும் திட்டமும், சத்தியமங்கலத்துக்கருகில் சிக்கரசம்பாளையத்தி லிருந்து நான்கு மைல் தூரத்தில் ஒரு நீர் தேக்கத்தை யமைக்கும் திட்டமும், கொள்ளேகாலத்தில் இரண்டு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களும் பரிசிலனை செய்யப் படுகின்றன.

கோயம்புத்தூர் ஜில்லாவைப் போன்று ராஜ்யத்தி லுள்ள இதர ஜில்லாக்களுக்கும் நீர்ப்பாசன வசதிகளைச் செய்ய நம் சர்க்கார் ஏற்பாடு செய்து வருகின்றனர். சென்னை ராஜ்யத்தில் மொத்தம் எட்டுக் கோடி ஏக்கர் நில மிருக்கிறது. அதில் 4 கோடி ஏக்கர்களுக்கு மேல் சாகுபடி செய்யப்படுகின்றன. 390 லட்சம் ஏக்கர் அடர்ந்த காடுகளா யிருக்கின்றன. சாகுபடிக்கு வந்திருக்கும் 410 லட்சம் ஏக்கரில் 320 லட்சம் ஏக்கர் உணவு தானியமும், பாக்கி நிலம் வாணிப விளைபொருள்களையும் உற்பத்தி செய் கின்றன.

சென்னை ராஜ்யத்தின் நான்கு வருஷங்களுக்கு முன் னுள்ள உற்பத்தி 49 லட்சம் டன் அரிசியும் 27 லட்சம் டன் இதர தானியங்களுமாகும். அப்பொழுது ராஜ்யத் தின் ஜனத்தொகை சற்றேறக்குறைய ஐந்து கோடி என மதிப்பிட்டார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு தானியம் 86 லட்சம் டன். எனவே 10 லட்சம் டன் வரை பற்றுக் குறையாக இருந்து வருகிறது. இந்த பற்றுக்

குறையை ஈடு செய்ய பர்மா மற்றுமுள்ள வெளி நாடுகளி லிருந்து அரிசியும் இதர தானியங்களும் இங்கு இறக்குமதி செய்யப்பட்டன.

1951 ஜன சங்கியைப்படி சென்னை ராஜ்யத்தின் ஜனத் தொகை 5,69,52,332. 1941-ம் வருஷத்திய ஜனத்தொகை 4,98,47,508. பத்து வருஷத்தில் 71,04,824 அதிகரித் திருக்கிறது. ஏற்கனவே பற்றுக் குறையாகவுள்ள ராஜ்யம் இந்த அதிகப்படி ஜனத் தொகைக்கும் உணவு தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

மக்களின் க்ஷேம நலத்திற்குப் பொறுப்பாயுள்ள நம் சர்க்கார் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்ய முற்பட்டனர்.

ராஜ்ய முழுவதிலும் சாத்தியமான எல்லா இடங் களிலும் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தத் திட்டங்கள் வகுத்தனர். அத் திட்டங்களைக் குறுகிய காலத் திட்டங்கள், நடுத்தரத் திட்டங்கள், நீண்ட காலத் திட்டங்களென மூன்று பாகங்களாய்ப் பிரித்தனர். மொத்தத்தில் ஏழு கோடி ரூபாய் செலவாகக்கூடிய 300 சிறிய திட்டங்கள் குறுகிய காலவேலைகளாய் உருவாக்கப் பட்டன. குளம், ஏரி மராமத்துக்கள், கிணறுகள் பழுது பார்த்தல், புதுக் கிணறுகள் வெட்டல், கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க மின்சார பம்புகள், ஆயில் எஞ்சின்கள் அமைத்தல் முதலிய வேலைகளை இந்தத் திட்டத்தின்கீழ் மேற்கொண்டனர். இவை முற்றிலும் நிறைவேறினுல் மூன்று லட்சம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதிக்குள் கொண்டுவரப்படு மென்றும், சுமார் ஒன்றரை லட்சம் டன் தானியங்கள் அதிகமாய் உற்பத்தியாகுமென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர் பவானிசாகர், மேட்டூர்க் கால்வாய்த் திட்டம், திருச்சிராப்பள்ளி கட்டளை புள்ளம்பாடிக் கால் வாய்த்திட்டம், ஆறணியாறு திட்டம் இவை உட்பட பத்து திட்டங்கள் நடுத்தரத் திட்டங்களாய் வகுக்கப்பட் டுள்ளன. இவற்றிற்கு மொத்தச் செலவு 23·22 கோடி

ரூபாய் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

மூன்றாவதான நீண்டகால நீர்ப்பாசனத் திட்டத்தில் துங்கபத்திரா நீர்த் தேக்கம், கிருஷ்ணாபெண்ணாறு நீர்த் தேக்கம், ராமபாதசாகர் இம் மூன்றும் அடங்கியுள்ளன. துங்கபத்திராத் திட்டம் சென்னை ராஜ்யத்திற்கும் ஹைதராபாத்துக்கும் நன்மையளிக்கக் கூடியது. அதன் செலவு சென்னையின் பங்கு மட்டும் 25 கோடி ரூபாய். இது மூன்று லட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை உண்டுபண்ணுவதுடன் 35,000 கிலோவாட் மின்சார சக்தியையும் உற்பத்தி செய்யக்கூடியது. இத் திட்டம் பூர்த்தியாகும் தறுவாயிலிருக்கின்றது.

கிருஷ்ணா-பெண்ணாறுத் திட்டம் மேட்டூர் நீர்த் தேக்கத்தைப்போல் நான்கு மடங்குபெரிது. முப்பது லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் வசதி செய்வதுடன் சென்னை நகருக்கும் குடிதண்ணீர் விநியோகம் செய்யும் நோக்கத்தில் வகுக்கப்பட்டிருக்கிறது. இதற்குச் செலவு 100 கோடி ரூபாய் மதிப்பிட்டிருக்கிறார்கள். இத் திட்டம் பரிசீலனையிலிருக்கிறது.


கோதாவரி நதியின் குறுக்கே அணைகட்டி ராமபாதசாகர் நிர்மாணிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இது 25 லட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதியை உண்டுபண்ணக் கூடியது. இந்தத் திட்டம்பற்றித் தொழில் நுணுக்கத்துறை ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

மின்சார அபிவிருத்தி

உணவுப் பெருக்கத்துக்கும் மற்றும் மக்களின் வாழ்க்கை வசதிகளுக்கும் மகத்தான துணைக்கருவியாயுள்ளது மின்சார சக்தி. மின்சாரத்தின் உபயோகம் நாட்டில் மிகவும் துரிதமாய் அபிவிருத்தியடைந்து வருகிறது. உற்பத்தி, விநியோகம், உபயோகம் எல்லாமே 1946-க்கு இப்பொழுது பன்மடங்கு பெருகியுள்ளன. நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார சக்தியை விநியோகித்து அவற்றை நகரங்களாய் மிளிரச்செய்ய வேண்டுமென்பது

நம் சர்க்காரின் ஆவலாயிருக்கின்றது. அந்த நோக்கத்தில் அவர்கள் நம் ராஜ்யத்தின் மின்சார உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ராஜ்யத்திலுள்ள மின்சார உற்பத்தி ஸ்தாபனங்களை விஸ்தரிக்கவும், புதிய உற்பத்தி நிலையங்களைத் திறக்கவும் நம் சர்க்கார் முற்பட்டிருக்கிறார்கள்.

சென்னை ராஜ்யத்திலுள்ள, தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான மின்சார உற்பத்தி ஸ்தாபனங்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளும் திட்டமொன்றை வகுத்து நிறைவேற்றி வருகிறார்கள். அதன்படி முதன் முதலாக சென்னை மின்சார சப்ளை கார்ப்பரேஷனை சர்க்கார் விலைக்கு வாங்கி 'சென்னை மின்சார சிஸ்டம்' என்ற பெயரில் பரிபாலித்துவருகின்றனர். மற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்களையும் வாங்கிக்கொள்ள சர்க்கார் ஐந்து வருஷத் திட்டம் போட்டிருக்கிறார்கள். அதற்காக மூன்று கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.




தற்போது சென்னை ராஜ்யத்தில் பைக்காரா, மேட்டூர், பாபநாசம் ஆகிய மூன்று ஜலசக்தி உபயோகிக்கும் மின்சார உற்பத்திச் சாலைகளும் சென்னை, விஜயவாடா, விசாகபட்டணம், நெல்லூர், மதுரை முதலிய இடங்களில் நிலக்கரி உபயோகிக்கும் மின்சார உற்பத்திச் சாலைகளும் இருக்கின்றன. இந் நிலையங்களில் உற்பத்தியாகும் மொத்த மின்சார விநியோக சக்தி 1,80,000 கிலோவாட். மின்சார விநியோக கம்பிகள் நீளம் 7,700 மைல்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானி, ஈரோடு தாலூகாக்களில் மேட்டூர் மின்சாரமும், மற்றத் தாலூகாக்களில் பைக்காரா மின்சாரமும் விநியோகிக்கப்படுகிறது. சென்ற ஐந்து ஆண்டுகளில் சுமார் 200 கிராமங்களுக்குப் புதிதாய் மின்சார விநியோகம் விஸ்தரித்திருக்கிறார்கள். விவசாயத் திற்காக 3,000 பம்பு மோட்டார்களுக்கு மின்சாரம் கொடுக்கிறார்கள். 250 கைத்தொழில் ஸ்தாபனங்களும் 7,100 வீடுகளும் மின்சார வசதி பெற்றிருக்கின்றன.

சாலை அபிவிருத்தி

சென்னை ராஜ்யத்தில் சாலை அபிவிருத்திக்காக 1946-ம் வருஷத்தில் ஒரு தனி இலாகா அமைக்கப்பட்டது. அந்த



இலாகாவின் அலுவல் திட்டப்படி நம் ராஜ்யத்திற்குப் பெரிய சாலைகளும், இதர ரஸ்தாக்களும் போடுவதற்கு 25 வருஷத் திட்டமொன்று 64 கோடி ரூபாய் செலவில் வகுக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தின் கீழுள்ள எல்லா ரஸ்தாக்களும் போடப்பட்டால் இப்பொழுது நம் ராஜ்யத்திலுள்ள 37,000 மைல் நீள ரஸ்தாக்கள் 55,000 மைல் நீளமாக அதிகரிக்கும். அப்பொழுது ராஜ்யத்திலுள்ள எல்லாக் கிராமங்களும் அநேகமாய் ரஸ்தாக்களால் இணைக்கப்படும்.

முதல் ஐந்து வருஷத் திட்டமான 1947–52-ம் வருஷங்களின் வேலைக்கு $8\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை நான்கு கோடி வரை செலவு செய்யப்

பட்டுள்ளது. சென்னை ராஜ்யத்தில் 114 மைல் ரஸ்தாக்களுக்கு தாரும் 1,065 மைல் ரஸ்தாக்களுக்கு சல்லியும் போடப்பட்டிருக்கிறது. 710 மைல் நீளம் புது ரஸ்தாக்கள் அமைத்திருக்கிறார்கள். 41 லட்சம் ரூபாய் செலவில் பாலங்கள் கட்டியிருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் மொத்தம் சற்றேறக் குறைய 3,500 மைல் நீளச் சாலைகளும், இதர ரஸ்தாக்களுமிருக்கின்றன. கோயம்புத்தூர் வடக்கு, தெற்கு என இரண்டு எஞ்சினீயரிங் பகுதிகள் இவற்றைப் பராமரிக்கின்றன. சென்ற ஐந்து வருஷங்களில் 60 மைல் நீளத்துக்குமேல் தார் ரஸ்தாவும், 10 மைல்கள் சிமின்டு ரஸ்தாக்களும், 40 மைல்கள்வரை கப்பி ரஸ்தாக்களும் போடப்பட்டிருக்கின்றன. புதிய ரஸ்தாக்களும் சுமார் 20 மைல்களுக்கு அதிகம் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 160 மைல் நீளத்தில் 50 ரஸ்தாக்கள் ஐந்து வருஷ திட்டத்தில் போடப்படுகின்றன.

கோயம்புத்தூர் ஜில்லாவில் 151 மைல் நீள இருப்புப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் ஒரு விமான நிலையம் இருக்கின்றது.

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து, நீர்ப்பாசனம், மின்சாரம், ரஸ்தா முதலிய பொது நல வசதித் துறைகளில் கோயம்புத்தூர் ஜில்லா மிகத் துரிதமாய் முன்னேறி வருகிறதென்பது தெளிவாகிறது.

கல்வி மறுமலர்ச்சி

> இந்த அரசியல் அமைப்புச் சட்டம் அமுல் நடக்கத் தொடங்கிய பத்து வருஷ காலத்திற்குள், எல்லாக் குழந்தைகளுக்கும் பதினான்கு வயது முடியும் வரையில் இலவசக் கட்டாயக் கல்வி போதிக்க அரசாங்கம் முயலும்.
>
> —இந்திய அரசியல் அமைப்பு
> ஷரத்து—45

‘மன்னரில் கற்றோன் சிறப்புடையோன்’ என்பது மூதுரை. கல்விக்குப் பெருமை என்றுமுளது. அக்கல்வி மக்களின் வாழ்க்கைக்கு எல்லாவிதத்திலும் பயன்படக்கூடியதாயமைந்து விடுமானால் அது பொன் மலர் நாற்றமுடைத்தாகும். நம் நாட்டின் கல்வி அந்நிய ஆட்சியின் கீழ்த் தன் அழகும் சிறப்பும் இழந்து காணப் பட்டது. இப்பொழுது மக்கள் சர்க்காரின் முயற்சியினால் மறுமலர்ச்சியடைந்து வருகிறது.

மக்கள் சர்க்கார் பொறுப்பேற்றதிலிருந்து கல்வித்துறையில் அதிக கவனம் செலுத்துகின்றனர். கல்வி முறையும் நாட்டின் நலத்தை இலட்சியமாகக்கொண்டு, மக்களுக்

குப் பயன்படும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. அந்நியக் கல்வி முறையினல் நம் நாட்டுக் கலா சாரமே பாதிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய குறைகளை நீக்கி கல்வி முறை நம் நாட்டுக்கு உகந்த வகையில் திருத்தி அமைக்கப்படுகிறது.

சென்னை ராஜ்யத்தில் 1946-ம் வருஷத்தில் 36,148 ஆரம்ப பாடசாலைகளும், 901 நடுத்தரப் பள்ளிக்கூடங் களும், 78 உயர்தரக் கல்லூரிகளும் இருந்தன. இப் பொழுது அவை முறையே 37,812; 1,247; 100 ஆக உயர்ந் திருக்கின்றன. 1946–47-ம் வருஷத்தில் ராஜ்யத்தின் கல்வி அபிவிருத்திக்காக சர்க்கார் 5·9 கோடி ரூபாய் செலவிட்ட னர். 1951–52-ம் வருஷத்துக்கு 11·39 கோடி அதற்காக ஒதுக்கியிருக்கின்றனர். நாட்டின் கல்வி முன்னேற்றத்தில் நம் மக்கள் சர்க்கார் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள் கின்றனர் என்பதையே இப்புள்ளி விவரம் காட்டுகிறது.

ஆதாரக் கல்வி முறை

ஏட்டுச் சுரைக்காய் என்ற அளவிலிருந்த கல்வி முறையை மாற்றி மக்களின் நல்வாழ்க்கைக்கு உபயோகமா யிருக்கும் படியான கல்வியறிவை அபி விருத்தி செய்ய வேண்டியது அவ சியமென்று மக்கள் சர்க்கார் கருதி னர். வார்தாவில் மகாத்மா காந்தி யடிகள் வகுத்த ஆதாரக் கல்வி முறைதான் நம் நாட்டு மக்களுக்கு நலனளிக்க வல்ல



தென நம் சர்க்கார் நிச்சயித்தனர். ராஜ்யத்திலுள்ள

எல்லா ஆரம்ப பாடசாலைகளையும் ஆதாரக் கல்வி முறைப் பள்ளிகளாய் மாற்ற உறுதி கொண்டுள்ளனர். குறைந்த பட்சம் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடமாவது இருக்கவேண்டுமென்பது நம் சர்க்காரின் நோக்கமாகும்.

எந்த விஷயத்தையும் புத்தக வாயிலாகக் கற்றுக்கொள்வதற்குப்பதில் அனுபவத்தில் தெரிந்து கொள்வதே ஆதாரக் கல்வி முறையின் ஒரு முக்கிய அம்சமாகும். இப்பொழுது ராஜ்யத்தில் 48 ஆதாரக்கல்வி போதனு பயிற்சிப் பள்ளிகள் நடக்கின்றன. மற்றுமுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்களையும் ஆதாரக் கல்வி முறைக்கு மாற்ற ஏற்பாடு செய்கிறுர்கள். ராஜ்யத்தில் மொத்தம் 350 ஆதாரக் கல்விப் பாடசாலைகள் இருக்கின்றன. ராஜ்யத்திலுள்ள எல்லா ஆரம்ப பாடசாலைகளையும் ஆதாரக் கல்விச் சாலைகளாய் மாற்றவேண்டுமென்பதே சர்க்காரின் அவாவாகும்.

நடுத்தரக் கல்வி

நீண்ட காலமாய் நம் நாட்டில் இந்த நடுத்தரக் கல்வியான ஹை ஸ்கூல் படிப்பு ஒரு சம்பிரதாய முறையாகவே இருந்துவந்தது. நடுத்தரக் கல்வியுடன் தமது படிப்பை முடித்துக்கொள்ளும் மாணவர்கள் குமாஸ்தா வேலைக்குத் தவிர வேறு எந்தத் துறைக்கும் லாயக் கில்லாதவர்களாய் இருந்து வந்தார்கள். எனவே இந்த நடுத்தரக் கல்வி முறையையும் சீர்திருத்தவேண்டுமென்று நம் சர்க்கார் எண்ணினர். நடுத்தரக் கல்வியை முடித்துக்கொண்டு கலாசாலைப் படிப்புக்குப் போகாதவர்கள் ஏதாவது ஒரு கைத்தொழிலில் ஈடுபடத்தக்க பயிற்சிப்பிரிவினையை ஏற்படுத்தியிருக்கின்றனர். தவிர நடுத்தரக் கல்வியில் எல்லாப் பாடங்களையும் அந்தந்தப் பிரதேச மொழிகளில் போதிக்க ஏற்பாடு செய்திருக்கிறுர்கள். சமஸ்கிருதம், அரபி போன்ற பண்டைய மொழிகளையும் தேசீய மொழியாகிய ஹிந்துஸ்தானியையும் போதிக்க சர்க்கார் வசதியளித்துள்ளனர்.

உயர்தரக் கல்வி

சென்ற சில ஆண்டுகளில் கல்லூரிப் படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்துவருகிறது. ராஜ்யத்திலுள்ள கலாசாலைகளில் எல்லா மாணவர்களுக்கும் இடங்கிடைப்பது மிகவும் கஷ்டமாயிருந்தது. எனவே புதுக் கலாசாலைகளைத் திறக்கவும், ஏற்கெனவேயுள்ளனவற்றில் இடவசதிகளை அதிகப்படுத்தவும் சர்க்கார் ஊக்குவித்தனர். 1946-ல் சென்னை ராஜ்யத்தில் 78 கலாசாலைகள் இருந்தன. 1950-ல் அது 98 ஆக அதிகப்பட்டது. இப்பொழுது ராஜ்யத்தில் 100-க்கு மேல் கலாசாலைகள் இருக்கின்றன.

1946-ல் நம் ராஜ்யத்தில் ஒரு எஞ்சினீயரிங் கல்லூரி தானிருந்தது. இப்பொழுது 5 கல்லூரிகள் இருக்கின்றன. சென்னை ராஜ்யத்தில் 8 பல்தொழிற் பயிற்சிச் சாலைகள் நிறுவியுள்ளார்கள். சென்னை நகரில் மத்தியப் பயிற்சி சாலையும் மதுரையில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாகத் தமிழ் நாட்டில் இரண்டும், ஆந்திர தேசத்தில் மூன்றும், மலையாளத்தில் ஒன்றும், தென் கன்னடத்தில் ஒன்றும் அமைத்திருக்கிறார்கள்.

மக்கள் சர்க்கார் பொறுப்பேற்ற பிறகு ஜில்லா தோறும் கல்வி நிலயங்களை அதிகப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். 1946-க்குப்பின் கோயம்புத்தூர் சர்க்கார் கலாசாலையை முதல் தர கலாசாலையாக உயர்த்தியுள்ளார்கள். தொழில் நுணுக்கப்பயிற்சிக் கல்லூரி ஒன்றை அங்கு ஆரம்பித்தார்கள். பி.எஸ்.ஜி. கலாசாலை, நிர்மலா பெண்கள் கலாசாலை ராமகிருஷ்ண மிஷன் ஆசிரியர் பயிற்சி கலாசாலை (பெரிய நாயகன் பாளையம்) இவைகள் சர்க்காரின் உதவிகொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

48 நடுத்தரப் பாடசாலைகள் இந்த ஜில்லாவில் சர்க்கார் உதவியுடன் திறக்கப்பட்டிருக்கின்றன.

தற்போது கோயம்புத்தூரில் 5 கலாசாலைகளும் அந்நகரத்தில் ஆண்களுக்கொன்றும், பெண்களுக் கொன்றுமாக இரண்டு ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளும் அதேவிதமாய்

ஈரோட்டில் இரண்டு, தாராபுரத்தில் இரண்டு பயிற்சிப் பள்ளிகளும், ஜில்லாவில் மொத்தம் 67 நடுத்தரக் கல்விப் பாடசாலைகளும் இருக்கின்றன.

இவை தவிர அவிஞசியில் ஒரு ஆதாரக் கல்விப்பயிற்சி பள்ளியும், பெரிய நாயகன்பாளையத்தில் ஒரு ஆதாரக் கல்விப் பயிற்சி பள்ளியும் உள்ளன. தொழிற் கலாசாலைகளாய் ஆர்தர் ஹோப் பல் தொழிற் பயிற்சிச் சாலையும், பி.எஸ்.ஜி. ஸ்தாபனமும் அமைந்திருக்கின்றன.

கோயம்புத்தூரில் 73 கிராம வட்டாரங்களில் கட்டாயக் கல்விமுறை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 38 முதியோர் கல்விச் சாலைகள் அமைத்திருக்கிறார்கள்.

ராஜ்யத்தின் கல்வி அபிவிருத்தியில் கருத்துள்ள நம் சர்க்கார் பிரதேச மொழிகளின் வளர்ச்சியிலும் அதிக கவனம் செலுத்துகிறார்கள். பிரதேச மொழிகளாகிய, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் இப் பாஷைகளில் வருஷந்தோறும் பிரசுரமாகும் புத்தகங்களில் சிறந்தவற்றிற்குப் பரிசு வழங்குகிறார்கள். இந்த பாஷைகள் மற்றும் சமஸ்கிருதமும் சேர்த்து இவ் வைந்து மொழிகளிலும் ஆஸ்தானக்கவிகளை நம் சர்க்கார் நியமித்துள்ளார்கள். அக்கவிகளுக்கு விருதுகள் வழங்கி, பொன்னாடை போர்த்தி, அவர்களைக் கவுரவிப்பதின் மூலம் நம் மக்கள் சர்க்கார் நம் மொழிகளையே கவுரவிக்கிறார்கள்.

தேசீய மாணவர் படை

ராஜ்யத்திலுள்ள கல்லூரிகள், நடுத்தரக் கல்விப் பாடசாலைகளிலுள்ள மாணவர்களைக் கொண்ட தேசீய மாணவர் படைகளை அமைத்து அவர்களுக்கு பல துறைகளில் பயிற்சியளிக்க நம் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இதன் மூலம் மாணவர்கள், நற்குணம் ஒழுங்கு கட்டுப்பாடு, பிரஜா உரிமை முதலியவைகளில் பயிற்சி பெறுவதுடன் அவசியமேற்படும் பொழுது நாட்டைப் பாதுகாக்கவும் தயாராகிறார்கள்.

பொது சுகாதாரம்

மக்களின் போஷாக்கு, வாழ்க்கைத்தரம் முதலியவற்றை உயர்த்தி, பொதுஜன சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதை, அரசாங்கம் தனது முதன்மையான கடமைகளுள் ஒன்ருகக் கருதும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—47

நாட்டுமக்களைப்பீடிக்கும் நோய்களைத் தீர்க்கவும், அந்நோய்கள் வராமலே தடுக்கவும் மக்கள் சர்க்கார் தீவிரமுயற்சி எடுத்து வருகின்றனர். மக்கள் நோயற்றிருப்பதுவே தேசத்திற்குக் குறைவற்ற செல்வமாகும். எனவே மக்களுக்குப்போதுமான வைத்தியவசதியும் சுகாதார வசதியும் அளிக்க அவர்களுக்குத் திருப்தியானவகையில் சர்க்காரால் கூடிய அளவுக்கு வேண்டிய ஏற்பாடுகளை பொறுப்பு வாய்ந்த நம் சர்க்கார் செய்கின்றனர்.

நம் மக்களில் நோயுற்றிருக்கும் எல்லோரையும் போதுமான அளவுக்குக் கவனிக்க இப்பொழுதிருக்கும் ஆஸ்பத்திரிகள் போதவில்லை. அதிகமான புது ஆஸ்பத்திரிகளை நிர்மாணிக்கவேண்டும், இருக்கும் ஆஸ்பத்திரிகளில் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவேண்டும். இவற்றைச் செய்வ

தற்கு அதிகமான டாக்டர்களும், நர்ஸுகளும் தேவை. இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்போதுமான வைத்தியக் கல்லூரிகளும் வேண்டியிருக்கின்றன. இந்த மார்க்கங்களில் நம் சர்க்கார் விசேஷ கவனம் செலுத்துகின்றனர்.

ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள தலைமை ஆஸ்பத்திரி, தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகள் முதலியவற்றை விஸ்தரித்துக் கட்டி, நோயாளிகளுக்குப் படுக்கை வசதிகளையும் நோயாளிகளைப் பார்க்கவருபவர்களுக்குத் தங்க வசதிகளையும் செய்துகொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்கின்றனர். கிராம பிரதேசங்களில் சுகாதாரபோதனை நிலையங்களைத் திறக்கிறார்கள். கிராம வைத்தியர்களுக்கு ஓரளவு பயிற்சியளிக்கவும் சர்க்கார் ஏற்பாடுசெய்கிறார்கள்.

தாய்மார்களுக்குப் பிரசவ வசதியளிக்கும் வகையில் ராஜ்யத்தில் பலவிடங்களில் பிரசவவிடுதிகளும் சிசுசம்ரக்ஷண நிலையங்களும் புதிது புதிதாய் நிறுவுகின்றார்கள். 1947ல் ராஜ்யத்தில் 318 பிரசவ விடுதிகள் இருந்தன. இப்பொழுது 500க்கு மேல் அமைக்கப்பட்டுள்ளன. சர்க்கார் நிலையங்கள் தவிர தனிப்பட்டவர்களாலோ அல்லது சங்கங்கள் சார்பிலோ அம்மாதிரி நிலையங்கள் நிறுவப்பட்டால் அவற்றிற்கு சர்க்கார் போதுமான பண உதவி செய்கிறார்கள்.

ஏழைகளாயுள்ளவர்களுக்கு சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இலவச சிகிச்சையளிக்கவேண்டிய வசதி செய்கிறார்கள். 50 ரூபாய்க்குக் குறைவாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு இலவச சிகிச்சை செய்யப்படுமென்றிருந்த சலுகையை இப்பொழுது சர்க்கார் 100 ரூபாய் வரை சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் விஸ்தரித்துள்ளனர்.

ஆங்கில வைத்திய முறை போதனை கல்லூரிகளை விஸ்தரிப்பதுடன் இந்திய வைத்தியமுறையை அபிவிருத்தி செய்வதிலும் நம் சர்க்கார் முற்பட்டிருக்கின்றனர். சென்னையில் உள்ள இந்தியவைத்தியப் பயிற்சிப் பள்ளிக்கூடம், கல்லூரி இரண்டையும் நன்கு அபிவிருத்திசெய்து நவீன சாதனங்களை அமைக்க சர்க்கார் 19 லட்ச ரூபாய் ஒதுக்கி இருக்கின்றனர்.

சென்னை ராஜ்யத்தில் இப்பொழுது, சென்னை வைத்தியக்கல்லூரி, ஸ்டான்லி வைத்தியக்கல்லூரி, ஆந்திர வைத்தியகல்லூரி, குண்டூர் வைத்தியக்கல்லூரி, வேலூர் வைத்தியகல்லூரி ஆக ஐந்தும் சென்னையில் இந்திய வைத்திய முறை பள்ளிக்கூடமும் கல்லூரியும் இருக்கின்றன. மதுரையில் ஒரு வைத்தியக்கல்லூரியை அமைக்கவேண்டிய ஏற்பாடு நடந்துவருகிறது. இந்தியமுறை கிராமவைத்திய சாலைகள் 1946ல் நம் ராஜ்யத்தில் 624 இருந்தன. இப்பொழுது அவை 712 ஆக அதிகரித்திருக்கின்றன. அப்பொழுது அந்த வகைக்கு 3,79,000 ரூபாய் செலவானது இப்பொழுது 10 லட்சமாக அதிகரித்திருக்கிறது.

நவீன சிகிச்சை முறைகளிலும் நம் சர்க்கார், வேண்டிய அபிவிருத்தியைச் செய்துவருகிறார்கள். எக்ஸ்ரே ஸ்தாபனங்களைப் பல முக்கிய ஆஸ்பத்திரிகளில் அமைக்கிறார்கள். இரத்த நிதிகளை நிறுவி, நோயாளிகளுக்குத்தகுந்த இரத்தத்தை ஊசிமூலம் செலுத்தி சிகிச்சை செய்கிறார்கள்.

க்ஷயம், குஷ்டம் முதலிய வியாதிகளுக்குப் பிரத்தியேக ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தாம்பரம், மதனப்பள்ளி, பெருந்துறை, திருச்சி முதலிய விடங்களில் க்ஷயரோக நிவாரண சுக வாசஸ்தலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. செங்கல்பட்டிலும், மானுமதுரையிலும் குஷ்டரோக சிகிச்சை ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. மற்றும் தனிப்பட்டவர்கள் ஏற்படுத்தும் விசேஷ ஆஸ்பத்திரிகளுக்கு சர்க்கார் உதவி செய்கின்றனர். சென்னை ராஜ்யத்தில் இப்போது 6 க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. இன்னும் 5 புதிய க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் நிறுவ திட்டம் போட்டிருக்கின்றனர்.

புற்றுநோய் சிகிச்சைக்கு சர்க்கார் சமீபத்தில் பெரும் முயற்சி செய்கிறார்கள். இதற்காகப் பிரத்தியேகமாய் ஒரு திட்டம் வகுத்து அதன்படி ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டி புற்றுநோய்க்குத்தகுந்த சிகிச்சா முறைகளைத் தயாரிப்பதுடன் எங்கெங்கு புற்றுநோய் ஆஸ்பத்திரிகளைத் திறக்கவேண்டுமென்றும் சிபார்சுசெய்யும்.

தற்போது சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலும், எழும்பூர் பெண்கள் ஆஸ்பத்திரியிலும் புற்றுநோய்க்கு சிகிச்சை செய்கிறார்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் தற்போது 53 பொது ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அவற்றில் சர்க்கார் ஆஸ்பத்திரி 13, முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகள் 24, கிராமவைத்தியசாலைகள் 16. இவை தவிர ரயில்வே ஆஸ்பத்திரிகளும், தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆஸ்பத்திரிகளும் சிலவுள்ளன.

ஜில்லா வைத்திய வசதி

ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் சென்ற ஐந்து ஆண்டுகளில் பல அபிவிருத்திகளைச் செய்திருக்கிறார்கள். சில நன்கொடையாளரின் உதவிகொண்டு அங்கு பெண்களுக்கு பிரசவபடுக்கை வசதிகளை அதிகப்படுத்தியிருக்கின்றனர். க்ஷயரோக நிவாரணப்பகுதியொன்றை அமைத்திருக்கிறார்கள், சுமார் 18,000 ரூபாய் செலவில் ஆஸ்பத்திரிதண்ணீர் வசதியை அதிகப்படுத்துகிறார்கள். மின்சாரவசதி அதிகப்படுத்தப்பட்டுள்ளது. தூசித்தொல்லையைக் குறைக்கும் நோக்கத்தில் ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள ரஸ்தாக்களில் தார் பூசியிருக்கிறார்கள். இரத்த பாங்கி ஒன்றை இந்த ஆஸ்பத்திரியில் நிறுவியிருக்கிறார்கள்.

ஒரு நன்கொடையாளரின் உதவியால் இங்கு பெண்கள் ஆஸ்பத்திரியொன்றை நம் சர்க்கார் அமைத்துள்ளனர்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் ஏழு தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஈரோடு ஆஸ்பத்திரிக்குப் புதிய கட்டிடம்கட்ட ஏற்பாடுசெய்கிறார்கள். கோபிச்செட்டிபாளையம் ஆஸ்பத்திரிக்கு 1950-ம் வருஷம் மின்சார வசதி செய்யப்பட்டது. உடுமலைப்பேட்டை ஆஸ்பத்திரியில் 25,000 ரூபாய் நன்கொடை உதவியால் ஒரு பெண்கள் வார்டு அமைக்கப்படுகிறது. தாராபுரம் ஆஸ்பத்திரிக்கு மின்சார வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கொள்ளேகாலம் ஆஸ்பத்திரியில் மருந்துவாங்கவரும் நோயாளிகளுக்கு

வசதியளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அங்கு ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் நர்ஸ்களுக்கு ஜாகை வசதி செய்துகொடுக்க ஏற்பாடுநடக்கிறது.

இந்த ஜில்லாவின் வைத்தியசாலைகள் பராமரிப்புக்காக நம் சர்க்கார் வருஷத்தில் சுமார் 11 லட்ச ரூபாய் செலவு செய்கிருர்கள்.

சுகாதாரம்

நோய்வந்தபின் சிகிச்சை செய்வதைவிட, நோய்வராமல் தடுப்பதே மேலானது. இது சுகாதார இலாகாவின் குறிக்கோள். மக்களின் தேகசுகத்திற்கான மார்க்கங்களை இந்த இலாகா பிரசாரமூலம் மக்களுக்குப் போதிக்கின்றனர். தொத்துநோய்கள் பரவாமலிருப்பதற்கு என்னென்ன முன் எச்சரிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவற்றை இந்த இலாகா கவனித்துவருகிறது. க்ஷயரோகத் தடையாக பி.சி.ஜி. வாக்ஸினேஷனை சமீபத்தில் பரீக்ஷார்த்தமாக நம் சர்க்கார் கையாளுகிருர்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் மலையோரமாயுள்ள பிரதேசங்களில் மலேரியா ஜுரம் அடிக்கடி தோன்றிக்கொண்டிருக்கிறது. அந்த ஜுரத்தைப் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதற்கு சுகாதார இலாகா வேண்டிய ஏற்பாடு செய்துவருகிறது. 1947-ம் வருஷத்திலிருந்து ஆனைமலையிலொன்றும், பவானியிலொன்றுமாக இரண்டு மலேரியா யூனிட்டுகள் வேலைசெய்துவருகின்றன, மலேரியா கொசுக்களை அழிப்பதற்கு D.D.T. மருந்தை உபயோகித்தும் ஜுரம் கண்டவர்களுக்கு கொயினு மருந்தை விநியோகித்தும் சேவைபுரிகிருர்கள். இதனுல் இந்த ஜில்லாவில் 85 கிராமங்களிலுள்ள சுமார் இரண்டு லட்சம் மக்கள் நன்மையடைந்து வருகிருர்கள்.

கொய்னு மருந்து எடுக்கப்படும் சின்கோனு தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் க்ஷேமநலனுக்காக பிரத்தியேக அதிகாரிகள் 1949-ம் வருஷத்திலிருந்து வேலைசெய்கிருர்கள். ஆனைமலைப்பிரதேசத்தில்

சின்கோனு 7,050 ஏக்கரில் பயிராகிறது. நீலகிரியில் 2,380 ஏக்கரில் பயிராகிறது. பொதுஜனப் பிரதிநிதிகள் பொறுப்பேற்றபிறகு 4,400 ஏக்கர் வரை அதிகமான சின்கோனு தோட்டங்களை உற்பத்திசெய்திருக்கின்றனர்.

ஆனைமலையில், ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு தற்காலிகமாய் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நவீன கொயினு தொழிற்சாலைக் கட்டிடத்தை உடனேகட்டிமுடிக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். இரண்டு ஆண்டுகளில் அதைக் கட்டிமுடிக்கலாமென்றும், அந்த தொழிற்சாலை ஒரு லட்சம் பவுண்டு கொயினு உற்பத்திசெய்யக்கூடியதென்றும் சொல்லப்படுகிறது.

ஆனைமலை சின்கோனு தோட்டத்தில் வேலைசெய்யும் சர்க்கார் சிப்பந்திகளுக்கும் தொழிலாளிகளுக்கும் வைத்திய வசதியளிக்கும் வகையில் ஆனைமலையில் பத்துலட்ச ரூபாய் செலவில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியை நிர்மாணித்திருக்கிறார்கள். நீலகிரித் தோட்டங்களில் வேலைசெய்கிறவர்களுக்கும் ஒரு ஆஸ்பத்திரியை அமைக்க நமது சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள்.

கிராமச் சீரமைப்பு

இந்தியாவின் ஜீவன் அதனுடைய ஏழு லட்சம் கிராமங்களில்தான் இருக்கிறது ; என்று இந்தக் கிராமங்கள் அனைத்தும் பிறர் கையை எதிர் பாராமல், தம்முடைய தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின்றனவோ, அன்றுதான், இந்நாடு பரிபூரண சுதந்திரம் பெற்ற நாடாக முடியும்.

—மாகாத்மா காந்தியடிகள்

அழகிய சிறு கிராமம் ; திட்டம் வகுத்து நிர்மாணிக்கப்பட்ட வீதிகள், வீடுகள்; வீடுகளைச் சுற்றிலும் செழித்து வளர்ந்த மரங்களும் பூஞ்செடி கொடிகளும் ; ஊரைச் சுற்றியுள்ள கழனிகளில் பலவிதமான உணவு தானியங்களும் வாணிபப் பயிர்களும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. கிராம மக்கள் நன்கு திருப்தியுடன் காணப்படுகின்றனர். இத்தகைய இலட்சிய கிராமம் வெறும் கனவல்ல ; கிராம மக்களே தங்கள் முயற்சியால் சாதித்துக் கொள்ளக்கூடிய விஷயம்தான். இதில் நமது சர்க்காரும் கிராம நல இலாகா மூலம் ஆன உதவியைச் செய்து வருகிறார்கள்.

நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களும் இவ்வாறு சுய நிறைவுள்ளதாக விளங்கவேண்டுமென்பதுதான் நம் நாட்டின் தந்தையான மகாத்மாவின் ஆசை. அந்த இலட்சியத்தை அடைவதற்கான பல நிர்மாணத் திட்டங்களை வகுத்து அவைகளை நிறைவேற்றும்படி அவர் நமக்குப் பணித்தார்.

சென்னையில் 1946-ம் வருஷம் மக்கள் சர்க்கார் நிர்வாகப் பொறுப்பேற்றதும் கிராம அபிவிருத்தித் திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவந்தனர். ஆரம்பத்தில் 34 பிர்க்காக்களில் வேலை துவக்கினர். ஒவ்வொரு பிர்க்காவிலும் ஐந்து முதல் பத்து வரை கிராமங்களை இணைத்து அந்த கிராமங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க முற்பட்டனர். கிராம மக்களும் இந்த முயற்சியை நன்கு வரவேற்று அபிவிருத்திகளைச் செய்வதற்கு ஒத்துழைக்கிறார்கள். இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் 84 பிர்க்காக்களில் அபிவிருத்தி வேலை நடக்கின்றது. 2,500 கிராமங்களுக்குமேல் அந்த பிர்க்காக்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

பிர்க்கா அபிவிருத்தி

பிர்க்காக்களில் கிராம ரஸ்தாக்கள் அமைத்தல், குடிதண்ணீர் கிணறுகள் வெட்டல், சுகாதார வசதிகளை ஏற்படுத்தல் முதலிய சீர்திருத்தங்களைக் கிராம அபிவிருத்தி இலாகாவும் கிராம மக்களும் சேர்ந்து செய்கின்றனர். அபிவிருத்தி வேலைகளுக்கு ஆகும் செலவுகளை சர்க்கார் கொடுக்கும் பணத்துக்கு அதிகமாய் வேண்டியதை மக்களே ஏற்றுக்கொள்கிறார்கள். ரஸ்தாக்களுக்குத் தேவையான நிலங்களை அவர்கள் இலவசமாய்க் கொடுக்கிறார்கள். ரஸ்தாக்கள் போடுவதற்கான கல், மண் முதலிய சாமான்களைக் கொடுக்கிறார்கள். இன்னும் பல கிராம மக்கள் ரஸ்தாபோடும் வேலையைத் தாங்களே ஏற்றுச் செய்கிறார்கள். இவ்விதங்களில் கிராம வாசிகள் பல துறைகளிலும் சர்க்காருடன் ஒத்துழைத்து தங்கள் கிராமங்களை சீர்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் பல்லடம், அவிநாசி, திருப்பூர், வெள்ளக்கோயில் முதலிய நான்கு இடங்களில் பிர்க்கா அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றன. பல்லடம், அவிநாசி பிர்க்காக்களில் இதுவரை 60 மைல் நீளத்தில் 19 பெரிய ரஸ்தாக்களும் 20 மைல் நீளத்தில் சிறிய ரஸ்தாக்களும் போட்டிருக்கிறார்கள். இந்த ரஸ்தாக்களுக்கு ஆன செலவில் ஏறக்குறைய பாதியை கிராம மக்கள் கொடுத்து உதவியுள்ளார்கள்.

கிராமங்களின் நலனுக்காக ஜில்லா கலெக்டர் தமது யுக்தம்போல் செலவு செய்வதற்காகக் கொடுக்கப்படும் நிதியிலிருந்தும் சில கிராம ரஸ்தாக்களை அமைத்திருக்கிறார்கள். இவற்றிற்கும் மக்களிடமிருந்து நன்கொடை வசூலிக்கப்படுகிறது. திருப்பூர் பிர்க்காவில் திருப்பூர்-காங்கேயம் ரோட்டிலிருந்து செவந்தாம்பாளையத்திற்கும், மணியக்காரன் பாளையம் வழியாக திருப்பூர்—ஊத்துக்குளிக்கும் சுமார் 4 மைல் நீளம் ரஸ்தாக்கள்போட ரூ. 1,000 வரை மக்கள் கொடுத்திருக்கிறார்கள்.

வெள்ளக்கோயில் பிர்க்காவில் சுமார் 28 மைல் நீளமுள்ள 22 கிராமப் பாதைகளை ரஸ்தாக்களாக அமைத்திருக்கிறார்கள். இதற்கு ரூ. 14,500 செலவாகியிருக்கிறது. ரூ. 8,300 சர்க்காரும், ரூ. 6,200 கிராம மக்களும் கொடுத்திருக்கிறார்கள். இந்த 22 ரஸ்தாக்களும், 90 கிராமங்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்துகின்றன.

மேலும், 20 மைல் நீளத்தில் 5 பெரிய ரஸ்தாக்களை சர்க்கார் அமைத்திருக்கிறார்கள். இவற்றிற்கு சர்க்கார் 30,000 ரூபாயும் பொது மக்கள் 13,000 ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள்.

இவை தவிர மொத்தச் செலவையும் மக்களே ஏற்றுக்கொண்டு சர்க்கார் உதவியில்லாமலே சுமார் 5 மைல் நீளத்தில் இரண்டு ரஸ்தாக்களைப் போட்டிருக்கிறார்கள். கிராம அபிவிருத்தியில் மக்களுக்கு இருக்கும் ஆர்வத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

பிர்க்காக்களிலுள்ள கிராமங்களுக்குக் குடி தண்ணீர்

வசதியேற்படுத்தும் நோக்கத்தில் பல்லடம், அவினுசி பிர்க்காக்களில் 56 கிணறுகள் வெட்டியிருக்கிருர்கள். இதில் 34 கிணறுகள் ஹரிஜனங்களுக்காக அமைக்கப்பட்டன. வெள்ளக்கோயில் பிர்க்காவில் 25 கிணறுகள் வெட்டியுள்ளார்கள். அதில் 9 கிணறுகள் ஹரிஜனங்களுக்காக ஏற்பட்டவை. கிணறுகள் வெட்டும் செலவையும் சர்க்காருடன் மக்களும் பகிர்ந்து கொள்கிருர்கள்.

கல்வி

பல்லடம், அவினுசி பிர்க்காக்களில் 15 பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு ஜில்லா கலெக்டரின் யுக்தானுசார செலவு நிதியிலிருந்து பணங் கொடுக்கப்பட்டபோதிலும் அதற்கு நாலு பங்கு அதிகமாய் மக்கள் பண உதவி செய்திருக்கிருர்கள். 21 முதியோர் கல்விச்சாலைகள் நிறுவியுள்ளார்கள். இந்தப் பள்ளிகளில் முதியோர் கல்விச்சாலை ஒவ்வொன்றுக்கும் மாதம் ரூ. 15-ம் இதர பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 8ம் கல்வி இலாகா கொடுத்து உதவுகிறது.

வெள்ளக்கோயில் பிர்க்காவில் 9 பள்ளிக்கூடங்கள் கட்டியிருக்கிருர்கள். இதற்கு சர்க்கார் ரூ. 760-ம் மக்கள் ரூ. 12,000-மும் உதவியிருக்கிருர்கள். ஏழைக் குழந்தைகளுக்கு ரூ. 780 வரை புத்தகங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிருர்கள். முதியோர் கல்வி நிலையங்கள் 14 அமைக்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவு

வெள்ளக்கோயில் பிர்க்காவில் 26 கூட்டுறவு நாணய சங்கங்கள் ஏற்படுத்தியுள்ளனர். மாஜி கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்காக வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் 15 அமைத்திருக்கிருர்கள். பல்லடம், அவினுசி பிர்க்காக்களில் 52 கிராமங்களிலும் திருப்பூர் பிர்க்காவில் 22 கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபித்திருக்கின்றனர்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் 412 கிராம நாணய சங்கங்களும், 39 நெசவாளர் சங்கங்களும், 8 பால் விநியோக சங்கங்களும் குடியேற்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றும் வீடு கட்ட உதவும் சங்கங்கள் 5-ம் பொருள் விற்பனை உதவிச் சங்கங்கள் மூன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

மாஜி கள்ளிறக்கும் தொழிலாளர்களின் நன்மைக்காக ஜில்லாவில் 187 வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 1950-ம்௵ டிசம்பர் மீ 31உ வரை 18,246 பேர் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்துள்ளனர். 1½ லட்சம் ரூபாய்க்குமேல் பங்கு மூலதனம் சேர்ந்திருக்கிறது. 1950-ம் ௵ ஜூன் மீ 30உ முடிய 4,75,232½ மணங்கு பனை வெல்லம் தயாரிக்கப்பட்டு 4,53,929½ மணங்கு ரூ. 29,37,450–11–0-க்கு விற்கப்பட்டிருக்கிறது. 6,989 மணங்கு தென்னை வெல்லம் தயாரிக்கப்பட்டு ரூ. 49,077-க்கு விற்கப்பட்டது. 1950-ம் ௵ ஜூலை மீ 1உ முதல் 1950-ம் ௵ டிசம்பர் மீ 31உ முடிய 1,38,394½ மணங்கு தென்னை வெல்லம் அவர்களால் தயாரிக்கப்பட்டு ரூ. 10,71,564–8–0-க்கு விற்கப்பட்டுள்ளது.

பிர்க்கா அபிவிருத்தி வேலையில் பிரதேச விவசாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அபிவிருத்தி செய்யப்பட்ட வித்துகளை உபயோகிக்கவும், உரங்களைத் தயாரிக்கவும் விவசாயிகள் தூண்டப்படுகிறார்கள். ரேடியோ வசதியுள்ள இடங்களில் விவசாயிகள் ஒன்று சேர்ந்து ரேடியோ சங்கங்கள் அமைத்திருக்கிறார்கள். ரேடியோவில் ஒலிபரப்பப்படும் விவசாய விஷயங்களை அவர்கள் கேட்கிறார்கள். அவ் விஷயங்களைப்பற்றி அவர்கள் கூடி ஆலோசனை செய்கிறார்கள். தங்கள் ஆலோசனை முடிவுகளை அவர்கள் அவ்வப்போது விமர்சனங்களாய் ரேடியோ நிலையங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். இது ஒரு நல்ல முன்னேற்ற முறை என்பதில் சந்தேகமில்லை.

கதர் அபிவிருத்தி சம்பந்தமாய் பல்லடம் பிர்க்காவில் 600 ராட்டினங்களை விநியோகித்து நூல் நூற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தீவிர கதர் திட்டம் அவிஞசி பிர்க்காவில் 1947-ம்ஸ் ஜனவரிமீ நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. 27 கிராமங்களில் இத் திட்டம் பரவியிருக்கின்றது. இந்த பிரதேசத்தில் தற்சமயம் 6,751 ராட்டைகள் வேலை செய்கின்றன. இது வரை 25,22,500 சிட்டங்கள் நூற்கப்பட்டிருக்கின்றன. வருஷத்தில் வேலையில்லாத மாதங்களில் இந்த ராட்டைகளை உபயோகிப்பது மூலம் கிராம வாசிகள் ரூ. 3,33,793 வரை ஊதியம் பெறுகிறார்கள்.

மேலே கூறப்பட்ட நூல் சிட்டங்களைக்கொண்டு 6,30,500 சதுர கெஜம் துணி நெய்திருக்கிறார்கள். இப்பிரதேசத்தில் சுமார் 2,000 நெசவாளர் குடும்பங்களிருக்கின்றன. இவர்களுக்கு நெசவு கூலியாக திட்ட ஆரம்ப முதல் 1950-ம்ஸ் டிசம்பர் முடிய ரூ. 2,81,540 கொடுக்கப்பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர் ஜில்லாவில் குடிசைக் கைத்தொழிலாக முக்கியமாய் தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல், விவசாயத்திற்கு வேண்டிய இரும்புக் கருவிகள் செய்தல் முதலியன நடைபெறுகின்றன. இத் தொழில்களைப் போதுமான அளவுக்கு அபிவிருத்தி செய்ய பிரசாரம் செய்யப்படுகிறது.




நெசவுத் தொழிலும் பெரிய அளவு குடிசைக் கைத்தொழிலாகவே கருதப்படுகிறது. குடிசைக் கைத்தொழில் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திருக்கிறார்கள்.


பஞ்சாயத்து ராஜ்யம்

கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கான வழிகோலி, தனித்தனி சுயாட்சி ஸ்தாபனங்களாகப் பணியாற்றுவதற்கு அவசியமான அதிகார உரிமைகளை அவற்றுக்கு அரசாங்கம் அளிக்கும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—40

நாட்டின் மக்களில் பெரும்பாலோர் கிராம வாசிகள். ஆகவே நாட்டின் உயிர்நாடி கிராமத்தில் தான் இருக்கிறது. நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் நமது கிராமங்கள் சீர்பட்டு முன்னேற்ற மடையவேண்டும். எந்தத் திட்டத்திற்கும் கிராமமே அடிப்படையாயிருக்க வேண்டும். அரசியல் முறையிலும், நிர்வாக முறையிலும் முன்னேற்றத் திட்டங்களுக்கு அஸ்திவாரம் கிராமத்தில் தான் நிறுவப்பட வேண்டும். ஜனநாயக முறையும் கிராமத்தில் தான் ஆரம்பிக்கவேண்டும். இந்த உண்மையை நாட்டின் தந்தையான மகாத்மா அடிக்கடி வற்புறுத்தி வந்தார். அந்தப் போதனையைப் பின் பற்றியே இந்திய அரசியல் சட்டத்திலும் கிராமங்களுக்கு சுய ஆட்சி வழங்க


தமிழ் நாட்டின் தலைசிறந்த
நீர்த் தேக்கம்
பவானி சாகரம்
உருவாகிறது


எல்லோரும் சமம்
ஆலயஞ் செல்வோம்
பலவேலைகள் செய்வோம்
அனைவரும்கூடி வாழ்வோம்

வேண்டுமென்று நிர்ணயித்துள்ளார்கள். கிராம சுய ஆட்சிக்கு ஆதாரமாக பஞ்சாயத்து ராஜ்யம் நிறுவப்படவேண்டும். பஞ்சாயத்து முறை புராதன மென்றாலும் தற்கால ஜனநாயக முறைக்கு ஒத்ததேயாகும். சென்னை ராஜ்யத்தில் புது, கிராம பஞ்சாயத்துக்கள் சட்டம் 1951-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியில் அமுலுக்கு வந்திருக்கிறது. புதுச் சட்டப்படி ஜனத்தொகை 500-க்கு மேற்பட்ட எல்லா கிராமங்களுக்கும் பஞ்சாயத்துக்கள் அமைக்க வேண்டியது கட்டாய மாக்கப்பட்டிருக்கிறது. ஜனத்தொகை 500-க்குக் குறைவாயுள்ள இரண்டு மூன்று கிராமங்களை இணைத்தும் அவற்றிற்குப் பொதுவாய் ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்தலாம். புதுச் சட்டம் அமுலுக்கு வருமுன் சென்னை ராஜ்யத்தில் 8,325 கிராம பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. புதுச் சட்டத்தின்படி இன்னும் 15,830 கிராம பஞ்சாயத்துக்கள் அமைக்க வேண்டியிருக்கின்றன.

பஞ்சாயத்து அமைப்பு

பஞ்சாயத்துச் சபை அமைப்பில் புதுச் சட்டத்தின் கீழ் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு முன் கிராமங்களில் உள்ள ஓட்டர்கள் பஞ்சாயத்து சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து விடுவார்கள். அந்த அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகவும் மற்றொருவரை உப தலைவராகவும் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்.

புதுச் சட்டத்தின்படி ஓட்டர்களிலேயே மாறுதல் இருக்கிறது. சட்ட சபைத் தேர்தல்களுக்கு உள்ளது போன்று பஞ்சாயத்து சபை தேர்தலுக்கும் வயது வந்தோர் ஓட்டுரிமை முறை அனுஷ்டிக்கப்படும். அந்த ஓட்டர்கள் சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதுடன் சபைத் தலைவரையும் அவர்களே தேர்ந்தெடுத்து விடுவார்கள். உபதலைவரை தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். முன்னேற்ற மடையாத வகுப்பினர்களுக்கு மட்டும் 10 வருஷங்களுக்கு பஞ்சாயத்து சபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படும்.

ஜனத்தொகை 5000-க்கும் வருமானம் ரூ. 10,000 க்கும் குறையாத பஞ்சாயத்துக்கள் முதல் வகுப்பு பஞ்சாயத்துக் களாகும். மற்றவை இரண்டாம் வகுப்பு பஞ்சாயத்துக்க ளாகும். முதல்வகுப்பு பஞ்சாயத்துகளுக்கு நிர்வாக அவசி யத்தை முன்னிட்டு பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளை சர்க்கார் நியமிப்பர் அப்படிப்பட்ட பஞ்சாயத்து பிர தேசத்தில் சப்ரிஜிஸ்த்ரார் காரியாலயம் இல்லாவிட்டால், ஓரளவுக்குப் பத்திரம் பதிவு செய்யும் அதிகாரம் நிர்வாக அதிகாரிக்குக் கொடுக்கப்படும்.

பஞ்சாயத்துப் பிரதேசத்துக்கு வேண்டிய குடி தண்ணீர், சாக்கடை, ரஸ்தாக்கள் பராமரித்தல் போன்ற எல்லா வசதிகளையும் அந்த பஞ்சாயத்து சபையே கவனித்துக் கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய பணத் தைச் சேர்க்க பஞ்சாயத்து சபைக்கு வரி விதிக்கும் அதி காரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. புதுச் சட்டப்படி பஞ்சாயத்து சபையின் நிர்வாகத்தில் ஜில்லா போர்டுக்கோ அல்லது கலெக்டருக்கோ எந்த வித மேலதிகாரமும் கிடையாது. கிராமபிரதேசத்தின் ஒழுங்கையும் அமைதியை யும் நிலைநாட்டும் நிர்வாகம்வரைதான் ஜில்லாகலெக்டர் தலை யிடலாம். இதர விஷயங்களில் நிர்வாகம் முற்றிலும் கிராம பஞ்சாயத்தினிடமே கொடுக்கப்படுகிறது. இந்த முறை மூலம் பஞ்சாயத்து ஆட்சி, சுய ஆட்சியாகப் பரிணமிக் கிறது. கிராம மக்களின் க்ஷேமநலனுக்குவேண்டிய எல்லா வற்றையும் அவர்களுடைய பிரதிநிதிகளே செய்துகொடுக்க வேண்டுமென்பது இந்த சட்டத்தின் நோக்கமாகும். இந் நிலையில் பஞ்சாயத்து சபைகளின் அலுவல்களுக்கு சர்க்கார் தான் நேரடியான மேலதிகாரம் வகிப்பார்கள். ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டர் மூலம் அந்த மேலதிகாரம் நிர் வகிக்கப்படும். கிராமக் கோர்ட்டுச் சட்ட சிவில், கிரிமினல் வழக்கு விசாரணைகளையும் பஞ்சாயத்து சபையே நடத்தும்.

கோயம்புத்தூரில் கோயம்புத்தூர் ஜில்லா போர்டும், கோயம்புத்தூர், தாராபுரம், ஈரோடு, பொள்ளாச்சி, திருப் பூர், உடுமலைப்பேட்டை, மேட்டுப்பாளையம், கோபிச்செட்டி

பாளையம் ஆகிய 8 முனிசிபாலிட்டிகளும், 23 பெரிய பஞ்சாயத்துக்களும், 236 சிறிய பஞ்சாயத்துக்களும் இப்பொழுது இருக்கின்றன.

சென்னை ராஜ்யத்தில் ஸ்தல ஸ்தாபன ஆட்சி ஆரம்பமாகி நூறு ஆண்டுகளாய்விட்டன. அந்த ஆட்சிமுறையை மக்களின் நலனுக்காகச் சீர்திருத்தும் வகையில் ஸ்தல ஸ்தாபனச் சட்டத்தைப் பல தடவைகளில் திருத்தியமைத்திருக்கிறார்கள். மக்கள் சர்க்கார் பதவியேற்ற பின்னும் பல தடவைகள் சட்டத்தைத் திருத்தியுள்ளார்கள். ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்கள் தங்களுக்கு அதிகமான அதிகாரங்களிருந்தால் நிர்வாகம் திறம்பட நடைபெற முடியுமென்று சர்க்காருக்கு அறிவித்துள்ளார்கள்.

ஹரிஜன முன்னேற்றம்

மக்களுள் பலதுறைகளிலும் தாழ்ந்துள்ள வகுப்பினரின்—முக்கியமாக ஷெட்யூல் வகுப்பு, மலைஜாதி ஆகியவற்றைச் சேர்ந்தவரின்—கல்வி, பொருளாதார உரிமைகளை விசேஷ கவனத்துடன் அபிவிருத்தி செய்து, சமூக அநீதி, மற்றும் அது போன்ற எல்லா இடர்ப்பாடுகளினின்றும் அவர்களை அரசாங்கம் பாதுகாக்கும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—46

ஹரிஜன முன்னேற்ற விஷயத்தில் மகாத்மா தம் ஆயுள் பூராவும் ஊக்கம் செலுத்திவந்தார். காந்தியடிகளும் மற்றும் சில சமூக சீர்திருத்தத் தலைவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத் தீண்டாமையொழிப்புக்கொள்கை ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறது. சென்னை சர்க்காரும் இவ்விஷயத்தில் தீவிர முயற்சி எடுத்துக்கொள்கின்றனர்.

1937-ம் ஆண்டு முதல் 1939-ம் ஆண்டுவரையில் இம்மாகாணத்தில் முதல் முதல் ஜனப் பிரதிநிதி மந்திரிசபை ராஜாஜி தலைமையில் நிர்வாகம் நடத்தியபோது துவக்கிய

தீண்டாமை ஒழிப்பு வேலையை 1946-ம் ஆண்டு முதல் பொறுப்பேற்ற மக்கள் சர்க்கார் பூர்த்தி செய்திருக்கிருர்கள்.

ஹரிஜன ஆலயப் பிரவேசச் சட்டமும், ஹரிஜன சிவில் உரிமைத் தடையொழிப்புச் சட்டமும் ஹரிஜன மக்களின் அந்தஸ்தைப் பெருமளவுக்கு உயர்த்தி யிருக்கின்றன. மக்கள் சர்க்கார் பொறுப்பேற்றதும் இச்சட்டங்களை உடனடியாக வகுத்து நடைமுறையில் கொண்டுவந்தார்கள். ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கென்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினுர்கள். அதை எந்த முறையில் செலவுசெய்யவேண்டுமெனத் திட்டம் வகுக்க ஒரு ஹரிஜன ஷேமநலக் கமிட்டியை சர்க்கார் அமைத்தனர். பிறகு அந்த கமிட்டியின் சிபார்சின்படி ஹரிஜன முன்னேற்றத்தைக் கவனிக்கவென்று தனி இலாகாவே ஏற்படுத்திவிட்டனர்.



ஹரிஜனக் குழந்தைகளின் கல்வி அபிவிருத்திக்காக சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள் மகத்தானவை. அவர்களை எந்தப் பள்ளிகளிலும் சேர்த்துக் கொள்ள மறுக்கக் கூடாதென்றும், அப்படி ஜாதி காரணமாய் மறுக்கும் ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் உதவி கிடையாதென்றும் உத்தரவிட்டனர். பள்ளிக்கூட வசதியில்லாத விடங்களில் ஹரிஜனங்களுக்கென்று பிரத்தியேக பள்ளிகள் ராஜ்யத்தில் 1,300 வரை ஏற்படுத்தி யிருக்கிருர்கள். நடுத்தர, உயர்தர கல்விச்சாலைகளிலும் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஹரிஜனங்களுக்கென்று ஸ்தானங்கள் ஒதுக்கியுள்ளார்கள். ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு பகல் உணவு அளிக்க வருஷத்தில் ரூ. 12 லட்சத்துக்குமேல் செலவாகிறது. மொத்தத்தில் ஹரிஜன மாணவர்களுக்கு

உபகாரச் சம்பளமாக 1949–50-ல் சர்க்கார் ரூ. 5½ லட்சம் வரை கொடுத்திருக்கிறார்கள். இன்னும் புத்தகம், உடை, ஹாஸ்டல் வசதி முதலியவற்றிற்காகவும் சர்க்கார் மானியம் அளிக்கின்றனர்.

சென்னை ராஜ்யத்தில் 19 ஹாஸ்டல்களை ஹரிஜன க்ஷேமநல இலாகா நடத்துகிறது. இவை தவிர 356 தனிப்பட்டவர் நிர்வாக ஹாஸ்டல்களும் இருக்கின்றன. இவைகளில் 8,000-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு வருஷத்தில் தலா ரூ. 150 சர்க்கார் மானியம் கொடுக்கின்றனர். இந்த வகையில் சர்க்காருக்கு ரூ. 11 லட்சம் செலவாகிறது.

ஹரிஜனங்களுக்கு வீடுகட்ட மனைகள் வழங்குவதிலும் சர்க்கார் வேண்டிய முயற்சி எடுக்கின்றனர். 1949–50 முடிய நமது ராஜ்யத்தில் சர்க்கார் நிலத்திலிருந்து 49,208 மனைகளும் தனிப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து விலைக்கு வாங்கி 46,001 மனைகளும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு விவசாயத்துக்கும் நிலங்கள் கொடுக்கிறார்கள்.

ஹரிஜனங்கள் வக்கீல் வேலைக்குப் படித்து அட்வகேட் பட்டம் பெற விரும்புகிறவர்களுக்கு ஹைகோர்ட்டில் சன்னத்பணம் கட்டவேண்டியதினின்றும் விதிவிலக்களிக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனர் ஒருவருக்கும் ஜாதி ஹிந்துவுக்கும் ஏதாவது கோர்ட்டுத் தாவா ஏற்படுமானால் ஹரிஜனருக்கு சட்ட வாத உதவியளிக்க சர்க்கார் சமீபத்தில் தீர்மானித்துள்ளனர். இந்த உதவி கோருகிறவர்களுக்கு ஜில்லா கலெக்டர் சிபார்சு செய்யவேண்டும்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் ஹரிஜன க்ஷேமாபிவிருத்தி கிராம முன்னேற்றப் பிரதேசத்தில் அதி தீவிரமாக கவனிக்கப்படுகிறது. காவலூர், செம்பிபாளையம், ரங்கசமுத்திரம், சொக்கம்பாளையம் முதலிய இடங்களில் 200 ஹரிஜனக் குடும்பங்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வகைக்கு சர்க்காரும், மற்றும் கிராமத்திலுள்ள பணக்காரர்களும் பண உதவி செய்திருக்கிறார்கள்.


தொழில் அபிவிருத்தி

> விவசாயம், கைத்தொழில் அல்லது இதர துறைகளில் உழைக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை, ஜீவனத்துக்கேற்ற ஊதியம், கண்ணிய வாழ்க்கைத் தரத்துக்கேற்ற வேலை நிபந்தனைகள், சமூக, கலாசார வசதிகள், ஓய்வின் பூரண நுகர்ச்சி முதலிய சௌகரியங்களை, தகுந்த சட்டம் அல்லது பொருளாதார அமைப்பின் மூலம் அளிக்க அரசாங்கம் முயலும்.
>
> —இந்திய அரசியல் அமைப்பு
> ஷரத்து—43

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆதாரமாக உள்ளது தொழில்வளம். தொழில் பெருகும் பொழுது நாட்டின் செல்வமும் அந்தஸ்தும் தானாகவே வளர்ச்சி யுறுகிறது. எனவே நம் தேசத்தின் தொழில் வளத்திலும் தொழிலாளர் நலத்திலும் சர்க்கார் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். தேசத்தில் ஏற்கெனவே இருந்த தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்யவும் புது தொழிற்சாலைகளை அமைக்கவும் மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் பெரிதும் உதவி செய்கின்றனர்.

சென்னை ராஜ்யத்தில் சர்க்கார், கைத்தொழில் உதவி நிதி என்று பணம் ஒதுக்கி பல கைத்தொழில்களுக்குக் கடன் கொடுத்து உதவுகிறார்கள். பெரிய கைத்தொழில் களுக்கு உதவுவதற்காக கைத்தொழில் உதவிநிதி கார்ப்ப ரேஷன் ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றனர். திருநெல் வேலி, திருச்சி, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் சிமின்டு தொழிற்சாலைகளும், கோயம்புத்தூர், திருநெல்வேலி, இராம நாதபுரம் ஜில்லாக்களில் ஜவுளி உற்பத்தியும், திருநெல் வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் தீக்குச்சி தயாரிப் பும் அதிகரித்து வருகிறது. இன்னும் மோட்டார், சைக்கிள் உற்பத்தி தொழிற்சாலைகளும் சென்னையில் நிறுவி வருகின்றனர்.

கோயம்புத்தூர் ஜில்லா பஞ்சாலைத் தொழிலில் பெரிதும் அபிவிருத்தி யடைந்துள்ளது. அது தவிர பஸ் போக்கு



வரத்து, எஞ்ஜினீயரிங் கைத்தொழில், சிமின்டு உற்பத்தி, முதலிய தொழில்களும் அங்கு பெருகி வருகின்றன. பீடி, சுருட்டு, கைத் தறி, சாயம் போடுதல், தோல் பதனிடுதல், காபி, தேயிலைத் தோட் டங்கள் முதலியனவும் இந்த ஜில்லாவில் அபி விருத்தியடைகின்றன. எல்லா கைத்தொழில் களுக்கும் சர்க்கார் வேண்டிய உதவிகளைச்செய்கிறார்கள். அந்த உதவிகளில் மிகவும் முக்கியமானது தொழிலாளர்— முதலாளிகளுக்குள் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைக்க கைத்தொழில் டிரிப்யூனலை ஏற்படுத்தியதுதான்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் 37 பஞ்சாலைகள் இருக் கின்றன. சுமார் 30,000 தொழிலாளர்கள் அங்கு வேலை

செய்கிருர்கள். 1949-ம் வருஷம் வரை அங்கு தொழிலாளர் வேலை நிறுத்தம், நிர்வாகத்தினர் கதவடைப்பு ஆகிய புயல்கள் பலமாக அடித்துக் கொண்டிருந்தன. கைத்தொழில் டிரிப்யூனல் செய்த சேவையால் அப்புயல்கள் ஒருவாறு ஓய்ந்தன. 1949-க்குப் பின் அங்கு கைத்தொழில் அமைதி நிலவி வருகிறது.

தோட்டத் தொழில் சம்பந்தப்பட்ட வரையில் கோயம்புத்தூர் ஜில்லாவில் தேயிலை, காப்பி, ஏலம், சின்கோனு முதலியவை ஆனைமலையில் சுமார் 120 சதுர மைல் விஸ்தீர்ணத்தில் பயிராகின்றன. இந்தப் பிரதேசத்தில் சுமார் 30,000 தொழிலாளர்கள் வேலை செய்கிருர்கள். இவற்றில் சின்கோனு தோட்டம் மட்டும் சர்க்காரைச் சேர்ந்தது. இதில் 3000 தொழிலாளர் வேலை செய்கின்றனர்.

தொழிலாளர் நலன்

தொழில் அபிவிருத்திக்குத் தொழிலாளர் ஊக்கம் மிகவும் அவசியம். தொழிலாளர் எல்லா விஷயத்திலும் மன திருப்தியுடனிருந்தால்தான் வேலையில் ஊக்கம் காட்டுவார்கள். எனவே தொழிலாளரின் நலத்தில் நம் சர்க்கார் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர். அவர்களுடைய வேலை நேரங்களை நிர்ணயித்தும், போதுமான விடுமுறை கொடுத்தும், குறைந்தபட்சக் கூலியை நிர்ணயஞ் செய்தும் சர்க்கார் சட்டங்களை வகுத்துள்ளனர்.

தோட்டத் தொழிலாளரின் நலத்தில் நம் சர்க்கார் விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்கிருர்கள். இந்தத் தொழிலாளர் எல்லோருமே சமவெளிப் பிரதேசத்திலிருந்து வேலை தேடி வந்தவர்கள். தோட்டத்தில் வேலையில்லாத காலங்களில் அவர்களை அவர்களுடைய ஊர்களுக்கு அனுப்பி விடுவது தோட்ட முதலாளிகளின் வழக்கமாயிருந்து வந்தது. அந்தக் காலங்களில் தொழிலாளர் வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டார்கள். இவ்விஷயத்தில் நம் சர்க்கார் கவனம் செலுத்தி, வருஷம் பூராவுமே அவர்களை வேலையில் வைத்துக்கொள்ளும்படி தோட்ட முதலாளிகளைக் கேட்டுக்

கொண்டனர். இதன் காரணமாக தொழிலாளர் பெரிதும் நன்மையுடைந்துள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்குக் கடனுதவி செய்ய ஒரு கூட்டுறவு பாங்கி வால்பாறையில் ஆரம்பித்திருக்கிறார்கள், இதற்கு சர்க்கார் வருஷத்தில் 3,000 ரூபாய் மானியம் கொடுக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு மளிகைச் சாமான்கள் சுலபமாய்க் கிடைக்கும் பொருட்டு நான்கு கூட்டுறவு பண்டகசாலைகள் நடத்துகிறார்கள்.

சர்க்கார் சின்கோனா தோட்டத்தில் தொழிலாளர்களுக்காக கூட்டுறவு முறையில் 7 பலகாரக் கடைகள் நடத்துகிறார்கள். சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவச வைத்திய உதவி செய்ய சர்க்கார் 10 லட்ச ரூபாய் செலவில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியை அமைத்திருக்கின்றனர். மற்றத் தோட்டங்களிலும் முதலாளிகள் ஆஸ்பத்திரிகளை நிறுவியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குத் தோட்டங்களில் குடியிருப்பு வீட்டு வசதிகளும் செய்து கொடுக்கிறார்கள்.

1947-ம் வருஷம் வரை தோட்டத் தொழிலாளிக்கு தினம் 8 அல்லது 9 அணா கூலி கொடுக்கப்பட்டது. சர்க்காரின் முயற்சியின் பேரில் இப்பொழுது அந்தத் தொழிலாளி தினம் ரூ. 1–5–9 கூலி பெறுகிறார். அவர்களுடைய வருஷ சம்பளத்தில் $6\frac{1}{4}$ சத விகிதம் போனஸ் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பெண் தொழிலாளர்களுக்கு பிரசவ கால உதவியாக தினம் ஒன்றுக்கு 12 அணா வீதம் இரண்டு மாத காலத்துக்குக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளனர்.

பட்டு உற்பத்தி

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள மற்றுமோர் முக்கிய கைத்தொழில் பட்டுநூல் உற்பத்தி. இதைச் சர்க்காரே செய்கின்றனர். கொள்ளேகாலம் பட்டு நூல் உற்பத்தி தொழிற்சாலையில் 500 தொட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன இங்கு உற்பத்தியாகும் பட்டுநூல் மிகவும்

உயர்ந்த ரகமென்று சொல்லப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலையில் நூல் முறுக்கேற்றும் யந்திர மொன்றை அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்கிறார்கள். அப்படி முறுக்கேற்றப்பட்ட பட்டுநூலைக் கைத்தறிகளுக்கு நியாயமான விலைக்கு விநியோகிக்கவேண்டுமென்பது சர்க்காரின் நோக்கம். அங்கு 12 கைத்தறிகளையும் ஸ்தாபித்துள்ளார்கள். நல்லபட்டு ஜவுளிகள் அவைகளில் உற்பத்தியாகின்றன.

பட்டுப்புழு வளர்ப்பதை நிர்வகிக்க சர்க்காரின் கைத்தொழில் இலாகாவில் ஒரு தனிப்பகுதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் முசுக்கட்டைச் செடி பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்கிறார்கள். கொள்ளேகாலம் பிரதேசத்தில் சுமார் 25,000 ஏக்கரில் முசுக்கட்டை பயிராகிறது. ஏக்கருக்கு ரூ. 50 வீதம் வருஷத்தில் ரூ. 20,000 வரை விவசாயிகளுக்கு அந்த இலாகா கடன் கொடுக்கிறது.

சர்க்கார் கைத்தொழில் உதவி நிதியிலிருந்து கோயம்புத்தூர் ஜில்லாவில் 4 ஜவுளி மில்களுக்கும், 2 ஜவுளி மில் கருவிகள் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும், ஒரு வனஸ்பதி தொழிற்சாலைக்கும், ஒரு உர உற்பத்தி சாலைக்கும் ஆக 16½ லட்சம்வரை கடன் கொடுத்திருக்கிறார்கள்.

வாக்குரிமை

மக்கள் சபைக்கும், ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்ட சபைக்கும், வயது வந்தோர் வாக்குரிமை என்னும் அடிப்படையின் கீழ் தேர்தல் நடைபெறும்.

—இந்திய அரசியல் அமைப்பு ஷரத்து—326

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் இந்திய மக்களின் இப்போதைய முக்கிய பொறுப்பாகும். உண்மையான ஜனநாயக முறை எந்த அளவுக்கு நம் நாட்டில் ஸ்தாபிக்கப்படுகிறதோ, அதற்குத் தகுந்தபடி சுதந்திரமும் நிலைக்கும்; சுய ஆட்சியும் நன்கு நடைபெறும். இந்த உயர்ந்த தத்துவங்களை மனதிற் கொண்டே, இந்திய ஜனத் தலைவர்கள் அரசியல் நிர்ணய சபையை நிறுவி, சுதந்திர இந்திய ஜனநாயக அரசாங்க அமைப்புக்கான சட்டங்களை நிறைவேற்றினர்.

1950-ம் வருஷம் ஜனவரி 26-ந் தேதியன்று இந்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற, மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட, மக்கள் சர்க்கார் நிர்வாகம்தான் இந்த அரசியல் சாசனத்தின்

நோக்கமாகும். எனவே மக்களுக்குத்தான் இங்கு பூரண அதிகாரம் உண்டு.

ஜனநாயக அரசியல் அமைப்புக்குள்ள பொறுப்பு அதிகமானதாகும். இதே மாதிரி ஜனநாயக ஆட்சியை விரும்பும் மக்களுடைய பொறுப்பும் அதிகமாயுள்ளது. சுதந்திரமென்னும் குழந்தை, ஜனநாயகமென்னும் தொட்டிலில் தவழ்ந்து வளருவதற்கு, வாக்குரிமை சரியான சந்தர்ப்பமளிக்கிறது.

துணிச்சலான தீர்மானம்

நம் தேசத் தலைவர்கள் எடுத்தவுடனேயே வயது வந்தோர் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கத் துணிந்தனர். வயது வந்தோர் ஓட்டுரிமை என்பது தேச ஆட்சியில் எவ்வளவு மகத்தான சக்தி வாய்ந்ததென்பதையும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் நம் தலைவர்கள் தெரிந்து கொள்ளாமலில்லை. ஆனால், ஜன நாயக சர்க்காரென்றால், அதில் மக்களில் பெரும்பாலானவர்களின் உண்மைப் பிரதிநிதிகள் நிர்வாகம் நடத்தவேண்டும். இந்த ஒரே நோக்கத்தில்தான், நம் தலைவர்கள் மிகவும் தைரியத்துடன் இம்முறையை அனுஷ்டிக்க முன் வந்திருக்கிறார்கள்.

ஜனநாயக மென்பது மக்களின் சர்க்கார். மக்கள் எல்லோரும் சேர்ந்து ஆட்சி புரியவேண்டும். அப்படிச் செய்வது நடைமுறையில் சாத்தியமானதல்ல. எனவே, மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் ஆட்சி நடத்துவதென்ற சம்பிரதாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டசபை அங்கத்தினர்களை மக்கள் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். அந்தச் சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பாலானவர்களைக் கொண்ட அரசியல் கட்சியினர், தங்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுப்பர். அத் தலைவர் ராஜ்யத்தின் முதல் மந்திரியாக நியமிக்கப்படுவார். ராஜ்ய நிர்வாகத்தில் தமக்கு உதவி புரியச் சிலரைத் தம் சக மந்திரிகளாய் நியமிக்கவேண்டுமென்று, முதல் மந்திரி, ராஜ்ய கவர்னருக்கு சிபாரிசு செய்

வார். இம்மாதிரி மந்திரி சபையமைக்கப்படும். மந்திரிகள் சட்ட சபைக்கும், சட்டசபை மக்களுக்கும் பொறுப்பாவர். இந்தப் பார்லிமென்டரி முறைகள் பூராவும் இந்திய அரசியல் சட்டத்தில் விவரமாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் தொகை அதிகரித்தல்

இந்த நியதி மூலம் 5 வருஷத்திற்கு ஒரு தடவை பொதுத்தேர்தல் இன்றியமையாததாகிறது. தேர்தலில் வாக்காளராவதற்குச் சில தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட யோக்கியதாம்ச நிபந்தனைகள் பிரகாரம், 1920-ம் வருஷம் ஜனத்தொகையில் 2 அல்லது 3 சத விகிதமும் 1937-ல் 14 சத விகிதமும் வாக்காளரானூர்கள். இப்பொழுது வயது வந்தோர் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, ராஜ்ய மக்களில் 21 வயது பூர்த்தியானவர்கள் எல்லோரும் வாக்காளர்கள்தான். இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டியதும், 21 வயது பூர்த்தியாக வேண்டுமென்பதுந்தான், வாக்காளராவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முக்கிய யோக்கியதாம்சங்கள். இவற்றின்படி ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் வாக்காளராகிறார்கள்.

சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 1951-ம்ஞு த்து ஜன சங்கியைக் கணக்குப்படி 56,952,332. அதில் ஆண்கள் 28,413,661. பெண்கள் 28,538,671. மொத்த ஜனத்தொகையில் ஆண்கள் 49·9 சத விகிதமும் பெண்கள் 50·1 சத விகிதமும் இருக்கிறார்கள். 1941-ம் வருஷத்து கணக்குப்படி ராஜ்யத்தின் ஜனத்தொகை 49,847,508. எனவே, சென்ற பத்து வருஷங்களில் சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 7,104,824 அதிகரித்திருக்கிறது. 1941-ல் ஒரு சதுர மைலுக்கு 390 பேர்கள் வசித்தார்கள்; 1951-ல் 446 பேர்கள் வசிக்கிறார்கள்.

1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28 நாட்களிலும், சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜனசங்கியைக் கணக்கெடுப்பவர்கள் வேலை செய்தார்கள். இதற்கு முன்னால் நடைபெற்ற

ஜன சங்கியைக் கணக்கெடுப்பு மாதிரியில்லாமல், இந்தக் கணக்கெடுப்பில் சர்க்காரால் அதிக கவனம் செலுத்தப் பட்டு, அதிகப்படியான புள்ளி விவரங்களும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

பிரதிநிதிகள் எண்ணிக்கை

தற்போதுள்ள வாக்காளர் ஜாப்தாக்களின் பிரகாரம் சென்னை ராஜ்யத்தில் 271 லட்சம் ஓட்டர்கள் இருக்கிறார்கள். இவர்கள் நம் ராஜ்ய சட்டசபைக்கு 375 அங்கத்தினர்களையும், மத்திய சட்டசபையான டெல்லி பார்லிமெண்டில் மக்கள் சபைக்கு நம் ராஜ்யப் பிரதிநிதிகளாய் 75 அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சென்னை மேல் சபையில் மொத்தம் 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் ஸ்தல ஸ்தாபனங்களின் மூலம் 24 பேரும், பட்டதாரித் தொகுதியிலிருந்து 6 பேரும், ஆசிரியர் தொகுதியிலிருந்து 6 பேரும் தேர்ந்தெடுக்கப்படுவர். சென்னை ராஜ்ய கீழ்ச் சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து தனியாக 24 பேரை சென்னை மேல் சபைக்குத் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களைத் தவிர, மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் 12 அங்கத்தினர்களை நியமனம் செய்வார்.

டெல்லி பார்லிமெண்டின் மேல் சபையில் மொத்தம் 205 அங்கத்தினர்கள் இருப்பர். 'கவுன்ஸில் ஆப் ஸ்டேட்' எனப்படும் அந்தச் சபையில், சென்னை ராஜ்யத்தின் சார்பாக 27 பேர் அங்கம் வகிப்பார்கள்.

தவறான முறைகளைத் தவிர்க்க

பொதுவாக, தேர்தல் காலங்களில், இறந்தவர்கள் வந்து ஓட்டுப் போடுவதுதான் மிகவும் விசித்திரமானது. அபேட்சகர்களின் ஆட்கள் இதற்கென்று விசேஷ கவனம் செலுத்தி, ஜாப்தாவிலுள்ள பெயர்களில் இறந்துபோனவர்களுக்குப் பதில் நபர்கள் தயார் செய்யக்கூடும். அவர்கள் வந்து இறந்து போனவர்கள் பெயர்களைத் தம்மதென்று

சொல்லி ஓட்டுப்போட்டு விட முடியும். இந்தக் கெடுதலைத் தடுப்பதற்கு, வரப்போகும் தேர்தலில் ஒரு அடையாள மிடும் முறையைக் கையாளவேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவர் ஓட்டுப் போடவரும்பொழுது அவருடைய விரலில் ஒரு வித மை பூசப்படும். அந்த மை குறைந்தது ஒரு வாரம் அழியாமலிருக்கும். எனவே, எவரும் தப்பான பெயரில் மீண்டும் ஓட்டுப் போடமுடியாது.

அகில இந்திய ரீதியில் பரிசீலனை

சென்னை ராஜ்யத்தில் தேர்தல் தொகுதிகள் பிரிப்பதில் ஜில்லா எல்லைகளை மட்டும் கூடுமானவரை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், முன்னேற்ற மில்லாத வகுப்பினர்களுக்கு ஸ்தானம் ஒதுக்கப்படும் தொகுதிகள் மட்டும் இரட்டை அங்கத்தினர் தொகுதிகளாகவும், மற்றைய தொகுதிகள் ஒற்றை அங்கத்தினர் தொகுதிகளாகவே யிருக்கவேண்டுமென்றும், சென்னை சர்க்கார் சிபாரிசு செய்தனர். அவ் விஷயம் சென்னை அசெம்பிளி யிலும் கவுன்சிலிலும் நன்கு விவாதிக்கப்பட்டு சர்க்காரின் சிபாரிசு அங்கீகரிக்கப்பட்டது.

இது பற்றிய எல்லா விஷயங்களையும் அகில இந்திய ரீதியில் சரிவர ஆராய்ந்து, இந்தத் தேர்தலை நடத்த, பிரத்தியேகமாய் ஒரு தேர்தல் கமிஷனரை மத்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். அவர் தேர்தலின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் தாமே கவனித்துத் தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். தேர்தல் தொகுதிகள் நிர்ணயித்தல், தேர்தல் நடத்துவதற்கான சாமான்களைத் தயாரித்தல் முதலியன நடைபெற்று வருகின்றன.

சென்னை ராஜ்யத்தின் வாக்காளர் ஜாப்தா தயாரிப்பதற்கு 29 லட்சம் ரூபாய் செலவாயிருக்கிறது. காகித விலை மட்டும் 6 லட்சம். தேர்தல் நடத்த 3 லட்சம் 'பாலட்' பெட்டிகளுக்குமேல் வேண்டியிருக்கின்றன. அவைகள் எஃகு பெட்டிகளாகவே யிருக்கவேண்டுமென்று தீர்

மானிக்கப்பட்டிருக்கிறது. சராசரி ஒரு பெட்டிக்கு 6 ரூபாய் விலையாகிறது. எனவே, அந்த வகைக்கு குறைந்தது 20 லட்சம் ரூபாய் செலவாகும். இன்னும் தேர்தல் ஸ்தலங்கள், அதற்கு வேண்டிய இதர சாமான்கள், காவல் கட்டுப்பாடுகளெல்லாம் இருக்கின்றன.

அஸ்திவார மிடுவதிலும் கூட்டு முயற்சி

இதற்கிடையில், அரசியல் கட்சியினர் பலர் தங்கள் கருத்துக்களை அறிவிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. அரசாங்கம் இதற்கென பல்வேறு அரசியல் கட்சியினரை நேரில் அழைத்து விரிவான ஆராய்ச்சி நடத்தினர். நம் ராஜ்யத்திலுள்ள அரசியல் கட்சியினர் பலரும் அதில் கலந்துகொண்டது பாராட்டத்தக்கதாகும். ஜனநாயக வளர்ச்சிக்கு இத்தகைய காரியங்கள் எவ்வளவு அவசியமானவை என்பதைப்பற்றி அதிகம் கூற வேண்டியதில்லை.

பொதுஜனத் தொடர்பு

ஜனநாயகத் தன்மையில் வளரும் அரசாங்கம், அவ்வப்போது தன்னுடைய அலுவல்கள் சம்பந்தமாகவும், பொது நல விஷயங்கள் சம்பந்தமாகவும், பொது மக்களுடன் உறவு பூண்டு, அவர்களுக்குத் தேவையான விவரங்களை அறிவிக்க வேண்டியது அவசியம். இத் துறையில் செய்தி இலாகா தன்னால் இயன்ற அளவு தொண்டாற்றி வந்துள்ளது.

ஜில்லா விவரங்கள்

கோயம்புத்தூர் ஜில்லாவில் மொத்தம் 14,65,741 வயது வந்த வாக்காளர்கள் இருப்பதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் 20 பிரதிநிதிகளை சென்னை அசம்பிளிக்கும் 4 பிரதிநிதிகளை மத்திய மக்கள் சபைக்கும் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்த ஜில்லாவில் அசெம்பிளித் தேர்தலுக்கு ஒற்றை அங்கத்தினர் தொகுதிகள் 14-ம் இரட்டை அங்கத்தினர் தொகுதிகள் 3-ம் உள்ளன.

அமைதியும் அபிவிருத்தியும்

> தேசிய வாழ்க்கை சம்பந்தமான எல்லா ஸ்தாபனங்களிலும், சமூக, பொருளாதார, அரசியல், நீதி முறை பொருந்தி விளங்குதற்குரிய ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தி, அதைத் திறமையுடன் பாதுகாக்கும் வகையில் மக்களின் நலத்தைப் பேணி வளர்க்க அரசாங்கம் முயற்சி செய்யும்.
>
> —இந்திய அரசியல் அமைப்பு
> ஷரத்து—38

நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்து மக்கள் சர்க்கார் பதவியேற்றதும் பல பிரச்னைகளைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு ஏற்பட்டது. உணவுப் பஞ்சம் துணிப் பஞ்சங்களைப் போக்குவதே அவர்களுடைய முதற் கடமையாகயிருந்தது. அன்றாட நிர்வாகம் ஒருபுறம், நாட்டுக்குவேண்டிய அபிவிருத்திக் கொள்கைகள் ஒருபுறம். பஞ்ச நிவாரண வேலைகள் மற்றொருபுறம். இம்மாதிரியுள்ள நெருக்கடியான சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ள சமூக விரோதிகளின் கூட்டமொன்று தலை தூக்கியது. ராஜ்யம் முழுவதிலும் ஆங்காங்கு நாசவேலைகள் செய்ய ஆரம்பித்தனர். கொலை, கொள்ளை, ரயில்களைக்

கவிழ்த்தல் முதலிய சதி வேலைகளில் ஈடுபட்டனர். இப் புதுப் பிரச்னையையும் எதிர்த்துப் போராடவேண்டிய அவசியம் நம் சர்க்காருக்கு ஏற்பட்டது. நயத்தாலும் பயத்தாலும் எவ்வளவோ சொல்லியும் அந்த நாசவேலைக்காரர் வழிக்கு வருவதாய்த் தெரியவில்லை. உடனே சென்னை பொதுஜன அமைதிப் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி நாசவேலையில் ஈடுபடுபவர்களை சர்க்கார் பாதுகாப்புக் கைதிகளாக்கினர். நாசவேலைக்காரரின் தொல்லை அதிகமாயிருந்த இடங்களில் போலீஸ் பந்தோபஸ்தை அதிகப்படுத்தி பொது மக்களுக்குப் பாதுகாப்பளித்தனர்.

ஹைதராபாத் எல்லை, மற்றும் சில தென் ஜில்லாக்களில் தான் முக்கியமாய் அந்த சமூக விரோதிகள் தொல்லை கொடுத்துவந்தனர். அவர்களை அடக்குவதற்காக சர்க்கார் போலீஸ் படைகளைப் பெருக்கினர். பல புதிய போலீஸ் ஸ்டேஷன்களை ஏற்படுத்தினர். இந்த வகையில் 1946-ம் வருஷம் ரூ. 4 கோடியாக இருந்த போலீஸ் இலாகா செலவு 1949-ல் ரூ. 7 கோடியாக அதிகரித்துள்ளது. போலீஸ் நன்கு திறமையுடன் வேலைசெய்து நாசவேலைக்காரர்களை அறவே ஒடுக்கிவிட்டார்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் 1946-ம் வருஷத்தில் 72 இடங்களில் நாசவேலைக்காரர்களின் தொல்லைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. 1947-ல் 34 ஆகவும், 1948-ல் 5 ஆகவும், 1949-ல் 12 ஆகவும் தொல்லைச் சம்பவங்கள் நடந்து, 1950-ல் ஒரே ஒரு சம்பவமாகக் குறைந்துவிட்டது. இந்த ஜில்லாவில் 25 போலீஸ் ஸ்டேஷன்களைப் புதிதாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

உயிர்ப்பலித் தடை

கடவுள் பெயரால் மிருகங்களையும், பட்சிகளையும் பலியிடுவதைத் தடை செய்ய நம் சர்க்கார் ஒரு சட்டம் வகுத்துள்ளனர். இது ஒரு ஜீவகாருண்யச் செயலாகும். இந்த சட்டத்தை மீறி உயிர்ப்பிராணிகளைப் பலியிடுகிறவர்களுக்கும், அதற்கு உடந்தையா யிருப்பவர்களுக்கும்,

அபராதமும் சிறைத் தண்டனையும் விதிக்க அந்தச் சட்டம் அதிகாரமளித்துள்ளது.

பஞ்ச நிவாரணம்

சென்ற நான்கு வருஷங்களாய் சென்னை ராஜ்யத்தில் பருவ மழை சரியாய்ப் பெய்யவில்லை என்பதும், சில பிரதேசங்களில் அமித மழை வேண்டாத காலத்தில் பெய்து புயலும் அடித்து சேதப்படுத்தியதும் எல்லோரும் அறிவார்கள். இதனுல் ராஜ்யத்தில் பல ஜில்லாக்களில் பஞ்ச நிலைமை ஏற்பட்டு விவசாயிகளும் தொழிலாளர்களும் வேலையின்றித் தவிக்கும்படி நேர்ந்தது. இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க பல அபிவிருத்தித் திட்டங்களையும் மராமத்து வேலைகளையும் ஆரம்பித்து வேலையில்லாதவர்களுக்கு உதவி செய்ய சர்க்கார் முனைந்தனர்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் தாராபுரம், உடுமலைப் பேட்டை, ஈரோடு, பல்லடம் ஆகிய தாலூகாக்களில் அவ்வித நெருக்கடி ஏற்பட்டது. ரோடு போடுதல், கிணறு வெட்டுதல், ஏரி குளம் முதலியவற்றைச் செப்பனிடுதல் முதலிய வேலைகளை அங்கு மேற்கொண்டனர். ரஸ்தாக்கள் அமைப்பதில் 1,28,309 பேர்களுக்கும், கிணறு வெட்ட 41,841 பேர்களுக்கும், மற்றும் பொது மராமத்து வேலைகளில் 43,993 பேர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்ற வருஷங்களில் விவசாயிகளுக்குப் பல லட்சக் கணக்கில் சர்க்கார் வரி வஜா செய்திருக்கிருர்கள். அவர்கள் சர்க்காருக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டிய கடன் தவணைகளையும் ஒத்திப்போட்டிருக்கிருர்கள்.

1946–47 முதல் 1949–50-ம் வருஷம் வரை கோயம்புத்தூர் ஜில்லாவில் சர்க்கார் வரி வஜா செய்திருக்கும் தொகை வருமாறு—

1946–47.	1947–48.	1948–49.	1949–50.
ரூ. 65,071.	ரூ, 8,36,589,	ரூ. 1,00,250,	ரூ, 7,43,942.

கோயம்புத்தூர் ஜில்லா பஞ்ச நிவாரணக்கமிட்டி தற்போது ஜில்லாவில் 21 இடங்களில் கஞ்சித்தொட்டியை

நடத்துகிறது. இன்னும் 11 தொட்டிகள் அமைக்க உத்தேசித்திருக்கிறது. இதற்காக அனுமதிக்கப்பட்ட ரூ. 5,000-ம் போக இன்னும் ரூ. 10,000 அனுமதிக்க வேண்டுமென்று சர்க்காரை ஜில்லா கலெக்டர் கேட்டிருக்கிறார்.

இந்தியா பூராவுக்குமே ஒரு வழிகாட்டியாக விளங்கும் வகையில் நம் சென்னை சர்க்கார் பல அரிய செயல்களைப்புரிந்துள்ளனர். அவற்றில் முக்கியமானவை மது விலக்கு, நீதி நிர்வாகப் பிரிவினை, மாதர் க்ஷேமநல அபிவிருத்தி இம் மூன்று மாகும்.

மது விலக்கு

மதுபானம் எவ்வளவு கொடிய தென்பதை யாரும் சொல்லவேண்டியதில்லை. அதனால் ஏழை மக்கள் பட்ட கஷ்டம் கணக்கிலடங்காதது. குடிகாரன் வீடு விடியாதென்று பெண்கள் கூறுவதில்தான் விசேஷ பொருளுண்டு. காரணம் குடியினால் வரும் கேடுகளைக் குடிகாரருடைய வீட்டுப் பெண்கள்தான் அனுபவித்து வந்தார்கள். இன்று நம் ராஜ்யத்தில் பூரண மது விலக்கு ஏற்பட்டபின் அதனால் அளவு கடந்த நன்மையை அடைந்திருப்பதும் அவர்களே.

1939-ல் முதலாவது மக்கள் சர்க்கார் ஆட்சியிலிருந்த பொழுதே மது விலக்குத் திட்டம் அமுலுக்கு வந்தது. சேலம் ஜில்லாவில் மட்டும் ஆரம்பத்தில் புகுத்தப்பட்டது. ஆனால் மற்ற ஜில்லாக்களுக்கு அந்தத் திட்டம் விஸ்தரிக்கப் படுமுன் மக்கள் சர்க்கார் பதவியிலிருந்து விலகும்படி நேர்ந்தது. அதன் பின் ஏற்பட்ட அட்வைசர் ஆட்சியில் மது விலக்குத் திட்டம் ரத்து செய்யப்பட்டது.

1946-ல் மீண்டும் மக்கள் சர்க்கார் பொறுப் பேற்றனர். உடனே தங்கள் மது விலக்குக் கொள்கைக்குப் புத்துயிர் அளித்தனர். 1946-ம் ஹு அக்டோபர்மீ 2-ம் தேதி 8 ஜில்லாக்களில் மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டது. 8 ஜில்லாவாக மூன்று கட்டங்களில் மது விலக்குத் திட்டத்தைப்

புகுத்தி 1948-ம் வரு அக்டோபர்மீ 2-ம் தேதி சென்னை ராஜ்யம் முழுதிலும் பூர்ண மது விலக்கை அமுலுக்குக் கொண்டுவந்தனர்.

மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிறவர்களுக்குத் தகுந்த தண்டனை நிர்ணயித்து அந்தச் சட்டத்தை அமுல் நடத்த தீவிர ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்கின்றனர். மது விலக்கு இலாகாவிடமிருந்து இந்தச் சட்ட அமுல் அதிகாரம் சிறிது சிறிதாக போலீஸுக்கு மாற்றப்பட்டு வருகிறது.

மது விலக்கை அமுலுக்குக்கொண்டுவந்ததால் சென்னை சர்க்காருக்கு ரூ. 17 கோடி வரை வருமானத்தில் குறைவு ஏற்பட்டுள்ளது. குடியை ஒழித்த மக்களின் பொருளாதார அபிவிருத்தி நிலையைக் கவனித்தால் இந்த 17 கோடி ரூபாய் ஒரு பெரிதல்ல. கிராமாந்திரங்களுக்குச் சென்று அங்கு கள்ளுக்கடை சாராயக் கடைகள் இருந்த இடங்களை நேரில் பார்த்து அங்குள்ள மக்களை நேரில் கண்டு சம்பாஷித்தால்தான் மது விலக்குத் திட்டத்தால் ஏற்பட்டிருக்கும் நன்மையின் உண்மை புலனுகும். கலால் வருமானத்திற்கு நான்கு மடங்குத் தொகை [முன் குடியில் செலவிடப்பட்டது.] இப்போது சேர்த்து வைக்கப்பட்டு மாடு, மனை, நிலம் முதலியவை வாங்க உபயோகப்படுகிறது. இதனுல் மக்கள் பொருளாதாரநிலை உயர்ந்து சுபிட்சத்திற்குவழியாகிறது.

கள்ளுக் கடைகள் இருந்த இடங்களில் தேநீர்க்கடைகள் தோன்றியிருக்கின்றன. குடிப் பழக்கமுள்ளவர்கள் அதை மறப்பதற்காக விளையாட்டுகள், கதா காலட்சேபங்கள், நடனங்கள், நாடகங்கள் நடைபெறுகின்றன. அவர்களுடைய பணத்தைச் சேமிப்பதற்கும் ஏற்பாடு செய்கிறுர்கள்.

மாஜி கள்ளிறக்குந் தொழிலாளர்கள் ஜீவனுேபாயத்துக்கான இதர பல மார்க்கங்களைச் சர்க்கார் செய்திருக்கின்றனர். அவர்களுக்காக கூட்டுறவு வெல்ல உற்பத்தி சங்கங்களும், கூட்டுறவு பால் விநியோக சங்கங்களும் அமைத்துள்ளார்கள். மற்றும் பல இலாகாகளில் மாஜி

கள்ளிறக்குந் தொழிலாளர்களுக்கு வேலைகொடுக்கும் படியும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் மது விலக்குத் திட்டம் 1946-ம்ஞு அக்டோபர்மீ 1வ-யில் அமுலுக்குவந்தது. ஆரம்பத்தில் குடியை மறக்கத்தக்க விளையாட்டுகளிலும் வேடிக்கைகளிலும் மக்களின் மனதைத் திருப்ப சர்க்கார் ஏற்பாடு செய்தனர். பின்னால் மக்களின் ஊக்கம் கிராம அபிவிருத்தியில் திருப்பப்பட்டது.

அநேகமாய் ஜில்லாவிலுள்ள எல்லா கிராமங்களிலுமாக 768 கிராம சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்கள், மக்களின் க்ஷேம நலனுக்காகவும் கிராமங்களின் அபிவிருத்திக்காகவும் உழைத்துவருகின்றன. பள்ளிக்கூடங்கள், வாசகசாலைகள், ரேடியோக்கள், ரஸ்தாக்கள் முதலியன அமைக்கும் வேலைகளில் கிராம சங்கங்கள் முக்கிய கவனம் செலுத்துகின்றன.

நீதி நிர்வாகப் பிரிவினை

மக்கள் சர்க்கார் செய்த மகத்தான சீர்திருத்தங்களில் நீதி நிர்வாகப் பிரிவினையும் ஒன்று. கிரிமினல் வழக்குகள் ஓரளவுக்கு ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் மேற்பார்வையிலேயே நடந்துவந்தது. புது சீர் திருத்தத்தின்படி சிவில், கிரிமினல் விவகார சம்பந்தமான எல்லா வழக்கு விசாரணைகளும் ஹைகோர்ட்டு அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. இந்த முறையில் ஒரு ஜில்லாவின் கலெக்டரும் மாஜிஸ்ட்ரேட்டுமாக ஒருவரே பதவி வகிக்க முடியாது. இதனால் நீதி வழங்குதல் மிகவும் நேர்மையாய் நடைபெற முடியும். மக்களும் இதைப் பெரிதும் வரவேற்கின்றனர்.

நீதி நிர்வாகப் பிரிவினை முதலாவதாக 1949 அக்டோபர்மீ 2வ-யில் வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய இரண்டு ஜில்லாக்களிலும் புகுத்தப்பட்டது. பின்னர் படிப்படியாக 14 ஜில்லாக்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் 1950-ம்ஞு ஆகஸ்ட்டுமீ 15வ-யில் இம் முறை அமுல் செய்யப்பட்டது.


மாதர் நலம்


சமூதாய முன்னேற்றத்துக்கு மக்களில் பாதிக்கு அதிகமாயுள்ள பெண்வர்க்கம் முன்னேற வேண்டியது அவசியம். இந்த மார்க்கத்தில் இந்தியாவிலேயே சென்னை ராஜ்யந்தான் முதலாவதாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாதர் க்ஷேம நல இலாகாவென்று ஒரு தனி இலாகா இதற்காக வேலை செய்கிறது. நகரங்களிலும் கிராமங்களிலுமாக பல மாதர் நல பயிற்சி நிலையங்களை அந்த இலாகா அமைத்திருக்கிறது. அவ்விடங்களில் மாதர்களுக்கு வேண்டிய கல்வியும், மனைமாட்சி, சிசு பராமரிப்பு, தையல், பின்னல் வேலைகள் முதலியன போதிக்கப்படுகின்றன.

கோயம்புத்தூர் ஜில்லாவில் மாதர் நல இலாகா கிளைகள் கோயம்புத்தூர், பல்லடம், அவிநாசி ஆகிய மூன்று இடங்களில் வேலை செய்கின்றன. கோயம்புத்தூர் கிளையில் 6 சேவா வட்டாரங்களும், பல்லடத்திலும் அவிநாசியிலும் தலா மூன்று வட்டாரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. 1950-ம் வருஷத்தில் கோயம்புத்தூர் கிளையில் 128 பேரும், பல்லடத்தில் 55 பேரும், அவிநாசியில் 42 பேரும் பயிற்சி பெற்றார்கள். அவர்களுக்கு நூல் நூற்றல், தையல் வேலை மற்றும் பல பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. முதியோர்கல்வி போதனையும் இந்த நிலையங்களில் நடத்தப்பட்டது. இவ் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.




ஆடையளிக்கும்
ஆட்களுக்கு வேலையும்
கொடுக்கும்
ஆலைகள் நிறைந்தது
கோவை


கிராம சுய நிறைவுக்கு
வெள்ளக் கோயில்
பஞ்சு வாங்கிச்சென்று,
நூல் நூற்றுக் கொடுக்கிறார்கள்.
நூலுக்குத் துணி
கதர் அபிவிருத்தி அவசியம்
புடவைக்குப் பாவு

ஐந்தாண்டுத் திட்டம்

- ஆண் பெண் உள்ளிட்ட எல்லாப் பிரஜைகளும் ஜீவனோபாயத்துக்காகப் போதிய வழிவகைகளைச் சமமாகப் பெறவேண்டும்.
- பொது நலத்தை முன்னிட்டு, சமூக சொத்து சுதந்திரங்களின் சொந்தமும் கட்டுப்பாடும் வகுக்கப்படவேண்டும்.
- செல்வமும் பொருள் உற்பத்திச் சாதனங்களும் பொதுஜனங்களுக்குப் பாதகமாகாத ரீதியில் ஒரு சிலரிடம் சேர்ந்துவிடாதபடி, பொருளாதார அமைப்பு இயங்கிவரப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இந்திய திட்டக் கமிஷனின் கொள்கைகள்.

காலம் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. காலச்சக்கரத்தை யார்தான் தடைசெய்ய முடியும்? ஆயினும் அதன் நியதியை உணர்ந்து, அதற்கேற்ப தங்கள் வாழ்வை ஆராய்ந்து அமைத்துக்கொள்வோரும் இல்லாமலில்லை. அத்தகையோர் காலத்தோடு சேர்ந்து முன்னேறும் ஆற்றலைப் பெறுகின்றனர்.

சென்ற காலத்தை நினைவில் வைத்துக்கொண்டு, நிகழ்காலத்தில் கடமைகளைச் செய்தவண்ணமே, எதிர்

காலத்தைப்பற்றியும் சிந்திக்கும் திறமை, மனிதர்களுக்குள்ள ஒரு சிறப்பான ஆற்றலாகும். மிருகங்கள் அன்றாட வாழ்க்கையைப்பற்றிமட்டும் கவலைப்படுகின்றன. நேற்றைய நினைவும், நாளைய எண்ணமும் இல்லாத நிலை, நாகரிகம் வளராததன் அறிகுறி.

பொதுவான இந்த உண்மைகள் தனி மனிதனுக்கு மட்டும் பொருந்துவன அல்ல. மொத்த சமுதாயத்துக்கும், சிறப்பாக நம் நாட்டிற்கும், அப்படியே பொருந்தும்.

மக்கள் பிரதிநிதிகள் 1946-ம் ஆண்டு அரசாங்கத்தை ஏற்றபோது எல்லாவித அதிகாரங்களையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆங்கில அதிகாரவர்க்க அமைப்பும், ஆட்சிமுறையும் அப்போது இருந்து வந்தன. அவற்றுக்குட்பட்டே மக்கள் அரசாங்கம் செயலாற்ற வேண்டியிருந்தது. அதன் பிறகு 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந் தேதியன்று இந்தியா சுதந்திரம் அடைந்ததும், அநேக புதிய பிரச்னைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டன. அவற்றை உடனடியாகத் தீர்ப்பதில் தங்கள் முழு கவனத்தையும் அரசாங்கம் செலுத்த வேண்டியதாயிற்று. இவை தவிர, இரண்டாவது மகா யுத்தத்தின் விளைவாக உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

மக்கள் அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளாக இத்தனை இடையூறுகளுக்கிடையேயும், பல்வேறு துறைகளிலே சிறந்த காரியங்களைச் சாதித்திருப்பதை, இது வரை கூறி வந்த விவரங்களால் அறியலாம். நிகழ்கால பிரச்னைகளைத் தீர்ப்பதோடு இந்த அரசாங்கம் நின்றுவிடவில்லை. எதிர்கால க்ஷேமத்துக்கு அவசியமான திட்டமொன்றை அவர்கள் திறம்பட வகுத்துள்ளனர். அதற்கு ஐந்தாண்டுத் திட்டம் என்று பெயர். இந்திய நாட்டின் எல்லாத்தேவைகளையும் சரிவர ஆராய்ந்து, அவற்றைப் படிப்படியாகத் தீர்க்க வழிகோலப்பட்டது. இங்குள்ள இயற்கைச் செல்வங்களையெல்லாம் நன்கு பயன்படுத்துவதற்கான வழி துறைகள் விவரிக்கப்பட்டன. சாகுபடியாகாமல் கிடக்கும் தரிசு நிலம், நிலத்துக்கடியிலுள்ள உலோகவகைகள், நதிகளில்

ஓடும் ஏராளமான நீர், சோம்பிக்கிடக்கும் அளவற்ற மனித சக்தி முதலியவற்றைத் தக்கவாறு உபயோகித்து, நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அகில இந்திய ரீதியில் தயாரான இத் திட்டம், நம்சென்னை ராஜ்யத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முனைகிறது. இதை நிறைவேற்ற ஐந்தாண்டுகளுக்கு 137 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப் பெற்றிருக்கிறது.

மக்கள் சர்க்கார் ஏற்படாததற்கு முன்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், கூட்டுறவு முதலிய தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10,61,84,000 ரூபாய் செலவிடப்பட்டு வந்தது. ஜனப்பிரதிநிதிகள் ஆட்சிவந்ததும், இந்தச் செலவு 42,22,50,000 ரூபாய் ஆயிற்று. எனவே, தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னை விட இப்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. இவற்றுள் முக்கியமாக, நீர்பாசனத்துறையிலே பிரமிக்கத்தக்க அபிவிருத்தி காணப்படுகிறது. 150 வருஷ ஆங்கில ஆட்சியில் சுமார் 18 கோடி ரூபாய் மாத்திரமே, இந்த ராஜ்யத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகச் செலவிட்டார்கள். ஆனல், கடந்த ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் இதற்காக மக்கள் சர்க்கார் செலவிட்டுள்ளனர். இந்த ஆண்டில்மட்டும் சுமார் 10 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள். இதன் விளைவாக, நாடெங்கும் அநேக நீர்ப்பாசனத்திட்ட வேலைகள் துரிதமாக நிறைவேறி வருகின்றன. சிறப்பாக, வறண்ட இடங்களிலும், ஜமீன், இனும் பிரதேசங்களிலும் இவை விசேஷமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தவிர, மற்ற ராஜ்யங்களோடு ஒத்திட்டுப்பார்த்தால் சென்னை ராஜ்யம் பலவகையிலும் முன்னேறியிருப்பது நன்கு விளங்கும்.

அஸ்ஸாம், கிழக்கு பஞ்சாப் ஆகியவை உள்பட எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய

வற்றிற்கு 32 கோடி ரூபாய் செலவிடுகின்றன. அவற்றுள் 13 கோடி ரூபாய் அதாவது மூன்றில் ஒரு பங்குக்குமேல், நம் ராஜ்யம் செலவழிக்கின்றது. பீஹார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய ராஜ்யங்கள் சேர்ந்து 11 கோடி ரூபாய் செலவழிக்கின்றன. இவை யெல்லாவற்றையும் விட இரண்டு கோடிக்கு மேலாக, நம் ராஜ்யம் ஒன்றே செலவிடுகிறது. உத்தரப் பிரதேசத்தை விட 3 மடங்கும், பீஹாரைவிட 6 மடங்கும், நம் ராஜ்யம் செலவிடுகின்றது. பம்பாய் ராஜ்யம் இந்த வகையில் செலவழிக்கும் ரூபாய் 3 கோடியேயாகும்.

நம் ராஜ்யத்தில் தேசீய அபிவிருத்திக்காகும் செலவில் சுமார் 50 சத விகிதம் நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றுக்கே செலவிடப்படுகிறது. இதற்காக வங்காளத்தில் 7 சத விகிதமும், பீஹாரில் 12 சத விகிதமும், பம்பாயில் 29 சத விகிதமும், மத்தியப் பிரதேசத்தில் 30 சத விகிதமும், ஒரிஸ்ஸாவில் 22 சத விகிதமும், உத்தரப் பிரதேசத்தில் 41 சத விகிதமும் செலவிடப்படுகின்றன.

அடுத்த ஐந்தாண்டுகளில் கீழ்க்காணும் முறையில் தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் செலவிடும் :—

	கோடி ரூபாய்.
1. நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்கள்	80·4
2. விவசாயம், கிராமாபிவிருத்தி ...	21·9
3. கைத்தொழில்கள்	2·1
4. ரஸ்தா அபிவிருத்தி	5·0
5. கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதிகள், பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் முதலான மற்ற சமூக நிர்மாண வேலைகள்	27·6
ஆக மொத்தம் ...	137·0

நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுக்காக எல்லா ராஜ்யங்களுக்குமாகச் சேர்ந்து மொத்தம் 191 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்துள்ளன. இதில் சென்னை ராஜ்யம் ஒன்றே 80 கோடி ரூபாய் செலவிடும். மற்ற ராஜ்யங்களெல்லாம் சேர்ந்து 111 கோடி செலவிடும். இதில், மற்றொரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. அதாவது அந்தந்த ராஜ்யங்கள் நிறைவேற்றும் திட்டங்கள் அல்லாமல், பொதுவாக சில பெரிய திட்டங்களை மத்திய சர்க்காரே நிறைவேற்ற முடிவு செய்துள்ளனர். அவற்றிற்காக 176 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்களால் பஞ்சாப், பீஹார் மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய ராஜ்யங்களுக்கே அதிகமான பலன் ஏற்படும். நம் ராஜ்யத்துக்கு அது போன்ற உதவி அதிகம் இல்லை.

செலவிடுவதில் மட்டும், நம் ராஜ்யம் முன்னணியில் நிற்கவில்லை. சிறந்த பலனைக் காண்பதிலும் அது முன் நிற்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் உத்தரப் பிரதேசம் 8,00,000 டன், பீகார் 8,74,000 டன், மேற்கு வங்காளம் 7,87,000 டன், பஞ்சாப் 6,50,000 டன், பம்பாய் 3,67,000 டன் தானியம் அதிகமாக உற்பத்தி செய்யும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை ராஜ்யம் 8,34,000 டன் உணவுப் பொருள் அதிகம் விளைவிக்கும். எனவே, பீஹாருக்கு அடுத்தபடியாக, அதிக உற்பத்தி செய்யும் ராஜ்யம் சென்னையேயாகும்.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின், ஒரு சிறப்பான அம்சம், அனுபவ சாத்தியமானதாக இருப்பதேயாகும். நாட்டின் எதிர் கால வாழ்வில் நோக்கங்கொண்ட அதே நேரத்தில், மக்களின் நிகழ் கால நிலையையும் சர்க்கார் மறக்கவில்லை. ஜனங்களுக்கு அதிக கஷ்டமின்றியே, இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியைச் சேகரிக்க உத்தேசித்துள்ளனர். பொதுஜன சுபிட்சத்துக்கான காரியங்களை உடனடியாகச் செய்தால் மக்கள் தாமாகவே மனமுவந்து அரசாங்கத்துக்கு அதிக வருமானம் அளிக்கத் தயங்கமாட்டார்கள் அல்லவா?

சர்க்கார் வருமான விவரம் வருமாறு :—

		கோடி ரூபாய்.
1.	நிலவரி மூலம் சுமார்	30
2.	அரசாங்கச் செலவில் சிக்கனம் செய்வது மூலம்	5
3.	டெபாசிட் செலவினால் மிகுதியாகும் தொகை	8
4.	அரசாங்கக் கடன் வசூல் மூலம் ...	17
5.	ரிசர்வ் நிதியிலிருந்து திருப்பிப் பெறும் வகையில்	27
6.	அதிகப்படி வரிவிதிப்பின் மூலம் ...	20
7.	மத்திய சர்க்காரிடமிருந்து மான்யம்	30
	ஆக மொத்தம் ...	137

முன்பெல்லாம் நாட்டில் அமைதி நிலைநிறுத்தும் பொறுப்பைமட்டுமே அரசாங்கம் வகித்து வந்தது. சுருங்கச் சொன்னால் அது போலீஸ் ராஜ்யமாக இருந்தது. ஆனால் இன்றோ மக்கள் சர்க்கார் பராமரிப்பு ஆட்சியை நடத்துகின்றனர். அதாவது, பொது ஜன சர்க்காரின் வருமானமும் செலவும், மக்களின் சமூக, கலாசார, பொருளாதார க்ஷேமத்தை லட்சியமாகக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. சர்க்கார் வசூலிக்கும் பணம் முழுவதும், மக்களின் பல்வேறு சௌகரியங்களுக்கே திரும்பி வருகிறது. அதற்காக பல்வேறு சமூக நல வேலைகளைத் துரிதமாக நிறைவேற்றவே சர்க்கார் முயன்று வருகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் சிறந்த அபிவிருத்தியை ஏற்படுத்திய மக்கள் சர்க்கார் அடுத்த ஐந்தாண்டுகளில் மேற்சொன்ன திட்டத்தை வெற்றியோடு நிறைவேற்றி, நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கி, பொது ஜனங்கள் சுபிட்சமாக வாழ வகை செய்வர் என்பதில் ஐயமில்லை.

முக்கியக் குறிப்புகள்

ஜில்லா தலைமை காரியாலயம்—கோயம்புத்தூர்.
ஜில்லாவின் விஸ்தீர்ணம்—7,121 சதுர மைல்.

தாலூகாக்கள்

கொள்ளேகாலம், பவானி, கோபிச்செட்டிபாளையம், ஈரோடு, அவிநாசி, கோயம்புத்தூர், பல்லடம், தாராபுரம், பொள்ளாச்சி, உடுமலைபேட்டை ஆக 10.

கிராமங்கள்—1,100.

ஜனத்தொகை

1951-ம் வருஷத்தில் ஆண்கள் 16,56,181.
ஷை பெண்கள் 16,38,668.
மொத்த ஜனத் தொகை 32,94,849.
1941-ம் வருஷத்திய ஜனத் தொகை 28,09,648.
பத்து வருஷத்தில் ஜனத் தொகை அதிகரிப்பு 4,85,201, அதாவது 17·3 சத விகிதம்.
ஓட்டர்கள்—14,65,741.

சட்டசபைத் தொகுதிகள்

ஒற்றை அங்கத்தினர் தொகுதிகள் 14.
இரட்டை அங்கத்தினர் தொகுதிகள் 3.
மொத்த ஸ்தானங்கள் 20.

முனிசிபாலிட்டிகள்

கோயம்புத்தூர், தாராபுரம், ஈரோடு, பொள்ளாச்சி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, மேட்டுப்பாளையம், கோபிச்செட்டிபாளையம் ஆக 8.

பஞ்சாயத்துக்கள்

பெரியது 23, சிறியது 236.

பிர்க்கா அபிவிருத்தி வட்டாரங்கள்

பல்லடம், அவிநாசி, திருப்பூர், வெள்ளக்கோயில்.

கல்லூரிகள்

கோயம்புத்தூர், பீளமேடு, பெரியநாய்க்கன்பாளையம்.

போதனா பயிற்சி பள்ளி

கோயம்புத்தூர், ஈரோடு, தாராபுரம்.

ஆதாரக் கல்வி பயிற்சி பள்ளி

அவிநாசி, பெரியநாய்க்கன்பாளையம்.

பல தொழில் பயிற்சி பள்ளி

கோயம்புத்தூர்.

நடுத்தரப் பள்ளிகள்

கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், மேட்டுப்பாளையம், ஈரோடு, பவானி, தாராபுரம், கொள்ளேகாலம், சத்தியமங்கலம், உடுமலைப்பேட்டை, பெருந்துறை, ஆண்டியூர், ஆனைமலை, பல்லடம், அவிநாசி, இடிகரை, காங்கேயம், ஆலூர், இருகூர், கவிண்டபாடி, நேசுமம், சித்தோடு, நம்பியூர், புஞ்சைப்புளியம்பட்டி, தொண்டமுத்தூர், வேட்டைக்காரன்புதூர், அன்னூர், காரமடை, சிவகிரி, விஞ்சனூர், உலகாடம், வால்பாறை, பெரியநாயக்கன்பாளையம், கோபிசெட்டிபாளையம், சென்னிமலை, கன்னியூர், ஆதிபாளையம், கொடுமுடி, குகலூ, பொங்கலூர், தேசாதிபதிபட்டணம், நாகூர், லக்ஷிமிநாய்க்கன்பாளையம், தாயம்பாளையம், கரத்துமடம்.

பெரிய தொழிற் சாலைகள்

பஞ்சாலைகள் 37, சர்க்கரை தொழிற்சாலை 1, சிறைத் தொழிற்சாலை 1, சர்க்கார் பட்டு தொழிற்சாலை 1, ரயில்வே தொழிற்சாலை 1, எஞ்சினியரிங் தொழிற்சாலைகள் 26, எண்ணெய் மில் 4, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் 4, சிமிண்டு தொழிற்சாலை 1.

வைத்திய சாலைகள்

கோயம்புத்தூர், தாராபுரம், ஈரோடு, கோபிசெட்டிபாளையம், கொள்ளேகாலம், பொள்ளாச்சி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, சித்தோடு, கணபதிபாளையம், குன்னத்தூர், பெருந்துறை, சிவகிரி, பவானி, மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம், வால்பாறை, வந்தியூர், அவிநாசி, கௌடஹல்லி, ஹானூர், காங்கேயம், கோட்டூர், பேடப்பம்பட்டி, பல்லடம், பொரசல் கவுண்டன்பாளையம், புஞ்சைபுளியம்பட்டி, சூலூர், தலவாடி, தொண்டமுத்தூர், ஊத்துக்குழி, வேட்டைக்காரன்புதூர், சிக்கரசலுபாளையம், காமக்கரை, ஒடையார்பாளையம், ராமபுரம், ராமசந்திரபுரம், விஜயமங்கலம், தேவாங்கபேட்டை.

விவசாய டிப்போ

அவனுசி (சேவூர் – அவனுசி ரோடு), பவானி (மெயின் ரோடு), கோயம்புத்தூர் (தேவாங்கம்பேட்டை), தாராபுரம் (தாலூகா ஆபீஸ் காம்பவுண்டு), ஈரோடு (கச்சேரி வீதி), கோபிசெட்டிபாளையம் (மொடச்சூர் ரோடு), கொள்ளேகாலம் (வட எக்ஸ்டன்ஷன்), பல்லடம் (கோயம்புத்தூர் ரோடு), பொள்ளாச்சி (பெருமாள் செட்டி தெரு), உடுமலைப்பேட்டை (நேரு தெரு).

மாதர் க்ஷேம நல நிலையங்கள்

கோயம்புத்தூர், பல்லடம், அவிநாசி.

விவசாய ஆராய்ச்சி சாலை

கோயம்புத்தூர், சத்தியமங்கலம்.

சென்னை சர்க்கார் மின்சார இலாகாவினால் மின்சாரம் விநியோகிக்கப்படும் நகரங்களும், கிராமங்களும்.

(*1950–51-ம் வருஷ முடிவு வரையில்*)

கோயம்புத்தூர் ஜில்லா

அவினாசி தாலூகா

அங்கேரிபாளையம், ஆண்டிபாளையம், அன்னூர், அவினாசி, அவினாசிபாளையம், அவினாசிலிங்கம்பாளையம், சிக்கடசம்பாளையம், சொக்கம்பாளையம், தாசம்பாளையம், காளிங்கராயன்பாளையம், கன்னார்பாளையம், கடத்தூர், காரமடை, கரும்பபாளையம், காட்டாம்பட்டி, கண்ணம்பாளையம், குப்பிபாளையம், கல்லார், மட்டம்பாளையம், மடத்துபாளையம், மங்களகாரிபுதூர், மாசகவுண்டன்பாளையம், மேட்டுபாளையம், மதியம்பாளையம், நம்பியம்பாளையம், நல்லித்தொறை, ஓடன்தொறை, பெருமா நல்லூர், பொன்னைகவுண்டன்புதூர், புனலூர், ராக்கியபாளையம், தெலுங்குபாளையம், திருமுருகன்பூண்டி, தேக்கம்பட்டி, தேமம்பாளையம், விருகபாளையம், வன்னிப்பாளையம், அக்கிரகாரப்புதூர், ரெங்கநாதபுரம், காசிகவுண்டன்புதூர், செம்மன்டம்பாளையம், வெள்ளாடி, புதூர், கெம்பநாயக்கன்பாளையம், அழகப்பகவுண்டன் புதூர், எல்லப்பாளையம், தேத்தம்பாளையம், வேலாயுதம்பாளையம், செம்பியநல்லூர், மருதை, ஆநந்தகிரி, கரவலூர், கவுண்டம்பாளையம், காளத்தியூர், கனியம்பாளையம், கனியம்பூண்டி, ஒரக்கல்பாளையம், பழங்கரை, புகலூர், ஆலம்பாளையம், ஆலங்காட்டுபுரம், கிட்டன்பாளையம், கானூர், கொமரபாளையம், கிருஷ்ணாபுரம், மாரணகவுண்டன்புதூர், மேட்டுப்பாளையம், நரியம்பள்ளி, ஒண்ணிப்பாளையம், பில்லியப்பன்பாளையம், ராமநாதபுரம், சாமநாயக்கன்பாளையம், தோட்டக்காலம்புதூர், விரபாண்டி, சிக்காரம்பாளையம்.

கோயம்புத்தூர் தாலூகா

அக்ரகாரசாமக்குளம், அத்திபாளையம், போடிபாளையம், செட்டிபாளையம், சித்திரைசாவடி, கணபதி, கோவிந்த நாயக்கன் பாளையம், இடிகரை, கலபட்டி, கள்ளிமடை, காடன் கவுண்டன்சாலை, கிரநத்தம், கொண்டயம்பாளையம், கிருஷ்ணராயபுரம், குனியமுத்தூர், குறிச்சி, குருதம்பாளையம், மச்சம்பாளையம், மதுக்கரை, மணியக்காரன்பாளையம், நரசிம்மநாயக்கன்பாளையம் புதூர், நஞ்சுண்டபுரம், நீலிக்கோணம்பாளையம், ஒண்டிப்புதூர், ஒண்ணிப்பாளையம், பாலத்துறை, பாப்பநாயகன்பாளையம், பன்னிமடை, பெரியநாயகன்பாளையம், பேரூர், பேரூர்செட்டிபாளையம், போத்தனூர், புதுப்பாளையம், சாமக்குளம், சரவணம்பட்டி, சர்க்கார் சாமக்குளம், சவுரிபாளையம், தெட்டிபாளையம், தொண்டமுத்தூர், துடியலூர், உடையாம்பாளையம், வடமதுரை, வேலங்குறிச்சி, வெள்ளலூர், வெள்ளைக்கிணறு, வெள்ளமடை, விரபாண்டி, விரகேரளம், வெங்கிடபுரம், வியாம்பாளையம், புதூர், பீளமேடு, கூடலூர், செங்கலிபாளையம், சின்னவடம்பட்டி,

மேற்கு சித்திரை சாவடி, அம்பிலி புதூர். இடையபாளையம், குறும்பனூர், குமாரபாளையம், குப்பனூர், காளிகா நாயகன் பாளையம், குப்பகோணம்புதூர், பச்சபாளையம், பள்ளபாளையம், செங்கனூர், சித்தநாயகன்பாளையம், செங்கோடகவுண்டன் புதூர், தட்டான் புதூர், ஆதிநாராயணபுரம், சின்னமேட்டுபாளையம், புலிக்குளம், ராமநாதபுரம், ஆறுமுக கவுண்டன் புதூர், ராம செட்டி பாளையம், வடவள்ளி, திருமலையம்பாளையம், சென்னிபாளையம், கருமாதம்பட்டி, ஆர். என். புரம், பட்டணம், சாமி செட்டி பாளையம், ஜெங்கம் நாயகன் பாளையம், தோப்பம்பட்டி. ஆத்துமுண்ட தோட்டம், சுக்கிரவார பாளையம், தென்கரை, நடுப்பாளையம், பெரிய புதூர், ரெங்கப்ப கவுண்டன் புதூர், அய்யம்பாளையம், குறும்ப பாளையம், புளியங்குளம், மச்சம் பாளையம், வேதப்பட்டி, வெள்ளானைபட்டி, கைக்கொளபாளையம், வெரியம்பாளையம், கரதயம்பாளையம், மட்டபாளையம், ஈச்சனேரி, ஆலந்துறை, தேவிநாயகன் பாளையம், கள்ளிபாளையம், நாயக்கன்பாளையம், எட்டிமடை, தேவராயபுரம், சிரிப்பாளையம், சாவடிப் புதூர், தொம்பிலிபாளையம், இடையர்பாளையம், மாலமச்சம்பட்டி, பரமேஸ்வரன்பாளையம். ராக்கியாபாளையம், தென்னம்மநல்லூர், வள்ளியம்பாளையம்.]

தாராபுரம் தாலூகா

தளவாய்பட்டணம், பெரியகுமாரபாளையம்.

ஈரோடு தாலூகா

சென்னிமலை, செங்கபள்ளி, இருகூர், குன்னத்தூர், பெருந்துறை, ரெட்டுபாளையம், தலப்பட்டி, ஊத்துக்குழி, விருமாண்டம்பாளையம், கவதம்பாளையம், முகசிபிடாரியூர், சுன்னகருப்பன் பாளையம், செங்காலிப்பாளையம், சுந்தகம்பாளையம், திருவேங்கிடம்பாளையம், வெள்ளகோயில்.

கோபிச்செட்டிபாளையம் தாலூகா

கோபிச்செட்டிபாளையம், கோலப்பலூர், சிருவலூர், மாணிக்கம்பாளையம், சாந்தபாளையம், மொடச்சூர், பரிலூர், செட்டிச்செய்யூர், சித்தாண்டிபாளையம், காட்டுப்பாளையம்.

பல்லடம் தாலூகா

அனுப்பபாளையம், அப்பாநாயகன்பட்டி, ஆரசூர், ஆறுமுகம்பாளையம், ஆத்தப்ப கவுண்டன் புதூர், ஆதிநாராயணபுரம், பொம்மைகவுண்டன்பட்டி, சந்திர காவி, சின்ன வடுக பாளையம், சின்னய கவுண்டன் வலசு, இருகூர், கல்லப்பாளையம், கள்ளிகா நாயகன்பாளையம், கனியூர், கண்ணம்பாளையம், கரடிபாவி, காரவேலி மடபூர், கொசவம்பாளையம், மரியநல்லூர், மயிலம்பட்டி, முதலிபாளையம், மங்களம் வஞ்சி பாளையம், நீலாம்பூர், நாணக்காடு, ஒட்டர்பாளையம், பல்லடம், பாப்பம்பட்டி, பட்டணம், பீடம்பள்ளி, பரமசிவம்பாளையம், பெருமனூர், ராசிபாளையம், ராவத்தூர், சமலாபுரம், செங்கோடகவுண்டன் புதூர், சோமனூர், சூலூர், தோட்டிபாளையம், ஊத்துபாளையம்,

கணபதிபாளையம், இச்சிப்பட்டி, கலங்கை, கோம்பக்காடு, நாரணபுரம், புருவை, ரங்கசமுத்திரம், சமலாபுரம், சேலப்பம்பாளையம், வடுகம் பாளையம், வேலயம்பாளையம், வேலம்பாளையம், சேலக்கரைச்சல், செம்பிபாளையம், சுக்கம்பாளையம், மல்லே கவுண்டன் பாளையம், சிற்றம்பலம், அரித்துப்பாளையம், சிற்றம்பலம்புதூர், கருணம்பேட்டை, உஞ்சப்பாளையம், கடம்பாடி புதூர், புல்லபாளையம், புளியம்பட்டி, மன்னுரை, நல்லூர், அனுபட்டி. பொள்ளிக் கள்ளிப்பாளையம், கோடம்பாடி, கோடாங்கிபாளையம், ஜி. என். பாளையம், சென்னப்ப செட்டி புதூர், அக்ரகார புதூர், அம்மாபாளையம், காரைபுதூர், கிருஷ்ணுபுதூர், லக்ஷிமி நாயகன்பாளையம், மலைக்கோயில், முத்து நாயகன்பாளையம், முத்து கவுண்டன் புதூர், ராம நாயகன்பாளையம்.

பொள்ளாச்சி தாலூகா

ஆச்சிபட்டி, அங்கலகுறிச்சி, அம்பாரம்பாளையம், சித்தூர், இரிசிணம்பட்டி, கோமங்கலம் புதூர், ஐயர்பாடி, காளியாபுரம், கிணத்துக் கடவு, கோயில்பாளையம், கோட்டம்பட்டி, கோட்டூர், ஜக்கர்பாளையம், லக்ஷ்மணபுரம், மெய்கினம்பட்டி, மல்லம்பாறை, மலையாண்டி பட்டணம், முத்தூர், ஒத்தைக்கல் மண்டபம், ஒக்கிலிபாளையம், பெரிய நாகமம், பொன்னபுரம், சமத்தூர், சேதுமடை, சிங்கநல்லூர், சோழாலம்பாளையம், சுப்பைய கவுண்டன் புதூர், வால்பாறை, வேட்டைக் காரன் புதூர், முல்லப்பாடி, ரமண முதலி புதூர், காமாட்சிபுரம், கஞ்சம் பட்டி, பில்லிச்சின்னம்பாளையம், அகிலாண்டபுரம், பழனி கவுண்டன் புதூர், சிங்காரம்பாளையம், தாத்த ராவுத்தன் புதூர், தென்சங்கம் பாளையம்.

உடுமலைப்பேட்டை தாலூகா

ஆனைக்கடவு, ஆதிவெள்ளி, ஆலம்பாளையம், ஆண்டியூர், போடி நத்தம், போடிபட்டி, சின்னக் குமாரபாளையம், சின்னவளவவாடி, தரளைகுடிமங்கலம், குருவப்ப நாயகனூர், இலுப்பண நகரம், ஜெல்லி பட்டி, குளிப்பாளையம், கனியூர், காரத்தொழுவு, கடத்தூர், கோனுமம், கொமரலிங்கம், மானுப்பட்டி, முருங்கபட்டி, நல்லம்பள்ளி, பெத்தம் பள்ளி, பெரியபட்டி, பெரியவளவாடி, பூக்குளம், பொட்டயம்பாளையம், ராகப்பாவி, செஞ்சுலாடி, குந்தக்கம்பாளையம், உடுக்கம்பாளையம், வசைபட்டி, விருகல்பட்டி புதூர், கல்லபாளையம், ரங்கம்பாளையம், ராமசந்திரபுரம், முத்து நாயக்கன்பட்டி, நஞ்ச கவுண்டன் புதூர், அம்மாபட்டி, மருள்பட்டி, சடைய கவுண்டன் புதூர்.

கொள்ளேகாலம் தாலூகா

கொள்ளேகாலம், முடிகொண்டான்.

மேட்டூர் மின்சார விநியோகம்

ஈரோடு தாலூகா

சித்தோடு, இடையன்காட்டு வலசு, கோமளம்பரப்பு, கொடுமுடி, வைரவன்பாளையம். வீரப்பன் சத்திரம், குந்தகலபாளையம், நத்தமேடு, புதூர் சூரியம்பாளையம், பெரியசேமூர்.

பவானி தாலூகா

அம்மாபேட்டை, அந்தியூர், பவானி, ஜம்பை, கல்வாவி. கேசரி மங்கலம், நெறிஞ்சிப்பேட்டை, ஒலகாடம். புதுப்பாளையம், சிங்கம் பேட்டை, தலப்பாளையம், திப்பிசெட்டிபாளையம், தோட்டிபாளையம், உரச்சிக்கோட்டை, அப்பாக்குடல், மொண்டிப்பாளையம், ஓரிச்சேரி, பருவச்சி, பெருமாபாளையம், கொண்டயம்பாளையம், வெள்ளி திருப்பூர், அத்தாணி, மிக்கேல் பாளையம், மாணிக்கம்பாளையம், பெரியவடமலை பாளையம், ராமலிங்கபுரம், ஆண்டிபாளையம், காளிங்கராயன் பாளையம், வடநல்லூர், புன்னம்.

லைசென்ஸ்தார்களிடமிருந்து மின்சார விநியோகம்

கோயம்புத்தூர், தாராபுரம் டவுன், கொளிஞ்சிவாடி, நஞ்சம் பாளையம், சித்திரத்தான்பாளையம், உப்புத்துறைபாளையம், பொன் ளரச்சி, வடுகபாளைய கிராமங்கள், திருப்பூர், உடுமலைப்பேட்டை.

அபிவிருத்திப் பட்டியல்

விவசாயம்

ஜில்லாவிலுள்ள நிலம்	45,51,876	ஏக்கர்.
சாகுபடியிலுள்ளது	17,88,843	,,
நன்செய்	5,36,787	,,

கிணற்றுப் பாசனம் 4 லட்சம் ஏக்கருக்கு அதிகம்.

10 சென்டு நிலத்தில் 35 பவுண்டு நெல் விதையை விதைத்து அந்த நாற்று ஒரு ஏக்கர் நன்செய்யில் நடப்படுகிறது. இந்த முறையை அனுஷ்டிப்பது மூலம் சென்ற நான்கு வருஷங்களில் 1,500 டன் விதைகள் மீதம். விவசாயிகளுக்கு மூன்று லட்ச ரூபாய் லாபம்.

கிணறு வெட்ட மானியம்

1946-47-ம் வருஷத்தில்	... ...	7,68,900	ரூபாய்.
1947-48	ஷை	9,38,700	,,
1948-49	ஷை	8,00,000	,,
1949-50	ஷை	......	

தக்காவிகடன்

1946-47-ம் வருஷத்தில்	... ...	1,92,045	ரூபாய்.
1947-48	ஷை	89,720	,,
1948-49	ஷை	2,32,875	,,
1949-50	ஷை	5,09,930	,,
1950-51	ஷை	28,63,040	,,

சென்ற நான்கு ஆண்டுகளில் அதிக சாகுபடி

அபிவிருத்தி நெல் விதை விளியோகம்.	1,300	டன்.
அது பயிரிடப்பட்டது	70,000	ஏக்கர்.
அதிக உற்பத்தி	3,500	டன்.
ராகி சாகுபடி	20,000	ஏக்கர்.
சோளம்	17,000	,,
வேர்க்கடலை	10,000	,,
கரும்பு	10,800	,,
பருத்தி	1,40,000	,,
சின்கோனு	9,430	,,
புகையிலை	27,900	,,
தேயிலை	34,770	,,
காப்பி	2,388	,,

நீர்ப்பாசனத் திட்டங்கள்

பவானி சர்க்கார்ப் பயனடையும் விஸ்தீர்ணம்	2,07,000	ஏக்கர்.
மேட்டூர் கல்வாய்	18.000	,,
ஷை சேலம் ஜில்லாவும் சேர்ந்து.	45,000	,,
அமராவதி நீர்த் தேக்கம்	15,000	,,
நிலம்பூர் குளமராமத்து	366	,,

ஜமீன் பிரதேசம்

இந்த ஜில்லாவில் மொத்தம் 9 ஜமீன்தாரிகள்தான் இருந்தன.

மின்சாரம்

பவானி, ஈரோடு தாலூகாக்களில் மேட்டூர் மின்சாரமும் இதர தாலூகாக்களில் பைக்காரா மின்சாரமும் வினியோகிக்கப்படுகிறது.

சென்ற ஐந்து ஆண்டுகளில் புதிதாய் மின்சாரம் வினியோகிக்கப்பட்ட கிராமங்கள்	200
விவசாயத்துக்கு உபயோகப்படும் மின்சாரப் பம்புகள்	3,000
மின்சாரம் பெறும் கைத்தொழில் ஸ்தாபனங்கள்	250
மின்சாரம் பெறும் வீடுகள்	7,100

ரஸ்தா போக்குவரத்து

ஜில்லாவிலுள்ள ரஸ்தாக்கள் நீளம் ...	3,500	மைல்.
சென்ற ஐந்து ஆண்டுகளில் தார் போடப்பட்டவை	60	,,
சென்ற ஐந்து ஆண்டுகளில் சிமிண்டு போடப்பட்டவை	10	,,
சென்ற ஐந்து ஆண்டுகளில் கப்பி போடப்பட்டவை	40	,,
சென்ற ஐந்து ஆண்டுகளில் புதிதாய் போடப்பட்டவை	20	,,
ஜில்லாவிலுள்ள இருப்புப் பாதை ...	151	,,

கல்வி

ஜில்லாவிலுள்ள உயர்தரக் கல்வி கல்லூரி	3
தொழில் நுணுக்கப் பயிற்சிக் கல்லூரி...	1
ஆசிரியர் பயிற்சி கல்லூரி	1
விவசாயக் கல்லூரி	1
வன வளக் கல்லூரி	1
நடுத்தரக் கல்வி பள்ளிகள்	67
கட்டாயக் கல்வி முறை வட்டாரங்கள்.	73
முதியோர் கல்விச் சாலைகள்	38

வைத்திய வசதி

ஜில்லாவிலுள்ள மொத்த ஆஸ்பத்திரிகள்	53

சென்ற ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகள்.

ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் பிரசவ படுக்கை வசதிகளை அதிகப்படுத்தியிருக்கிறார்கள்.

அங்கு க்ஷயரோக நிவாரண பகுதி ...	1
பெண்கள் ஆஸ்பத்திரி	1

உடுமலைப்பேட்டை ஆஸ்பத்திரியில் பெண்கள் வார்டு	1	
கோபிச்செட்டிபாளையம் ஆஸ்பத்திரிக்கு மின்சார வசதி.		
ஈரோடு ஆஸ்பத்திரிக்கு புது கட்டிடம்.		
ஜில்லாவிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு வருஷ பராமரிப்புச் செலவு	11,00,000	ரூபாய்.

கூட்டுறவு

ஜில்லாவிலுள்ள கிராம நாணய சங்கங்கள்	412
நெசவாளர் சங்கங்கள்	39
பால் சங்கங்கள்	8
குடியேற்ற கூட்டுறவு சங்கங்கள் ...	3
வீடுகட்ட உதவும் சங்கங்கள் ...	5
பொருள் விற்பனை சங்கங்கள் ...	3
வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள்.	187

பெரிய தொழில்கள்

பஞ்சாலைகள்	37
அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள்.	30,000-க்கு மேல
தேயிலை, காப்பி, ஏலம், சின்கோனு முதலிய தோட்டத் தொழிலாளர்கள் ...	30,000
சின்கோனு மட்டும் சர்க்கார் தோட்டம். இங்கு வேலை செய்யும் தொழிலாளர்.	3,000

ஹரிஜன முன்னேற்றம்

வீட்டு வசதி செய்யப்பட்டிருக்கும் குடும்பங்கள்	200
மாதர் நல கிளைகள்	3

நம் சுதந்திர சாசனம்

இந்திய அரசியலமைப்பின் பாயிரம் (பீடிகை)

"இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு சம்பூர்ண அதிகார ஜனநாயகக் குடியரசாக அமைத்து, அதன் குடிகள் அனைவருக்கும் :

சமூகம், பொருளாதாரம், ராஜீயம்—ஆகியவற்றில் நீதியும்,

எண்ணம், வெளியீடு, கோட்பாடு, மதம், வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும்,

அந்தஸ்து, வாய்ப்பு ஆகியவற்றில் சமத்துவமும், கிடைக்குமாறு செய்யவும்,

தனியொருவரின் கண்ணியமும், தேச சமுதாயத்தின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடமும் சகோதரத்துவம் ஓங்குமாறு செய்யவும், மனப்பூர்வமாகச் சங்கற்பம் செய்துகொண்டமையால், நமது அரசியல் நிர்ணய சபையிலே 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் இருபத்தாறும் தேதியாகிய இன்று, இதனால் இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு, சட்டம் இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்."

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.


கோயம்புத்தூர் ஜில்லா
ஓர் அங்குலம் = 16 மைல்
குறிப்பு
ஜில்லா தலைநகர்
தாலூகா தலைநகர்
முக்கிய கிராமங்கள்
ஜில்லா எல்லை
தாலூகா எல்லை
முக்கியசாலைகள்
இருப்புப்பாதை
நதிகள்
விவசாய ஆராய்ச்சி நிலையம்
கல்லூரி
நடுத்தரப் பாடசாலை
வைத்தியசாலை
கிராம அபிவிருத்தி
கைத்தொழில் பயிற்சி
தொழிற்சாலை
கொள்ளேகாலம்
காவேரி நதி
பவானி நதி
அமராவதி நதி
நொய்யல் நதி
சத்தியமங்கலம்
கோபிசெட்டிபாளையம்
தலமலை
பவானிசாகரம்
பவானி
ஈரோடு
பெருந்துறை
சென்னிமலை
காங்கேயம்
வெள்ளக்கோயில்
தாராபுரம்
திருப்பூர்
அவினாசி
பல்லடம்
கோயம்புத்தூர்
மேட்டுப்பாளையம்
காரமடை
பெரியநாயக்கன்பாளையம்
பொள்ளாச்சி
உடுமலைப்பேட்டை
ஆனைமலை
வால்பாறை
கொடுமுடி
சிவகிரி
பேரூர்
மதுக்கரை
கொச்சி
திருவாங்கூர்
திருச்சிராப்பள்ளி
மதுரை
சேலம்
மைசூர்
நீலகிரி
மலபார்